சிவஞான முனிவரின்
அந்தாதி இலக்கியங்கள்



சித்தாந்தச் செம்மணி
முனைவர் பழ. முத்தப்பன்

சிவஞான முனிவரின்
அந்தாதி இலக்கியங்கள்

டாக்டர் பழ. முத்தப்பன்

உமா பதிப்பகம்

உமா பதிப்பகம்
171 / 18, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 2521 5363, 2525 0092

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள்
ஆசிரியர்	:	டாக்டர் பழ. முத்தப்பன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதற் பதிப்பு - செப்டம்பர், 2011
வடிவமைப்பு	:	© உமா பதிப்பகம்
தாள்	:	J.K. மேப்லித்தோ 16 கி.கி.
நூல் அளவு	:	14 x 22 செ.மீ. டெம்மி
எழுத்து	:	11 புள்ளிகள்
பக்கங்கள்	:	128
பைண்டிங்	:	சாதாரண கட்டு
விலை	:	ரூ. 60.00
ஒளி அச்சு	:	சு. அசோக்குமார் சென்னை -600 080.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்
தொலைபேசி எண்: 04364 - 232021

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

நாள் 22.3.2011

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

அருள் வாழ்த்துரை

'கடியார் இதழிச் சடைமுடியும் கண்கள் மூன்றும் குறுநகையும்
வடியார் சூலத் தனிப்படையும் வரைநேர் புயங்கள் ஒருநான்கும்
பொடியார் நுதலுந் திருமுகத்தின் பொலிவுங் காட்டி உளம்புகுந்தான்
அடியார் வழுத்தத் திருக்குளத்தூர் அமருங் கருணைப் பெருமானே'

- குளத்தூர் பதிற்றுப்பத்து அந்தாதி

'சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள்' என்ற தமது ஆய்வு நூலினை முனைவர் பழ.முத்தப்பன் அவர்கள் மீண்டும் வெளியிட உள்ளமை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்நூலில் திருவாளர் பழ. முத்தப்பன் அவர்கள் நமது மாதவச் சிவஞான சுவாமிகள் அவர்களின் சைவத் தமிழ் இலக்கியப் பணிகளைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். சிவஞான சுவாமிகளின் தனிச்சிறப்பு வாய்ந்த தமிழ்நடை குறித்தும், தத்துவச் செய்திகளைச் சுவைபடவும், உள்ளத்தில் விழிப்புணர்வு தோன்றும் முறையிலும் எடுத்துரைக்கும் திறன் பற்றியும் நன்கு விளக்கியுள்ளார்.

இளசை, கலைசை, குளத்தூர் ஆகிய மூன்று தலங்கள்மீது பாடப்பெற்ற பதிற்றுப்பத்து அந்தாதிகளையும், வட திருமுல்லைவாயில் அந்தாதி, திருவேகம்பர் அந்தாதி ஆகிய அந்தாதிகளையும் அவற்றின் சிறப்புகள் விளங்குமாறு ஆய்வு செய்துள்ளார் நூலாசிரியர். சிவஞான சுவாமிகளின் இலக்கியங்களைப் போல இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டுமெனில் அச்செயல் அவர்களைப் போன்ற

அருளாளர்களுக்கே கைகூடுவது. ஆயினும் இக்காலப் புலவர்களும் 'அந்தாதி' போன்ற மரபுசார்ந்த இலக்கியங்களைப் படைப்பதில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும் என்று நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளது புலவர் உலகம் போற்றிக் கைக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

மாதவ சிவஞான யோகிகள் உயர்ஞான நிலையில் நின்றவர் என்ற உண்மையை உணரத்தக்க அகச்சான்றுகளை இத்தகைய இலக்கியங்களில் ஆங்காங்கு காணலாம். நம் யோகிகள் நின்மலதுரியாத்தமாகிய முத்திப் பெருநிலையினைத் திருவருளால் எய்தியவர் என்னும் உண்மையினை,

'என்னையும் உனையுங் காட்டா(து) என்னுளே அன்றுதொட்டு(த்)
துன்னிய மலவீரத்தின் தொடக்கறுத்(து) அறிவு காட்டிப்
பன்னிருந் துரியா தீதப் பராபர நிலையிற் சேர்த்தாய்
அந்நிலை பிறழா வண்ணம் அளித்தருள் கலைசை வாழ்வே'

(பாடல்-60)

என்னும் கலைசைப் பதிற்றுப்பத்து அந்தாதி திருப்பாடலால் உணரலாம்.

இத்தகைய அருஞ்சிறப்புக்குரிய மாதவச் சிவஞான யோகிகளின் அந்தாதி இலக்கியங்களை நன்முறையில் ஆய்வு செய்து பொதுவாகத் தமிழுலகிற்கும், சிறப்பாகச் சைவ உலகிற்கும் பெரும்பயன் சேர்த்துள்ள நூலாசிரியரின் பணி பாராட்டத்தக்கது.

நூலாசிரியர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களின் சைவப்பணிகள் மேன்மேலும் தழைத்துச் சிறக்க வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை

பதிப்புரை

நற்றமிழ்க் களஞ்சியத்தில் நவரத்திரனங்களாக விளங்குவன சிற்றிலக்கியங்களாகும். அச்சிற்றிலக்கிய வகைகளை அறிந்து அனுபவிக்கும் பேறு தமிழ்க் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் பணியால் கிடைத்தது. சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் எண்பதுகளில் ஆய்வு மாணவனாகப் பயின்ற காலத்தில் அதன் இயக்குநராகத் திகழ்ந்த எம் மதிப்புக்குரிய பேராசிரியப் பெருந்தகை உயர்திரு. முனைவர் ச.வே. சுப்பிரமணியனார் அவர்கள் எம் சிற்றிலக்கியப் பயிற்சியை வளர்க்கும் வண்ணம் சிந்து இலக்கியம், கோவை இலக்கியம் உள்ளிட்ட இலக்கியங்களை ஆய்வு செய்து நூல்களாக வரச்செய்தார்கள். அந்த வரிசையில் சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்களை 1987இல் அறக்கட்டளைச் சொற்பொழிவாக நிகழ்த்தச் செய்து அதே நாளில் நூலாகவும் வரச் செய்தார்கள். உலகத் தமிழ் கல்வி இயக்ககத்தின் சார்பில் விக்கிரமசிங்கபுரத்தில் நடைபெற்ற சிவஞான முனிவர் திருநாளில் (6.5.1987) நூலை வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். தமிழ்க் கல்லூரிப் பணிகளிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு சைவ சித்தாந்த சாத்திரங்களில் முழு நேரச் சிந்தனையை மேற்கொண்ட இக்காலத்தில் சிவஞான முனிவரின் நுண்மாண் நுழைபுலம் உள்ளத்தை ஈர்த்தது. திருவருளாலும் குருவருளாலும் அண்மைக் காலமாகத் திருவாவடுதுறை இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் அவர்களின் அருட்கண் பார்வை கிடைத்திருப்பதால் சித்தாந்த ஆசிரியராக விளங்கும் பேறு கிடைத்துள்ளது. இதன் அடிப்படையில் சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்களை மீள் பார்வை கொள்ள முடிந்தது. அதன் விளைவே திருத்தம் செய்யப்பெற்ற இப்பதிப்பு.

சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்களைப் பேச வைத்தும், நூல் வடிவாக்கியும் எமை வளர்த்த பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியனார் அவர்கள் இப்பதிப்பிற்கு அனுமதி அளித்து வாழ்த்தி அருளியுள்ளார்கள். என் வளர்ச்சியில் பெரிதும் நாட்டம் கொண்ட அப்பேராசிரியப் பெருந்தகையின் திருவடிகளுக்கு என் பணிவு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பதிப்பிற்கு ஆசியுரை வழங்கி அருளியுள்ள திருவாவடுதுறை ஆதீனம் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருளுக்கும் எம் நன்றியைக் காணிக்கையாக்கி மகிழ்கிறேன். வழக்கம்போல் எம் எழுத்துக்களை அச்சு வடிவாக்கும் உமா பதிப்பக உரிமையாளர் சகோதரர் இராம. இலட்சுமணன் அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றி என்றும் உரியதாகும். எம் எழுத்துக்களைக் கணினி வடிவாக்கும் எம் அன்புத் துணைவி மு.அழகம்மை அவர்களுக்கும் உடனிருந்து உதவும் எம் அன்புத் திருமைந்தன் முனைவர் மு. பழனியப்பன் அவர்களுக்கும் வாழ்த்தும் நன்றியும் உடையதாகும்.

- முனைவர் பழ. முத்தப்பன்

6, அன்னை சாரதா நகர்,
சோமரசம்பேட்டை, திருச்சி - 102.

பொருளடக்கம்

பக்கம்

1. இலக்கிய வகையில் அந்தாதி 7

2. சிவஞான முனிவரின் இலக்கியப்பணி 59

3. சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள் அறிமுகம் 79

4. அந்தாதி இலக்கியக் கொள்கை 88

5. அந்தாதி நூல்களில் தத்துவக் கருத்துக்கள் 115

1

இலக்கிய வகையில் அந்தாதி

இலக்கியம்

ஐம்புலன்களின் வாயிலாகக் கலைஞர்கள் பெறும் உணர்வுகளும், உய்த்துணரும் இன்பங்களும் படைக்கப்படும் பொழுது இலக்கியங்கள் உருவாகின்றன. அவ்விலக்கியங்களும் உணர்ச்சியின் வெளிப்பாடாக மட்டும் அமையாத அறிவியலின் புலப்பாடாகவும், அறநிலையின் அமைவாகவும் படைக்கப்படுவதால் அப்படைப்புகள் அழகும் நிறைவும் பெற்றதாய் விளங்குகின்றன. படைப்பாளர்களின் இதயமும், அறிவும் இணைவதால் உருவாகும் அப்படைப்புகள் சமுதாய வாழ்விற்குப் பயன்படும் பொழுது அல்லது எடுத்துக் காட்டாக விளங்கும்பொழுது அழகு பெற்று விளங்கிய அவ் இலக்கியங்கள் பயன் இலக்கியங்களாக மாறுகின்றன. எனவே படைக்கப் பெற்ற இலக்கியங்கள் அழகும், பயனும் உடையதாய், மானிட வாழ்வியலில் உலா வரும்பொழுது அவை தெய்வீக நிலையை அடைகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாகச் சமய இலக்கியங்களின் தெய்வ வழிபாட்டை இங்கு குறிப்பிடலாம். பைபிளும், குரானும், திருமுறைகளும், நாலாயிரமும் இறைமையாகப் போற்றப்படுவது இங்கு எண்ணுதற்குரித்து.

கால வளர்ச்சியில் அழகும், அறிவும் பெற்ற இலக்கியங்கள் சமுதாயத்தில் அறிவியல் ஆக்கத்திற்கு மட்டும் பயன்படாமல் பொழுது போக்குக் கருவிகளாகவும் பயன்படத் தொடங்கின.

பிற பொழுது போக்குக் கருவிகள் வயது அடிப்படையிலும், பருவ அடிப்படையிலும் பயன்பட இலக்கியக் கருவி அவ்விரண்டிற்கும் அப்பாற்பட்டு அனைத்துப் பருவத்திற்கும் உரியதாக விளங்கிற்று. பொழுது போக்குக் கருவியாக விளங்கிய இலக்கியங்கள் காலப் போக்கில் வளர்ந்து நாகரீகக் கலப்புகளுக்குப் பாலமாக அமைந்தன. அறிவியல் சாதனங்களால் உலக மக்களிடையே நெருக்கங்கள் அதிகமானபொழுது இலக்கியப் பாலங்களால் நாகரீகக் கலப்பிற்குப் பாலங்களாக அமைந்த இலக்கியங்கள் அறியாத படைப்பாளியைத் தெரியாத நாட்டை அறிந்து கொள்வதற்குப் பயன்படும் காலக் கண்ணாடியாகக் காலப்போக்கில் அமைந்தன. ஆம். இந்த வகையில் துணை புரிவன மொழி பெயர்ப்பியல் இலக்கியங்கள் ஆகும். இவ்வாறு கலைஞனின் உணர்வை வெளிப்படுத்த எழுந்த இலக்கியங்கள் இறைமையாய், பொழுது போக்குச் சாதனமாய், நல்லதொரு பாலமாய் அறியாதனவற்றை அறிவிக்கும் கண்ணாடியாய்ப் பூத்துக் குலுங்கி மிளிர்கின்றன.

இலக்கியங்கள் ஆற்றலைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "உலக வரலாற்றை மாற்றி அமைப்பதில் இலக்கியம் ஆற்றல் மிக்கது என்பர். ஏனெனில் அறிவுத் துறைகள் மனிதனின் மூளைக்கு மட்டும் எட்டி இயங்குகின்றன. ஆனால் உணர்ச்சிக்கு வடிவங்களான இலக்கியத் துறைகள் மூளையை மட்டும் அல்லாமல் மனத்தால் வாழும் வாழ்வு முழுமையும் இயக்குவன" எனக் குறிப்பர்.[1] இலக்கியங்களின் தன்மை பற்றிக் குறிப்பிடும் பொழுது "உயர் இலக்கியங்கள் ஒரு மொழியின் அழியாச் செல்வங்கள் ஆகும். இவை தாம் தோன்றிய காலத்தில் மட்டுமன்றி எல்லாக் காலத்திலும் பயன் அளித்தலால் நிலை பேறுடையனவாக விளங்குகின்றன. காலம், மொழி, இனம் எனும் எல்லைகளையும், தடைகளையும் கடந்து பரந்து பயிலப்படுகின்றன. பொழுதுபோக்கு இன்பம் அளிப்பதாக மட்டுமின்றி, மீண்டும் மீண்டும் கற்கத் தூண்டும் கலை நிரம்பியதாகவும், நினைக்குந்தோறும் மனத்தை நிறைக்கும் வற்றா இன்ப ஊற்றை அளிப்பதாகவும் விளங்குகின்றன. இவ்வியல்புகளால்தான் "நவில்தொறும் நூல் நயம்" எனப் பெருமையும் பெறுகின்றன" எனக் குறிப்பர்.[2]

தமிழ் இலக்கியம்

"பள்ளிகூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தி
தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு
மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்"[3]

எனப் பாராட்டப் படுவதற்கு ஏற்ப இயல், இசை, நாடகம் என்ற முப்பிரிவில் தமிழ்நங்கை எண்ணிலடங்கா இலக்கியங்களைப் பெற்று விளங்குகிறாள். தமிழ்மொழியின் தோற்றத்தை வரையறுத்துக் கூற இயலாதது போலத் தமிழ் இலக்கியங்களின் தோற்றத்தையும் வரையறுத்துக் கூற இயலாது. அதே நேரத்தில் தமிழ் இலக்கியத்தொன்மை பற்றி நாம் ஐயுறவும் வேண்டியதில்லை. தமிழ் மொழியை எகிப்திய மொழியோடு தொடர்பு படுத்தி மொழி வரலாற்றினை அமைப்பர் மொழி இலக்கிய ஆய்வாளர்கள். அவர்களின் எண்ணப்படி தமிழ் மொழி இலக்கியம் கி.மு. 3000-5000 எனும் ஆண்டுகட்கு முற்பட்ட பழமையும் பெருமையும் உடையது என்பது பெறப்படுகிறது.[4] இத்தகு தொன்மை வாய்ந்த தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்களை இலக்கிய ஆய்வாளர்கள் பலவாறு வகைப்படுத்தி இலக்கிய உலகிற்குத் தந்துள்ளனர்.

பொதுவாக இலக்கியக்கலை தோன்றுவதற்குரிய காரணங்களை இலக்கிய ஆய்வாளர்கள் நான்கு வகையாகக் கூறுவர்.

1. தன்னுணர்ச்சியை வெளியிடும் விருப்பம்.

2. பிறருடைய வாழ்விலும் செயலிலும் நமக்குள்ள அக்கறை.

3. உண்மை உலகிலுள்ள ஆர்வமும் அதையொட்டிக் கற்பனை உலகினைப் படைப்பதில் உள்ள ஆர்வமும்.

4. ஒலி, கோடு, வண்ணம், சொல் முதலியவற்றிற்கு அழகிய வடிவம் தந்து அமைப்பதில் உள்ள ஆசை.

என்பன அவை. இந்நான்கு வகைகளும் உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்ற முக்கோணத்தில் அமையும்.

தமிழிலக்கியங்களும் இந்த நால்வகைக் காரணங்களின் அடிப்படையில் அமைந்தவை என்பதில் ஐயமில்லை.

இத்தகைய உணர்ச்சி, கற்பனை, வடிவம் என்ற மூன்றினையும் நிலைக்களனாகக் கொண்டு தோன்றிய தமிழ் இலக்கியங்கள் பலவகைத் திறத்தனவாகும். இயற்கையில் பூத்துக் குலுங்கும் மலர்கள் ஒரே நிறத்தனவாக அமையின் உள்ளத்தை அவை ஈர்க்காது. எனவேதான் மலர்களில் வண்ணங்கள் பலவகைப்பட்டுக் காணப்பெறுகின்றன. அதுபோலத்தான் இலக்கியங்களும் ஒரே சுவையில், ஒரே நிறத்தில் அமைந்திடின் மனித சமுதாயத்தை ஈர்த்திடாது. எனவேதான் மனித உள்ளங்களைக் கவர்ந்திட இலக்கியங்களிலும் பல வகைகள் தோன்றின. அதிலும் தமிழ் இலக்கியங்களில் நூற்றுக்கணக்கான வகைகள் தோன்றியுள்ளன.

தமிழ் இலக்கிய வகைகள்

தமிழ் இலக்கிய வகைகளை வகைப்படுத்திக் காண முற்பட்ட பொழுது இலக்கிய ஆய்வாளர்கள் ஒரு சிலர் கால அடிப்படையில் தமிழ் இலக்கியங்களை ஆய்ந்து வகைப் படுத்தினர். சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், உரைநடை இலக்கியங்கள், தற்கால இலக்கியங்கள் என்பன அவர்களின் கால அடிப்படை வகைப்பாடுகள். வேறு சிலர் பொருள் அடிப்படையில் தனிப்பாடல், காப்பியம், அற இலக்கியம், பக்தி இலக்கியம், சாத்திர இலக்கியம், வாழ்க்கை வரலாறு, புதுக்கவிதை எனக் கண்டனர். இவற்றையெல்லாம் ஆய்ந்து டாக்டர் மு.வ. அவர்கள் தமிழ் இலக்கியங்களைப் பொருள்நோக்கில் சில வகையாகவும், வடிவம் நோக்கிச் சில வகையாகவும், புலவர்தம் மனநிலை பற்றி வேறு சில வகையாகவும் பாகுபாடு செய்யலாம் எனக் கூறுவார்.[5]

டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் பல கோணங்களில் தமிழ் இலக்கியங்களைப் பலவாகப் பிரிவுகள் செய்யாது 1. பொருள் அடிப்படையன, 2. அமைப்பு அடிப்படையன, 3. இரண்டும் இணைந்த அடிப்படையன என முப்பெரும் பிரிவுகளாக அடக்கலாம் என்பர்.[6] இவரின் கூற்று

இலக்கியவகை ஆய்வாளர்களால் பெரிதும் ஏற்றுக் கொள்ளத் தக்கதாக அமைகின்றது. இத்தகைய முப்பெரும் பிரிவில் "**அமைப்பின் அடிப்படையில்**" அமைந்தவைதான் சிற்றிலக்கியங்கள்.

சிற்றிலக்கியங்கள்

தமிழ் இலக்கிய வகையின் பிரிவுகளில் "அமைப்பு அடிப்படையில்" அமைந்த சிற்றிலக்கியங்கள் எண்ணிறந்தவை யாகும். தமிழ் இலக்கிய வகையில் சிற்றிலக்கியங்கள் பிரபந்தங்கள் என்ற வடசொல்லால் தொடக்க காலத்தில் வழங்கப் பெற்றன. பிரபந்தம் என்ற அச்சொல்லிற்கு, நன்கு கட்டப் பெற்றது; நன்கு யாக்கப் பெற்றது என்று பொருள் கொள்ளப் பெறும். எனவே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் அனைத்திற்கும் அச்சொல் பொருந்தும் என்றாலும் சிறு இலக்கியங்களைக் குறிக்கவே பயன்பெற்று வந்தது. அதிலும் பாட்டியல் நூல்கள் பிரபந்தம் என்ற சொல்லைப் பெரிதும் பயன்படுத்தி வந்தன. பின்னர் காலப்போக்கில் வடசொற் களைத் தமிழ்ப் படுத்தி வழங்கும் வழக்காறுதோன்றிய பொழுது சிற்றிலக்கியங்கள் என்ற சொல் வழக்கில் வரத் தொடங்கிற்று.

"சிற்றிலக்கிய நூல்கள் நெடும்பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேலன. பலதுறைச் சார்ந்த பெரு நூல்கள் போலாது ஒருசில துறைகளைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கியன. சுருங்கிய அளவில் அமைவன. அதனால் எளிதில் படித்து முடிக்கக் கூடியன. வட்டாரச் சார்பு மிக்கன. சங்ககாலப் பத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை, மன்னனை, வள்ளலைப் போற்றிப் புகழ்வதற்காக, சிறப்பாக எடுத்துரைப்பதற்காக எழுதப் பெற்றன."[7] இத்தகைய சிற்றிலக்கியங்களின் வகைகள் பற்றி இன்றுவரை முடிந்தமுடிவு ஏற்பட்டிலது.

பொதுவாக இச்சிற்றியலக்கியங்களாம் பிரபந்தங்களின் வகைகளை 96 என்று குறிப்பிடுவதுண்டு. இவ் எண்ணிக் கையை,

"பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற்றாறெனும் தொகையதான"

என்று முதற் நூற்பாவில் அமைத்து முதல் முதலில் குறிப்பிட்டது பிரபந்த மரபியல் நூலாகும். இந்நூலைத் தொடர்ந்து பிரபந்தத் திரட்டு என்ற நூலும், இத் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கையைக் குறிப்பிட்டது. அடுத்து வீரமாமுனிவர் தன் சதுரகராதியில் தொண்ணூற்றாறு வகைகளையும் பட்டியல் செய்து தருகின்றார். வீரமாமுனிவரின் வகைப் பாட்டைச் சிறிதும் மாற்றாது - புதுக் கோட்டைச் சமஸ்தானத்தைச் சார்ந்த குடுமியாமலை வைத்தீசுரதீட்சதர் அவர்களின் குமாரர் சுப்பிரமணிய பாரதியும் தம் "பொருட்தொகை நிகண்டில்" குறிப்பிட்டுள்ளார். இவைகள் தவிர எப்பாட்டியல் நூல்களும் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கையில் நூல்களை வகுத்துத் தரவில்லை. பன்னிரு பாட்டியல் 62 வகைகளையும், வெண்பாப் பாட்டியல் 53 வகைகளையும், நவநீதப் பாட்டியல் 45 வகைகளையும், சிதம்பரப் பாட்டியல் 59 வகைகளையும், இலக்கண விளக்கப் பாட்டியல் 64 வகைகளையும், பிரபந்த தீபிகை 77 வகைகளையும், தொன்னூல் விளக்கம் 91 (நுற்பாப் பகுதி 35 வகைகளையும், அதனின் உரைப் பகுதி 56 வகைகளையும்) வகைகளையும், முத்து வீரியம் 90 வகைகளையும், சுவாமிநாதம் 37 வகைகளையும் சிற்றிலக்கிய வகைகளாகக் குறிப்பிடுகின்றன. இங்கு குறிப்பிட்ட நூல்களில் ஏற்றத் தாழ்வு இருப்பது என்பதைவிட - ஒன்றில் கூறப்பெற்ற சில வகைகள் பிறவற்றில் விடப் பெற்றும் - சிலவற்றில் புதிய வகைகள் இணைக்கப் பெற்றும் இருப்பது ஆய்வுக்குரியதாகும்.

எனவே சிற்றிலக்கிய வகைகள் 96 என்ற குறியீடு எக்காலத்திலும் பொருந்தி வருவதன்று என்பது நன்கு பெறப்படுகிறது சுவாமிநாதம் குறிப்பிடுவது போல "பிரபந்தம் அளவில" என்பதே பொருந்தும். இவ்வாறு இப்பிரபந்த வகைகளைப் பாட்டியல் நூல்கள் குறிப்பிட்டதுபோல் அல்லாமல் இக்கால இலக்கிய ஆய்வாளர்கள் கீழ்க்கண்டவாறு பிரித்துள்ளனர்.

1. பாவகையால் பெயர் பெற்றவை.
2. பாடல் எண்ணிக்கையால் பெயர் பெற்றவை.
3. பாடல் அமைப்பு வகையால் பெயர் பெற்றவை.
4. விளையாட்டால் பெயர் பெற்றவை.
5. தொழில் அடிப்படையில் பெயர் பெற்றவை.

6. சந்த அடிப்படையில் பெயர் பெற்றவை.

7. நிகழ்ச்சி அல்லது பொருள் அடிப்படையில் பெயர் பெற்றவை.

8. துதிப் பாடலாகவும் தத்துவப் பொருளை உணர்த்து பவையாகவும் இருப்பவை.[8]

இவ்வெட்டு வகைக்குள் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் அனைத்தையும் உட்படுத்தி விடலாம் என்பது தெளிவு.

இதில் "பாடல் அமைப்பு" வகையால் பெயர் பெற்றவை யாக அமைவன அந்தாதி, சித்திரகவி போன்றவையாகும்.

அந்தாதி - சொல்லாய்வு

சிற்றிலக்கிய வகையில் மிகவும் தொன்மையானது அந்தாதி இலக்கியமாகும். அந்தாதி என்ற சொல் அந்தம், ஆதி என்ற இரு சொற்களால் ஆகியதாகும். இச்சொல்லைப் பெரும்பாலோர் வட மொழியாகவே கொள்கின்றனர். ஆயின் சொல்லாய்வு நிலையில் காணும்போது அந்தாதி தூய தமிழ்ச் சொல்லேயாகும். இதனை அந்தத்தை ஆதியாக உடையது என்று விரித்து இரண்டாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கொள்ளவேண்டும்.

அந்தம் என்ற சொல் அந்து + அம் என்ற புணர்வு நிலையில் அமைந்ததாகும். அந்து என்பதற்கு அழிவு, கொலை (தமிழ் மொழியகராதி - காஞ்சி நாகலிங்க முதலியார்) முடிவு என்பன பொருள்களாகும். அந்து, அழிவு என்ற பொருளில் வழக்கிலும் செய்யுளிலும் வழங்கப் பெறும். நெற்பயிரை அழிக்கும் பூச்சிக்கு அந்துப் பூச்சி என்று பெயர். ("அந்துகடி துண்டு போய கதிர் நெல்லும்" - பிரபோத சந்திரரோதயம் 19 - 6) புத்தகங்களைத் துளையிட்டு அழிக்கும் பூச்சியையும் அந்து என்ற வழக்கில் வழங்கப் பெறுகிறது. அதனை அழிக்கும் மருந்து உருண்டைக்கு அந்துருண்டை என்பதும் பெயர். எனவே அந்து என்பது அழிவைக் குறிக்கிறது என்பது பெறப்படும். உலக அழிவுக் காலத்தை ஊழி முடிவு என்று கூறுவர். எனவேதான் மேற்குறித்த அகராதியிலும் கொலை என்ற பொருள் கொடுக்கப் பெற்றுள்ளது. கொலை செய்ததை - முடித்து

விட்டேன் என்று வழக்கில் கூறுவதுண்டு. இந்நிலையில் அந்து என்பது முடிவு என்ற பொருளைத் தரும் என்பது பெறப்படுகிறது.

ஆதி என்பது ஆ + தி எனப் பிரிக்கப் பெறும். ஆ = என்பது பகுதி. தி = என்பது தொழிற்பெயர் விகுதி. (செய்தி, உய்தி என்பவை போல) எனவே ஆதி என்பது ஆதல் ஆகித் தொடக்கம் என்ற பொருளைத் தரும். எனவேதான் இறைவனின் தொழில்களின் தொடக்க நிலையைச் செய்யும் சத்தியை ஆதி என்று கூறுவர். ("நாயகி ஆதி உடையாள் சரணம் அரண் நமக்கே" - அபிராமி அந்தாதி, பா. 50)

எனவே அந்தாதி என்பது முடிவைத் தொடக்கமாகக் கொண்டது என்ற பொருளைத் தந்து தூய தமிழ்ச் சொல்லாக விளங்குகின்றது.

அந்தாதியின் தோற்றம்

அந்தாதி என்பது இலக்கண நூல்களில் தொடையாகவும், சொல்லணியாகவும், தொடர்நிலைச் செய்யுளாகவும் அமைந்துள்ளது. இம்மூன்று நிலைகளை ஒப்பிட்டுக் காணும்போது அந்தாதி அமைப்பின் தொடக்கம் தொடை நிலையில்தான் ஏற்பட்டுள்ளது என்பது நன்கு தெளிவுறுகிறது.

அந்தாதித் தொடை

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தில் தொடை பற்றிய இலக்கணத்தில் - அடிதோறும் வரும் தொடைகளாக மோனை எதுகை, முரண், இயைபு, அளபெடை ஆகியவை களையும், அடிக்கண் வரும் தொடைகளாகப் பொழிப்பு, ஒரூஉ, செந்தொடை, நிரல்நிறை ஆகியவைகளையும் தொல்காப்பியர் குறித்துள்ளாரே தவிர - அந்தாதித் தொடையை அவர் குறிப்பிடவில்லை. ஆனால்,

"தெரிந்தனர் விரிப்பில் வரம்பில வாகும்" (98)

என்ற செய்யுளியல் சூத்திரத்திற்கு உரை எழுதிய ஆசிரியப் பெருமக்கள் அந்தாதித் தொடையைக் குறிக்கின்றனர். இளம்பூரணர் இச்சூத்திரத்தின் உரையில் "மேற் சொல்லப்பட்ட

தொடையினை ஆராய்ந்து விரிப்பின் வரம்பிலவாகி விரியும்" என்ற சூத்திர உரை எழுதி, விளக்கவுரையில்,

"அவையாவன மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பனவற்றின்கண் இணை, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், கடை, கடையிணை, கடைக்கூழை, இடைப் புணரென வேறுபடுத்தி உறழ்ந்தும், எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி எனவும்... வரம்பிலவாகி விரியும்" எனக் குறிப்பிடுவர். எனவே அந்தாதித் தொடை என்பது தொல்காப்பிய மூலத்தில் இடம் பெறாது உரையில்தான் இடம் பெற்றது.

தொல்காப்பியத்தின் உரையில் இடம் பெற்ற அந்தாதித் தொடை, பின்னர்

"ஈறுமுதலாத் தொடுப்பது என்று
ஓதினர் மாதோ, உணர்ந்திசினோரே"

என்று யாப்பருங்கலத்திலும்,

"அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி"

என்று யாப்பருங்கலக் காரிகையிலும்,

"அடியும் சீரும் அசையும் எழுத்தும்
முடிவும் முதலாச் செய்யுள் மொழியினஃது
அந்தாதித் தொடையென்று அறைதல் வேண்டும்"

என்று நத்தத்தனாரிலும் அமைந்த இலக்கணச் சூத்திரங்ளில் இடம் பெற்றது.

இவ்வாறு இலக்கணச் சூத்திரங்களில் இடம் பெற்றிருப்பதை நோக்கும்போது தொல்காப்பிய காலத்திற்குப் பிற்பட்டகால இலக்கியங்களில் அந்தாதித்தொடை அதிகம் இடம் பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஆனால் அதே நேரத்தில் தொன்மை இலக்கியங்களில் அந்தாதித் தொடை இடம்பெற வில்லையோ என்று ஐயுறத் தேவையில்லை.

தொன்மை இலக்கியங்களிலும் "அந்தாதிப்பா" அமைப்பை விட "அந்தாதித் தொடை" அமைப்பு மிகுதியும் காணப் பெறுகிறது.

பொருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார் மற்றதால் அரிது" (248)

"மடியை மடியா ஒழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்" (602)

என்று திருக்குறளிலும்,

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீருமென்றாங்கு" (பா. 2)

என்று புறநானூற்றிலும்,

"குன்றகத்ததுவே கொழுமிளைச் சீறூர்
சீறூரோளே நாறுமயிர்க் கொடிச்சி
கொடிச்சி கையகத் ததுவேபிறர்" (95)

என நற்றிணையிலும் இடம் பெற்றிருப்பதை இங்கு நினைவு கூறலாம். தொன்மை இலக்கியங்களில் சிற்சில இடங்களில் இடம் பெற்ற அந்தாதித் தொடை கால வளர்ச்சியில் செய்யுள்களில் மிகுதியும் இடம் பெற்று - பிற்கால அந்தாதி இலக்கியங்களுக்குத் தோற்றுவாய் செய்தது எனலாம்.

அந்தாதி அணி

தொடை அமைப்பில் இருந்த அந்தாதி வளர்ந்து ஓர் அணி அளவிற்கு இலக்கண நூல்களில் இடம் பெற்றுள்ளது. சொல்லணி என்பது மடக்கணியைத் தொடக்கமாகக் கொண்டு தண்டியலங்காரத்தில் அமைந்துள்ளது. மடக்கணி என்பது செய்யுளுக்கு உள்ளே ஓரடியின் கண்ணும், ஈரடிக் கண்ணும், மூன்றடிக் கண்ணும், நான்கடிக் கண்ணும் நடக்கும் என்று அவ்வணி நூல் குறிப்பிடுகிறது (93). இத்தகைய மடக்கில் ஒருவகைச் சந்தட்டை மடக்கு என்பதாகும். இச்சந்தட்டை மடக்கு.

"அடிமுழுதும் மடங்கலும் ஆங்கதன் சிறப்பே" (96)

என்ற இலக்கணத்துடன் அடக்கப்படுகிறது. இம்மடக்கே அந்தாதி மடக்கு என்று உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். அந்தாதி மடக்கிற்கு,

"கயலோர் தரவரும் கடிபுனற் காவிரி
காவிரி மலருகக் கரை பொருமரவம்
மரவம் பூஞ்சினை வண்டொடுஞ் சிலம்பும்
சிலம்புசூழ் தளிரடித் திருமனைக் கயலே"

என்ற பாடல் உதாரணச் செய்யுளாக அமைந்துள்ளது. இந்தச் செய்யுளில் அந்தாதித் தொடை அமைப்பைக் காண முடிகிறது. தொடக்கத்தில் பாடல்களின் சில வரிகளில் மட்டும் அமைந்து பாடல் முழுமையும் அமையாத தொடையின் வகையாக இருந்த அந்தாதி பின்னர் பாடல் முழுவதும் அமைந்த போது ஓர் அணியாக - மடக்கணியின் வகையாக வகைப்படுத்துப் பெற்று வளர்ச்சியுற்றது. இந்த அந்தாதி மடக்கை.

"அந்தாதிப் பதந்தாதி மடக்கே"

என மாறனலங்காரம் குறிப்பிடுகிறது.

அந்தாதி - தொடர்நிலைச் செய்யுள்

மடக்கணியாக அமைந்த அந்தாதி அதே நேரத்தில் பிறிதொரு நிலையில் சொற்றொடர் நிலைச் செய்யுளாகவும் வளர்ந்தது.

"செய்யுள் அந்தாதி சொற்றொடர் நிலையே"

என்று தண்டியலங்காரம் (12) குறிப்பிடுகிறது. தண்டியலங்கார உரையாசிரியர் இச்சூத்திரத்திற்கு உரையெழுதும்பொழுது,

"ஒரு செய்யுள் இறுதி அடுத்த மற்றொரு செய்யுளுக்கு ஆதியாகத் தொடுப்பது சொல் தொடர்நிலைச் செய்யுளாகும்"

என்று குறிப்பார். எனவே தொடை அமைப்பில் எழுந்த அந்தாதி ஒரு செய்யுளுக்கு உள்ளேயே மடக்கணியாக அமைந்து பின்னர் தொடர்நிலைச் செய்யுளாக வளர்ச்சியுற்றது எனத் தெரிகிறது.

அந்தாதி - நூல் வடிவம்

இவ்வாறு செய்யுளின் சில வரிகளில் அமைந்து - பின்னர் செய்யுள் முழுமையும் அமைந்து - பின்னர் பல செய்யுள்களில் தொடர்ச்சிக்கு உரிய உறுப்பாக வளர்ந்த அந்தாதி இறுதியில் தனி ஒரு இலக்கிய வகையாக மலர்ந்தது. எனவேதான் தொல்காப்பிய இலக்கண உரையாசிரியர்கள் தொல்காப்பியர்

கூறும் வனப்பில் விருந்து என்பது அந்தாதி இலக்கியத்தைக் குறிக்கிறது என்கின்றனர்.

"விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (செய்: 231)

என்பது விருந்து பற்றிய சூத்திரமாகும். இதற்குக் கீழ்க்கண்டவாறு உரையாசிரியர்கள் உரையெழுதியுள்ளனர்.

1. இளம்பூரணர்

விருந்தாவது முன்புள்ளார் சொன்ன நெறிபோய் புதிதாகச் சொன்ன யாப்பின் மேலது - புதிதாகப் புனைதலாவது ஒருவன் சொன்ன நிலைவழி அன்றித் தானே தோற்றுவித்தல். இது பெரும்பான்மையும் ஆசிரியப்பாவையே குறிக்கும்.

2. சேனாவரையர்

விருந்து தானும் பழங்கதை மேலதன்றிப் புதிததாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கையார் முதலியோர் செய்த அந்தாதிச் செய்யுளும் என உரைக்க, கலம்பகம் முதலாயினவும் சொல்லும்.

3. நச்சினார்க்கினியர்

முற்கூறிய தோல் என்பது கதையைப் புதியதாகக் கூறல் என்றும், ஈண்டுக் கூறிய விருந்து என்பது பழையதும், புதியதுமாகிய கதை மேற்றன்றித் தான் புதிதாகப் படைத்துத் தொடர் நிலைச்செய்யுள் செய்வது"

இவ்வாறு மூன்று உரையாசிரியர்களும் கூறியுள்ள உரைகளின் படி பார்க்கும் பொழுது விருந்து என்ற வண்ணத்தில் அந்தாதி இலக்கியங்களை உரையாசிரியர்கள் அமைத்துக் கொண்டுள்ளனர் என்பது பெறப்படுகிறது. அதிலும் பேராசிரியர் விருந்து என்பது அந்தாதிச் செய்யுளைக் குறிக்கும் என்று குறித்திருப்பது அந்தாதி இலக்கிய வளர்ச்சியில் முத்தாய்ப்பாக அமைந்துள்ளது. அதுபோல நச்சினார்க்கினியர் தொடர்நிலைச் செய்யுள் என்று குறித்திருப்பது மேலும் முன் குறித்த கருத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

இதுகாறும் பார்த்தவற்றால் அந்தாதி என்பது தொடர்நிலையில் தொடங்கி இலக்கண உரையாசிரிரயர்கள் காலத்தில் தனியொரு இலக்கிய வடிவமாகத் தொடர்நிலைச் செய்யுளாகப் பூத்துக்குலுங்கியிருக்கிறது என்பது தெரிகிறது. இவ்வாறு இலக்கணங்களில் அந்தாதியினுடைய அமைப்பு இடம்பெற வேண்டுமானால் இலக்கிய உலகிலும் அந்தாதி பரந்துபட்ட நிலையில் உலா வந்திருக்க வேண்டும்.

இலக்கிய உலகில் அந்தாதி:

சங்க இலக்கியத்திலேயே அந்தாதி இலக்கியப் பண்பு அமைதிருப்பதைச் சிற்றிலக்கிய ஆய்வாளர்கள் பல்வேறாகக் கண்டுள்ளனர். சொல் தொடர்நிலைச் செய்யுள் ஆகிய அந்தாதி எட்டுத்தொகை நூல்களில் ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து ஆகிய நூல்களிலும் சிறப்பாக அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றுத் தொண்டிப் பத்திலும், பதிற்றுப் பத்து நான்காம் பத்திலும் அந்தாதி அமைப்பு அமைந்துள்ளது. ஐங்குறுநூற்று உரையாசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள்,

“இப்பத்தின் வருகின்ற பாட்டுக்கள் பத்தும் அந்தாதித் தொடையில் அமைந்தவை. இந்நூல் தொகுக்கப் பெற்ற காலத்தில் அந்தாதி தமிழகத்தில் சிறப்பாக நிலவினமையின் இவற்றைச் சான்றோர் தொகுத்தனர் எனக் கருதலாம்” என்று குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பு அந்தாதி இலக்கியத்திற்குச் சங்க இலக்கியம் கால்கோள் இட்டது என்பதை நன்கு வெளிப்படுத்துகிறது.

இதனையடுத்துச் சிலப்பதிகாரத்தில் கானல்வரிப் பாடல்களில் அந்தாதி அமைந்துள்ளது. திருமூலரின் திருமந்திரத்தின் நான்காம் தந்திரம் முழுமையும் அந்தாதி அமைப்பில் உள்ளது. ஆயின் அதில் ஒரே ஒரு வேறுபாடு அமைந்துள்ளது. மொத்தம் அந்தத் தந்திரத்தில் 100 பாடல்கள் உள்ளன. அவை பத்துப் பகுதிகளாக அமைந்துள்ளன. அத்தந்திரத்தில் உள்ள 100 பாடல்களும் தொடர் அந்தாதியாக அமையாது ஒவ்வொரு பகுதியும் தனித்தனி அந்தாதியாக அமைந்துள்ளதே அவ்வேறுபாடு. அதாவது முதல் பகுதியின் ஈற்றுப் பாடலும் அடுத்த பகுதியின் முதல்பாடலும்

அந்தாதியாக அமையவில்லை. எனவே அத்தந்திரத்தில் உள்ள 10 பகுதிகளும் ஒருசேர அமைந்து பதிற்றுப்பத்தாந்தி போல் அமையாது - தனித் தனியே காணப்பெறுகின்றன.

அதுபோலத் திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதிகள் அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளன. இவ்வாறு சங்க இலக்கியம் தொட்டு - சமய இலக்கியங்கள் வரை இலக்கியங்களின் உட்பகுதியாக அமைந்த அந்தாதி - இடையில் காரைக்கால் அம்மையாரின் அற்புத் திருவந்தாதியில்தான் முழு வடிவம் பெற்றுத் தனியொரு நூலாக அமைந்தது. ஆனால் தொல்காப்பிய உரையாசிரியர் களில் ஒருவரான பேராசிரியர் கூற்றுப்படி பார்க்கும்பொழுது பொய்கையார் யாத்த அந்தாதியே அந்தாதி நூல்களில் முதன்மையானது எனக் கொள்ளலாம். ஆனால் அந்நூல் இப்பொழுது கிடைக்காத காரணத்தால் கிடைத்தவற்றுள் தொன்மையானதாக, முதன்மையானதாக அற்புதத் திருவந்தாதி அமைந்துள்ளது. அம்மையாரின் காலத்திற்குப் பின்னர் அந்தாதியைப் படைத்துத் தந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் முதலாழ்வார் மூவர் ஆவார்கள். ஆழ்வார்களுக்குப் பின்னர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் சிற்றிலக்கிய வகைகளின் பொற்காலமாகத் திகழ்ந்தது. பின்னர் கி.பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் சிற்றிலக்கியங்கள் பல்கிப் பெருகித் தமிழ் மொழிக்கு அழகு சேர்த்தன. எனவேதான் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை அவர்கள், "கி.பி. 16-ஆம் நூற்றாண்டு முதல் மூன்று நூற்றாண்டுகளையும் பிரபந்தக் காலம் என்று கூறுவார்".[9] இற்றைக் காலத்தில் தெய்வங்கள் மீதும், திருத் தொண்டர்கள் மீதும் அந்தாதி பாடுகின்ற மரபு செழித்தோங்கிச் சிறப்புற்று வருகிறது. ஏனைச் சிற்றிலக்கியங்களிலும் அந்தாதி இலக்கியமே எண்ணிறந்த நிலையில் தோன்றியுள்ளது.

முடிந்த முடிபாகச் சிற்றிலக்கியங்களை ஒருசேரப் பார்க்கும் போது - "தொல்காப்பியர் காலத்தில் இடம்பெற்ற சிற்றிலக்கிய வித்து சங்க காலத்தில் ஆற்றுப்படையாக முளைவிட்டு ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதியாகத் துளிர்த்து, ஏழாம் நூற்றாண்டில் கோவை எனும் செடியாகி, எட்டாம் நூற்றாண்டில் உலா என்னும் மரமாகி, ஒன்பதாம் நூற்றாண்டில்

பிள்ளைத் தமிழாக மொட்டாகி, பதினான்காம் நூற்றாண்டில் தூதாகப் பூத்து, பதினாறாம் நூற்றாண்டில் குறவஞ்சியாகக் கனிந்தது என்பர்.[10] இக்கருத்திலிருந்து சிற்றிலக்கியப் படிநிலை வளர்ச்சியையும் அந்தாதியினுடைய தொன்மையையும் தெள்ளிதின் உணரலாம்.

அந்தாதி இடம் பெறும் பிற சிற்றிலக்கியங்கள்

சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான அந்தாதி பிற சிற்றிலக்கிய வகைகளிலும் இடம்பெற்றுத் தன்னிகரற்று விளங்குகிறது. பன்னிரு பாட்டியல் கூறும் இலக்கண அமைப் பின்படி 1. கலம்பகம், 2. பல்சந்தமாலை, 3. இணைமணி மாலை, 4. இரட்டை மணி மாலை, 5. மும்மணி மாலை, 6. நான்மணி மாலை, 7. கலம்பக மலை, 8. மும்மணிக்கோவை, 9. கலியந்தாதி, 10. ஒலியந்தாதி, 11. நவமணி மாலை, 12. அந்தாதித் தொகை, 13. ஒருபா ஒருபஃது, 14. இருபா இருபஃது ஆகிய பதினான்கு சிற்றிலக்கிய வகைகளில் அந்தாதி அமைப்பு அமையும் என்பது தெளிவாகிறது. அதுபோல 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய முத்து வீரியத்தில், கலம்பகம், மும்மணிக் கோவை, அட்டமங்கலம், இரட்டை மணி மாலை, நவமணி மாலை, நான்மணி மாலை, மும்மணி மாலை, ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, ஒருபா ஒருஃபது, இருபா இருபஃது, அலங்காரப் பஞ்சமம் ஆகிய இலக்கியங்கள் அந்தாதி அமைப்பைப் பெற்றுவரும் என்று குறிக்கப் பெற்றுள்ளது. இவ்விரு இலக்கண நூல்களில் கூறிய கருத்துப்படி அந்தாதி அமைப்பாகிய தொடர் நிலைச் செய்யுள் தனியொரு அமைப்பாக மட்டும் அமையாது பிற இலக்கியங்களைச் சிறப்பிக்கவும் உரியதாக விளங்குகிறது எனத் தெரிகிறது. இத்தகு நிலையினால் அந்தாதி இலக்கியத்தின் பெருமை யையும், அதே நேரத்தில் இலக்கியப் படைப்பாளிகள் அந்தாதிக்குக் கொடுத்த சிறப்பினையும் ஒருவாறு உணர முடிகின்றது. மேலும் அந்தாதி என்ற ஒரு தனிவடிவம் இலக்கியச் சமுதாயத்தில் பெற்ற சிறப்பால் பிற இலக்கியங்களுக்குரிய இலக்கிய உறுப்பாக அமைகின்ற அளவிற்கு வளர்ச்சியும் பெருமையும் பெற்றுள்ளது எனத் தெரிகிறது.

அந்தாதி இலக்கியம் தோன்றக் காரணம்

அந்தாதி இலக்கியம் தோன்றியதற்குக் காரணம் பற்றிச் சிற்றிலக்கிய ஆய்வாளர்கள் மத்தியில் வேறுபட்ட கருத்துக்கள் தோன்றிடவில்லை. ஆய்வாளர்கள் அனைவரின் கருத்து: "எழுது கருவிகள் பரந்துபட்டுக் கிடைக்காத பழங்காலத்தில் எளிதில் நினைவுகூரவே இவ்வந்தாதி முறை தோன்றிற்று என்பதேயாகும்.[11] இக்கருத்து ஆய்வுக்குரியதாகும். எளிதில் நினைவு கூர்தல்தான் காரணம் என்றால் அனைத்து இலக்கியங்களிலும் அந்தாதி அமைப்பே காணப்பெறல் வேண்டும். அந்தாதி இலக்கியம் மட்டுமே தான் நினைவுகூர வேண்டுமா - மற்ற இலக்கியங்கள் வேண்டாமா? சிந்தித்தல் வேண்டும்.

சிற்றிலக்கியங்களில் அந்தாதி இலக்கியத்தின் பாடு பொருள் பெரும்பாலும் இறைமைக் கொள்கையே என்பதை மறந்துவிடக் கூடாது. பிற இலக்கியங்களில் பாடுபொருளாக மன்னரின் பெருமை, வீரம், அழகு என்று அமைந்திருக்க அந்தாதி இலக்கியம் மட்டும் தொடக்ககாலம் முதல் இறைமைக் கொள்கையே பாடு பொருளாகப் பெற்றுள்ளது. ஏனென்றால் இறைவனே ஓர் அந்தாதி தானே! இறைமைக் கொள்கையில் தலையாயது - "அழித்தவனே தோற்றுவிக்க" முடியும் என்பதாகும்.

> "அவன் அவள் அது எனும் அவை மூவினமையும்
> தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
> அந்தம் ஆதி என்மனார் புலவர்"

என்ற சிவஞானபோத முதல் சூத்திரம் இறைவனை அந்தம் ஆதி என்று குறிப்பிடுவதை இங்கு எடுத்துக் காட்டாக்கலாம்.

எனவே உலகின் ஆதியும் அந்தமுமாக, அந்தமும் ஆதியாக இருக்கும் இறைவனைப் பாடவேண்டும் என்று அருளாளர்கள் எண்ணிய போது "அந்தாதி இலக்கியம்" பெரிதாகப் போற்றிக் கொள்ளப் பெற்றது எனலாம். கிடைத்த முதல் அந்தாதி - சமயத்துறையில் அமைந்ததும், 11-ஆம் திருமுறையில் அதிகமான எண்ணிக்கையில் அந்தாதி இடம் பெற்றுள்ளதும், இக்கருத்திற்கு அரண் சேர்ப்பதாகும். இவ்வாறு இறைமைக் கொள்கையை வெளிப்படுத்த அந்தாதி இடம் தந்ததால்

அந்தாதி இலக்கியம் பல்கிப் பெருகித் தோன்றிற்று எனலாம். மேலும் அந்தாதி இலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணம் பாடலின் எளிமை என்றால் யமக அந்தாதி, திரிபந்தாதி இவை எளிமையாக அல்லவா இருத்தல் வேண்டும். இருக்கும் இலக்கியங்களிலேயே மிகவும் கடினமான - அறிவுடையவரா லும் எளிதில் பொருள்கூற முடியாத வகை யமக அந்தாதி. எனவே எளிமைக்கு மாறான இலக்கியம் தோன்ற எளிமை காரணம் என்பது பொருந்தாது. ஆதலால் அந்தாதி இலக்கியம் தோன்றக் காரணம் இறைமைக் கொள்கையும், புலவர்களின் திறமையுமே எனலாம்.

அந்தாதி இலக்கிய அமைப்பு

சிற்றிலக்கியங்களில் பாவின வடிவிற்கு முக்கிய இடம் கொடுத்த இலக்கியம் அந்தாதி இலக்கியமாகும். எனவேதான் சிற்றிலக்கிய ஆய்வாளர்கள் "அந்தாதி என்னும் சிற்றிலக் கியத்தில் பொருட்சிறப்பைவிட யாப்புச் சிறப்பே மிகுதி யாகும்"[12] என்கின்றனர். மேலும் அந்தாதி இலக்கியத்தின் இலக்கணங்களாகப் பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் போது கூட "ஒரு பாடலின் ஈற்றில் அமைந்த எழுத்தோ - அசையோ - சீரோ அடுத்த பாடலின் முதலாக அமையப்பாடுவது அந்தாதி" எனக்கூறி பாவடிவிற்கு முக்கியத்துவம் தந்தனர். வடிவைக் குறிப்பிட்ட அவ்விலக்கண நூல்கள் அந்தாதியின் பாடு பொருளைப் பற்றிக் குறிப்பிடும் போது வரையறுத்துக் கூறவில்லை.

"வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருள்களில்
பண்பாய் உரைப்பது அந்தாதித் தொகையே"

(பன்னிருபாட்டியல் 211)

எனக் குறிப்பிடும் இலக்கண நூற்பா சான்றாகும். எனவே அந்தாதி இலக்கியத்தில் பாடுபொருளை விடச் சிறப்பானது வடிவே ஆகும். இத்தகைய வடிவில் அமைந்த அந்தாதி இலக்கியங்கள் 100 பாடல்களைப் பெற்றிருக்க வேண்டும் எனப் பாட்டியல் நூல்கள் கூறுகின்றன.

"பத்தாதி நூறந்தம் பல்சந்த மாலையாம்
ஒத்தாய வெண்பா ஒருநூறா - ஒத்தசீர்

அந்தாதி யாகும், கலித்துறையும் அவ்வகையே
வந்தால் அதன்பேர் அவை" (9)

என்று வெண்பாப்பாட்டியல் கூறுவது இங்கு குறிப்பிடத் தக்கது. எனவே 100 பாடல்கள் அந்தாதி இலக்கியத்தில் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. கிடைத்திருக்கும் நூல்களில் தொன்மை யான அற்புதத் திருவந்தாதி 100 பாடல்களைப் பெற்றிருப்பது இவ் இலக்கணம் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். ஆனால் பிற்காலத்தில் இவ்வரையறை போற்றப்படவில்லை. 100க்கு மேலும் - குறைந்தும் பாடல்களைக் கொண்ட நூல்கள் காணப்பெறுகின்றன. சரசுவதி அந்தாதி 30, பெரிய திருவந்தாதி 87, நான்முகன் திருவந்தாதி 89 எனக் குறைந்து காணப்பெறுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்ட அந்தாதி நூல்களும் உள்ளன. பெரிய திருவந்தாதி எனப் பெயர் பெற்ற திருவாய்மொழி 1102 பாடல்களைப் பெற்றுள்ளது. மேலும் சிவபூசை அந்தாதி என்னும் நூல் 120 பாடல்களைப் பெற்றுள்ளது. எனவே 100 என்ற எண்ணிக்கை வரையறையில் தோன்றிய அந்தாதி காலப்போக்கில் அந்த வரையறையை கடைப்பிடித்திலது என்பது தெள்ளிது.

எனவே அந்தாதி இலக்கிய அமைப்பு முடிவு - ஆதியாக வேண்டும் என்ற முக்கிய வடிவை மட்டுமே கொண்டு அமைந்து இன்றைய நிலையிலும் அவ்வடிவு மாறாத நிலையில் அமைந்திலங்குகின்றது. அதாவது ஒரு பாடலில் ஈற்றில் அமைந்த எழுத்தோ அசையோ, சீரோ - அடுத்த பாடலின் தொடக்கமாக அமைதல் வேண்டும்.

"முல்லைப் பதிகமஞ் சூற்கொண்டல் சூழ்முது கின்றினும்வாழ்
தில்லைப் பதிக மடமார்பன் மூவர் திருத்தமிழின்
சொல்லைப் பதிக மலர்த்தொடை யான்றன் றுணைமலர்த்தா
ளொல்லைப் பதிக மனத்தே யமன்வரு முப்பொழுதே" (11)

"தேங்கடம் புந்தி கழுமலர்ச் சென்னிச்செவ் வேளைப்பெற்றோய்
தாங்கடம் புந்தி கழுமலக் கோன்றமிழ் சூடியடி
யோங்கடம் புந்தி கழுமலற் றோங்க வுயர்முல்லையா
யாங்கடம் புந்தி கழுமலத் தெவ்வற வாணைகொண்டே" (12)

என்று திருமுல்லைவாயில் அந்தாதியில் முதற்பாடலின் ஈற்றில் அமைந்த "தே" என்ற எழுத்து அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்து அந்தாதி அமைப்பைப் பெற்றது.

"கரத்தரிக் கங்கணங் கட்டர னார்தந்த கந்தரழ
கரத்தரிக் கங்கணங் கண்டசெய்ச் செந்திலெங் காங்கெயர்சா
கரத்தரிக் கங்கணங் கட்கய னார்க்கெழிற் காசணிசே
கரத்தரிக் கங்கணங் கற்றிடத் தாங்கினர் கைச்சத்தியே" (11)

சத்திரக் கரத்த னகச்சேயங் கத்தினைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலை யாளிதன் றாளிணைநே
சத்திக் கரத்த னகத்தியைதந் தேத்தரன் றந்தகதிர்ச்
சத்திக் கரத்த னகசெந்தி லாய்நின் சரண்சரணே. (12)

என்ற திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதியின் பதினோராம் பாடலின் ஈற்றுச் சீரில் உள்ள "சத்" என்ற அசை பன்னிரண்டாம் பாடலின் முதலாக அமைந்து அந்தாதியைப் பெற்றுள்ளது.

"பழமையாம் வாதனையில் படிந்தமனப் பந்தத்தின்
விழைவினால் தலைமயங்கி வேறுவே றுருவெடுத்துச்
சுழல்குயவன் திகிரியைப்போல் பவக்கடலிற் சுழல்வேனோ?
மழவிடையாய்! பால்வண்ணா! வானவர்தம் கோமானே! (43)

"கோமானே! கருவைவரும் குணக்குன்றே! மலரிதழித்
தேமாலை புனைந்தசடைச் செழுஞ்சுடரே! என்றென்று
பாமாலை வாய்பாடிக் கைகொட்டிப் பதம்பெயர்த்து
நாமாட வம்மின்காள் தொண்டராய், நமரங்காள்!" (44)

என்ற திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியின் நாற்பத்தி மூன்றாம் பாடலின் கோமானே என்ற ஈற்றுச்சீர் அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்து அந்தாதி அமைப்பைப் பெற்றுள்ளது.

இவ்வாறு எழுத்து, அசை, சீர் என்ற மூன்றின் அடிப்படையில் அமைவதுதான் அந்தாதியின் அமைப்பாகக் காணப்பெறுகிறது. அடி முழுவதும் அந்தாதியாக வருகின்ற அமைப்பு அரிதாகவே உள்ளது. இத்தகைய அமைப்பின்படி அமைந்திருக்கும் இலக்கியங்களை ஒரு சேரத் தொகுத்துக் காணும்போது பல்வேறு வகையை நாம் அறிய முடிகிறது.

அந்தாதி இலக்கிய வகைகள்

இற்றைக்குக் கிடைத்திருக்கும் அந்தாதி இலக்கியங்களை ஒரு சேரத் தொகுத்துக் காணும் போது அந்தாதி இலக்கியங் களின் அமைப்பு ஒரே மாதிரியாக அமையாது பல்வேறு அமைப்புக்களில் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.

ஒருபாடல் முடிவில் அமைந்துள்ள எழுத்தோ, அசையோ, சீரோ - அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்திடின் அது அந்தாதி இலக்கியமாகும் என்ற இலக்கணத்திற்கு ஏற்பப் பலவகை நிலையில் அந்தாதி இலக்கியங்கள் படைக்கப் பெற்றுள்ளன. அதாவது எழுத்தால் - சீரால் - அடியால் - பாவால் அமைவது அந்தாதி ஆதலால் - எழுத்தால் - சீரால் - பாவால் ஓசையால் - பொருளால் அந்தாதி இலக்கியங்கள் வேறுபட்டுள்ளன. எனவே அந்தாதி இலக்கியங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்துதல் சிறப்புடைத்து.

1. எழுத்து நிலையில் அமைந்த அந்தாதிகள்.
2. சீர் நிலையில் அமைந்த அந்தாதிகள்.
3. அடி நிலையில் அமைந்த அந்தாதிகள்.
4. பா நிலையில் அமைந்த அந்தாதிகள்.
5. ஓசை நிலையில் அமைந்த அந்தாதிகள்.
6. எண்ணளவையில் அமைந்த அந்தாதிகள்.
7. பொருள் அமைப்பில் அமைந்த அந்தாதிகள்.

இற்றைக்குக் கிடைத்திருக்கும் அந்தாதிகள் அனைத்தையும் இவ்வேழு வகைக்குள் அடக்கலாம்.

1. எழுத்து நிலையில் அமைந்த அந்தாதிகள்

எழுத்து, அசை, சீர், அடி என்ற அமைப்பில் அமைகின்ற அந்தாதியின் வகைகளில் ஓர் வகை எழுத்து நிலையில் அமையும் அந்தாதிகள். அதாவது எழுத்தால் மாற்றம் பெற்று அமையும், எழுத்துக்கு முக்கியத்துவம் தரும் அந்தாதி இலக்கியங்களை இவ்வகையில் அடக்கலாம். இவ்வகையில் திரிபு அந்தாதி, கொம்பிலா அந்தாதி, யமக அந்தாதி, நீரோட்டகயமக அந்தாதி, ஏகத்தாள் இதழகல் அந்தாதி, ஆறெழுத்து அந்தாதி ஆகிய இலக்கியங்கள் அடங்கும்.

அ. திரிபு அந்தாதி

ஒரு செய்யுளின் நான்கடியினும், முதற்சீரில் உள்ள முதல் எழுத்து மட்டும் வேறுபட்டு அச்சீரில் மற்ற எழுத்துக்கள்

மாறுபடாமல் வருவது, ஆயின் பொருள் வேறுபட்டு வருவது திரிபு அந்தாதியாகும். இவ்வகையில் முதல்நூல் குறட்டி வரதையன் என்பார் (கி.பி. 8-ஆம் நூற்றாண்டு) எழுதிய "திரிபு அந்தாதி" என்பர்.[13]

"அரங்கந் திருவம் பலமுக்க ணாறுக் கமர்விடஞ்சீர்
இரங்கந் திருவம் பலர்தொறும் வாழ விலங்கும்பர
மரங்கந் திருவம் பலபாடும் வாவிகண் மல்குமுல்லைப்
புரங்கந் திருவம் பலங்கும் கொடியிடைப் பூண்முலையே"

என்பது வட திருமுல்லை வாயில் அந்தாதி (75). இப்பாடலில் அடிதோறும் முதல்சீர்கள் முதல் எழுத்து மாறியிருக்க - பிற எழுத்துக்கள் மாறாமல் இருப்பதும் பொருள் வேறுபட்டுக் காணப்பெறுவதும் திரிபு அந்தாதிக்கோர் காட்டாகும்.

இவ்வகை அந்தாதி பாடுவது அத்துணை எளிதன்று. இலக்கியப் பயிற்சி பெரிதும் உடையாருக்கே இயலும். இவ்வகைகளால் சொல் நயமும் - பொருள் வேறுபாடுகளும் பெறப்படுகின்றன, எனலாம். திரிபு அந்தாதி என்று தனிநிலையில் இருப்பதோடு பதிற்றுப் பத்தந்தாதிகளில் இவ்வகைப் பாடலமைப்புகள் இடை இடையே நூல் முழுமையும் வெண்பா என்ற பா வகை அமைந்திருக்குமானால் அவ்வந்தாதியைத் திரிபு வெண்பா அந்தாதி எனலாம். இவ்வகையில் இன்று கிடைப்பது பூ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் எழுதிய "விநாயகர் திரிபு வெண்பா அந்தாதி" என்ற நூலாகும்.

ஆ. யகம அந்தாதி

யமகம் என்ற சொல்லிற்கு நா. கதிரைவேற் பிள்ளையின் தமிழ் மொழியகராதி "வந்த சொல்லே வருதல்" என்ற பொருளைக் குறிக்கும். எனவே பாவின் அமைப்பால் ஏற்பட்ட பெயர்ச் சொல்லாக இச்சொல் அமைகிறது. அந்தாதி இலக்கியத்திற் முதற் சீரின் முதல் எழுத்து மாறி பிற எழுத்து மாறாமல் வருவது திரிபு அந்தாதி என்பதுபோல முதலடியின் முதல் சீரே ஏனை நான்கடிகளின் முதல் சீராக அமைந்தால் அது யமக அந்தாதி ஆகின்றது. அதாவது முதல் எழுத்து மாறி வருவது திரிபு அந்தாதி - முதல் எழுத்து மாறாமல் வருவது யமக அந்தாதி.

எனவே வந்த சொல்லும், தொடரும், மீண்டும் வந்து பொருள் நிலையில் வேறுபட்டு வருவது யமக அந்தாதியாகும். இவ்வகை அந்தாதிகள் பல கிடைத்துள்ளன. அதிலும் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இத்தகைய அந்தாதியாக 3 நூல்கள் பாடியிருப்பது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும்.

"படிகடந் தான்திரு வேரக ணாமம்பல் காலுநெஞ்சே
படிகடந் தானிலை யென்றுன்ன நான்கு பதங்களெனும்
படிகடந் தானந்த முத்தியைச் சேர்வைமெய்ப் பத்திதனிற்
படிகடந் தான மெனவருந் தாலென் பயன்தருமே"

என்பது அவரின் திருவேரக யமக அந்தாதியின் இருபத்தோராம் பாடலாகும். நான்கடியிலும் "படிகடந்" என்ற சொல்லே வந்துள்ளது. முதல் அடிச்சொல் படி - என்பது படித்தல் தொழிலையும் கடந்தான் - உலகங் கடந்தான் என்பதனையும் சுட்டுகிறது. இரண்டாம் அடியில் படிகடந்தான் - படிகள் தந்தான் என்ற பொருளைத் தருகிறது. மூன்றாம் அடியில் நான்கு பதங்கள் எனும் படிகடந்து என்ற நிலையில் படி - ஏறும்படியைக் குறிக்கிறது. நான்காம் அடியில் படி என்றும் கடம் என்றும் பிரிக்கப் பெற்று படி - அழுந்து என்றும், கடம் - காடு என்றும் பொருள் தருகிறது. இவ்வாறு சொல் மாறாது வந்து - பொருள் வேறுபட்டு வருவது யமக அந்தாதியாகும்.

இவ்வந்தாதி வகையில் சித்திரமாக அமைந்த சித்திர யமக அந்தாதி அமையும். தொழூவூர் வேலாயுத முதலியார் அவர்கள் எழுதிய 'சித்திர யமக அந்தாதி' என்ற நூல் இவ்வகையில் குறிப்பிடத் தக்கதாகும்.

இ. நிரோட்டக யமக அந்தாதி

எழுத்து மாறி - எழுத்து மாறாமல் வருகின்ற அமைப்பை அடுத்து இன்னென்ன எழுத்துக்கள் வாராமல் பாட வேண்டும் என்ற புது அமைப்பு ஒன்று ஏற்பட்டது. அவ்வகை அமைப்பே நிரோட்டகம் ஆகும்.

1. "இதழ் குவிந்தியையாது இயல்வது நிரோட்டியம்"[14]

2. "இதழ் குவியா எழுத்து எடுத்துப் பாடுவது அது நிரோட்டகமென்று அறையப் படுமே"[15]

3. "பாதம் உ, ஊ, ஒ, ஔ, ப, ம, வ, விசை நூற்று பத்தொன்பான் எழுத்தில் நிரோட் டகங் கரந்திசையே"[16]

என்று இலக்கணங்கள் விதி வகுத்துள்ளமையால் நிரோட்டகம் என்பது நிர் + ஓட்டகம் என்று பிரிந்து - (ஓட்டம் - உதடுகள் நிர் - இன்மை) உதடுகள் ஒட்டாதது என்று பொருள் பட்டு உதடு ஒட்டும் எழுத்துகள் இல்லாமல் பாடவேண்டும் என்பது பெறப்படுகின்றது. உ, ஊ, ஒ, ஓ, ஔ, ஆகிய உயிர் எழுத்துக்கள் ஐந்தும், ப, ம, வ, நீங்கிய 15 மெய்யெழுத்துக்களால் உண்டான 75 உயிர் மெய் எழுத்துகளும், ப, ம, வ வால் உண்டான மூன்று மெய்யெழுத்துக் களும், இந்த மூன்று மெய்யெழுத்துக்களால் உண்டான (3ஒ12 - 36) உயிர்மெய் எழுத்துக்களும் சேர்ந்து மொத்தம் 5+75+3+36 ஆக 119 எழுத்துக்கள் இல்லாமல் பாடுவது நிரோட்டகமாகும்.

யமக அந்தாதியோடு இந்த நிரோட்டக அணி சேர்ந்து நிரோட்டக யமக அந்தாதியெனவும் வழங்கப்படுகிறது. இந்த நிரோட்டக யமக அந்தாதியைப் நிரோட்டகம் என்ற வட சொல்லாக இருப்பதால் இதழ் அகலந்தாதி என்று குறிப் பிடுகின்ற மரபு பிற்காலத்தில் தோன்றியது. எனவே நிரோட்டக யகம அந்தாதியையும், இதழ் அகல் அந்தாதியையும் நாம் ஒன்றாகவே கொள்ளலாம். இவ் அந்தாதி வகையில் சிவப்பிரகாசரின் செந்தில் நிரோட்டகயமக அந்தாதி குறிப்பிடத் தக்கதாகும். அதுபோலத் தண்டபாணி சுவாமிகளின் தில்லை இதழ் அகல் அந்தாதி அரங்கத்து இதழ் அகல அந்தாதி, நெல்லை இதழ் அகல் அந்தாதி ஆகிய மூன்று அந்தாதிகளும் குறிப்பிடத் தக்கன ஆகும். இவ் வந்தாதிகளை எல்லாம் அவற்றின் அமைப்பின்படி காணுகின்ற பொழுது இதழகல் அந்தாதி 30 பாடல்களைக் கொண்டு விளங்க வேண்டும் என்பதுபோல் தோன்றுகிறது. ஏனென்றால் சிவப்பிரகாசரின் அந்தாதியிலும், தண்டபாணி சுவாமிகளின் அந்தாதிகளிலும், கார்த்திகேய முதலியாரின் கச்சி இதழ் அகல் அந்தாதியிலும் 30 பாடல்களே அமைந்துள்ளன. நிரோட்டக அந்தாதிக்கு ஓர் எடுத்துக்காட்டு.

"சத்திக் கரத்த னகச்சேயங் கத்தினைத் தந்தனனற்
சத்திக் கரத்த னகச்சிலை யாளிதன் றாளிணைநே
சத்திக் கரத்த னகத்தியைந் தேத்தரன் தந்தகதிர்ச்
சத்திக் கரத்த னகசெந்தி லாய்நின் சரண்சரணே."

இப்பாட்டில் மேற்குறிப்பிட்ட எழுத்துக்கள் வாராமையை நாம் உணரலாம். இவ்வகையில் ஏகத்தாள் இதழ் அகலந்தாதி என்ற வகையும் அடங்கும். ஏகத்தாள் என்பது நான்கடியும் ஒரே மாதிரி யாக அமைவது. முதலடியில் என்ன சொற்கள் அமைந்துள்ளனவோ அதே சொற்கள் நான்கடியிலும் அமைந்திருப்பதாகும். ஆனால் சொல்லைப் பிரித்துப் பொருளை வேறுபடுத்துவதுண்டு.

"கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங் கடைத்தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங் கடைத்தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங் கடைத்தகைத்தே
கந்தனை யெண்ணிக் கனியாத சித்தங் கடைத்தகைத்தே"

(தண்டபாணி சுவாமிகள் இதழ் அகல் அந்தாதி, பா. 4)

"செய்வன மாதவ நாகையர் சீர்பதச் சேகரமே
செய்வன மாதவ நாகையர் சீர்பதச் சேகரமே
செய்வன மாதவ நாகையர் சீர்பதச் சேகரமே
செய்வன மாதவ நாகையர் சீர்பதச் சேகரமே"

(நெஞ்சை யள்ளும் நாகையந்தாதி பா. 51)

என்ற இதழ் அகல் அந்தாதிப் பாடல்களை எடுத்துக் காட்டாகக் கூறலாம். இந்த ஏகத்தாள் இதகலழந்தாதியை ஏகபாத நூற்றந்தாதி எனக் குறிப்பிடுவதுண்டு. சித்திரக் கவியில் ஒரு வகையாகவும் இவ் அந்தாதியைக் குறிப்பர்.[17]

ஈ. கொம்பிலா வெண்பா அந்தாதி

இதழ் குவிந்து ஒலிக்கும் எழுத்துக்களைப் போலக் கொம்பெழுத்துக்கள் நீக்கப்பெற்று எழுத்துக்களால் பாடப் பெறுவது இவ்வந்தாதியாகும். இவ்வந்தாதி தனியாக இப்பொழுது கிடைக்கப் பெறவில்லை. ஆய்வு நூல்களில் குறிக்கப் பெற்றுள்ளது. சென்னை சைவ சித்தாந்தக் கழகத்தார் வெளியிட்டுள்ள தமிழ்ப்புலவர் அகர வரிசை நூலில் இதுபற்றிய குறிப்பு காணப்பெறுகிறது. "திருச்சுரியற் கொம்பிலா வெண்பா அந்தாதி" என்ற நூல் இவ்வகை அந்தாதியாக அந்நூலில் குறிக்கப் பெற்றுள்ளது.

"காரணா நான்மறையும் காணா தரற்றுகின்ற
பூரணா புன்னைவனம் புக்கவா - தாரணத்த
ருன்னு வடிவுடையா யுண்மா சறவருளன்
பின்னுனதாள் யான்கைப் பிடித்து" (39)

இவ்வெண்பா மேற்குறிப்பிட்ட நூலில் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு கொம்பில்லாமல் பாடப்பெறுவது என்பது ஒரு கடினமான பயிற்சியேயாகும். இதழ் அகல் அந்தாதியின் வளர்ச்சியாக இவ்வந்தாதி வகையைக் கொள்ளலாம். இத்தகைய அமைப்பில் இன்னும் பல நூல்கள் வெளிவந்திடின் இவ்வந்தாதியும் இலக்கிய உலகில் பெரும் புகழைப் பெறும்.

இவ்வாறு எழுத்தமைப்பில் ஏற்பட்ட அந்தாதிகளை நாம் நான்கு வகையாகப் பிரித்துக் காண முடிகிறது. இந்த நான்கு வகையும் எழுத்துக்களின் அமைப்பைக் கொண்டு அமைந்தவையாகும். இவை ஒரு புறம் இருக்க எழுத்தைப் பற்றியே கூறுகின்ற அந்தாதிகளும் உண்டு. ஆறெழுத்து அந்தாதி என்பது இப்பொழுது கிடைக்கின்ற அந்தாதிகளில் ஒன்று. இவ்வந்தாதி பொருள் அடிப்படையில் உள்ள அந்தாதி என்றாலும் ஆறெழுத்தாகிய சரவணபவ என்னும் மந்திரத்தைப் போற்றிப் புகழ்வதால் இவ்வகையில் நாம் தனித்துச் சேர்க்கலாம். இந்நூல் அகத்திய முனிவரால் அருளிச் செய்யப் பெற்றது எனப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. 104 கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டு இந்நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் சங்ககால அகத்தியராக இருக்க முடியாது என்பதை நூலின் பாக்களின் அமைப்பு, சொல்லமைப்பு ஆகியவை உறுதிப் படுத்துகின்றன. பிற்காலத்தில் புலவர் ஒருவர் தன் நூலிற்குப் பெருமை ஏற்படவேண்டும் என்பதற்காகப் பண்டைக்காலப் புலவரின் பெயரைக் கையாண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

இவ்வாறு எழுத்தமைப்பினை உடைய அந்தாதிகள் அந்தாதி வகைகளில் ஒரு பகுதியாக அமைந்து இலக்கியச் சுவையைத் தருகின்றன எனலாம்.

2. சீர்நிலையில் அமைந்த அந்தாதிகள்

எழுத்துக்களைக் கொண்டு அமைந்த அந்தாதிகளைப் போலச் சீர் அமைப்புகளைக் கொண்டு சில அந்தாதிகள் அமைந்துள்ளன. இருசீர் அந்தாதி, முச்சீர் அந்தாதி என்பன இவ்வகை அந்தாதியில் குறிப்பிடத் தக்கனவாகும்.

வஞ்சிப்பாவின் இனங்களால் இவ்வந்தாதி வகை பெரும்பாலும் அமைகின்றன எனலாம். அந்தாதியைப் பாடுகின்ற பொழுது வெண்பா, கலித்துறை ஆகிய பாவினங்களைப் பயன் படுத்த வேண்டும் என்பது தொடக்ககால விதியாகும். ஆனால் அந்தாதி, புலவர் பெருமக்களிடையே போற்றி ஏற்றுக் கொள்ளப்பட்ட காலத்தில் - புதுப்புது அமைப்புக்கள் தொடங்கவேண்டும் என்ற நிலையில் யாப்பு வகையில் மாற்றங்கள் எழுந்தன. வெண்பா, கலித்துறை என்ற பாவினங்களை மட்டும் கொள்ளாது ஆசிரியப் பாவினம் அதிகம் பயன்படுத்தப் பெற்றது. அதன் பின்னர் எஞ்சிய பாவாகிய வஞ்சிப் பாவும் கையாளப் பெற்றது. வஞ்சிப்பாவைப் பயன்படுத்தியதில் வடலூர் வள்ளற் பெருந்தகை மிகவும் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவரின் இரண்டாம் திருமுறையில் அமைந்த முத்தி உபயம் என்ற பகுதி பத்துப் பாடல்கள் கொண்டு விளங்குகிறது. அப் பத்துப்பாடல்களும் அந்தாதி அமைப்பில் அமைந் துள்ளன. பாடல்கள் ஒவ்வொன்றும் வஞ்சித்துறைப் பாடல்களாகக் காணப்பெறுகின்றன.

"முத்தி வேண்டுமேல்
பத்தி வேண்டுமால்
சத்தி யம்இது
புத்தி நெஞ்சமே" (3)

என்பது மூன்றாவது பாடலாகும். இதனையடுத்த நான்காவது பாடல்,

"நெஞ்ச மேஇது
வஞ்சு மேஅல
பிஞ்ச கன்பதம்
தஞ்சம் என்பதே" (4)

என அந்தாதியாக அமைந்துள்ளது. இவ்வாறே பத்துப் பாடல்களும் அமைந்துள்ளன. வஞ்சித்துறை இரு சீர்களில் ஆவது என்பதால் இவ்வந்தாதியை இருசீர் அந்தாதி என அமைக்கலாம். வஞ்சித்துறை அந்தாதி என்று கூறுவதைவிட இருசீர் அந்தாதி என்று கூறுவதே சாலச் சிறப்பு என்பது போல இதே அமைப்பில் தற்காலக் கவிஞர்களில் ஒருவராகிய கி.வ. ஜகந்நாதன் அவர்கள் "இருசீர் அந்தாதி" என்ற நூலைப் படைத்துள்ளார்கள். இந்நூலில் நூறு பாடல்கள் உள்ளன.

"குகனைச்சிவனார்
மகனை உரும்பை
யகமுற் றொளிரும்
சுகனைப் பணியே" (11)

பணியொன் றியவர்
துணிவொன் றுபவர்
அணியும் உரும்பை
மணியன் னவன்பால்" (12)

என்பன போன்ற பாடல்கள் நூறு அமைந்துள்ளன. எனவே இரு சீர் அந்தாதி என்ற இவ்வகை பிற்கால அந்தாதி வளர்ச்சியைக் காட்டிச் சிறப்புறுகிறது எனலாம்.

முச்சீர் அந்தாதி

இருசீர் அந்தாதியைப் போன்று பிற்கால யாப்பு அமைப்பில் வஞ்சி விருத்தம் புலவர்களால் கையாளப் பெற்று முச்சீர் அந்தாதி உலா வரத் தொடங்கிற்று. இவ்வகை அந்தாதியில் கி.வ. ஜகந்நாதன் அவர்களின் சிதம்பர சுப்பிரமணியன் புகழ்க் கதம்பம் என்ற நூலில் இடம் பெற்ற முச்சீர் அந்தாதியைக் குறிப்பிடலாம்.

"கூறும் கருணைக் கோலன்
சீரொன் றுரும்பைச் சீவன்
யாரொன் றுதுயர் போற்றும்
தீரன் அடியைச் சேர்க"

என்பது ஐந்தாம் பாடலாகும். இதில் உள்ள ஈற்றுச் சீரால் ஆறாம் பாடல்.

"சேரும் பொருளும் தேரும்" எனத் தொடங்கி நிகழ்கிறது. இவ்வாறு முச்சீர் அந்தாதி பிற்கால அந்தாதி வகைகளுள் ஒன்றாக விளங்குகிறது.

நாற்சீர் அந்தாதி

அந்தாதி பாடுதற்குக் கட்டளைக் கலித்துறை சிறப்பாகப் போற்றப்பட்டுப் பயன்படுத்தப் பெற்ற பிறகு புதிய அந்தாதி படைக்க முனைந்த பாவலர்கள் கலிவிருத்தத்தையும் பயன்படுத்தினர். கலிவிருத்தம் நான்கு சீர்களால் அமையப் பாடப் பெறுவது. எனவே நான்குசீர் கொண்ட பாக்கள் நூறு பாடி அணி சேர்க்கப் பெற்றது. அவ்வகையில் கி.வ. ஜகந்நாதன் குறிப்பிடத் தக்கவர் ஆவார். அவர் இயற்றிய சிதம்பரம் சுப்பிரமணியம் புகழ்க் கதம்பம் என்ற நூலில் நாற்சீர் அந்தாதி

இடம் பெற்றுள்ளது. இவ்வாறு சீர் அந்தாதிகள் அமைந்து அவ்வகையினைச் சிறப்புப் படுத்துகின்றன.

3. அடிநிலையில் அமைந்த அந்தாதிகள்

எழுத்தோ அல்லது அசையோ அல்லது சீரோ ஓர் பாடலின் ஈற்றில் நின்று அடுத்த பாடலுக்கு முதலாக வருவது அந்தாதியின் பொது இலக்கணமாகும். அதனுடைய வளர்ச்சியில் ஒரு பாடலின் ஈற்றடி அடுத்த பாடலின் முதலடியாக வருமானால் அது அடியின் அமைப்பில் அமைந்த அந்தாதியாகச் சொல்லலாம். ஒரே செய்யுளில் ஓர் அடி திரும்ப வரும்பொழுது ஏகத்தாள் அந்தாதி ஆகிறது. அதுபோல முதற்பாடலின் ஈற்று அடி அடுத்த பாடலில் முதலடியாக வரும்பொழுது அது அடியமைப்பில் வந்த அந்தாதியாக நாம் கூறலாம்.

4. பாவின் அமைப்பில் அமைந்த அந்தாதிகள்

அந்தாதியின் தொடக்க காலம் பா முறைகளையும் வகுத்துக் கொடுத்திருக்கிறது. அந்தாதி பாடவேண்டும் என்று சொன்னால் வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று விதி வகுக்கப்பட்டிருந்தது. அந்த அமைப்பில் வெண்பா, கட்டளைக் கலித்துறை பயன்படுத்தப் பெற்று நூற்றுக்கணக்கான அந்தாதிகள் தோன்றின. காலப்போக்கில் பின்னர் விருத்தம், கலிவிருத்தம், வஞ்சிப்பா, அகிய பா வகைகளாலும், அந்தாதி நூல்கள் எழுந்துள்ளன. இவ்வகையில் வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, அகவற்பா அந்தாதி, கலிவிருத்த அந்தாதி, வஞ்சிப்பா அந்தாதி, மும்மாலை அந்தாதி என்பன அடங்கும்.

வெண்பா அந்தாதி

வெண்பா யாப்பால் அந்தாதியின் பாடல்கள் அமைந்திருக்குமானால் வெண்பா அந்தாதியாகும். வெண்பா அமைந்த அந்தாதிகளின் பெயர்களிலேயே வெண்பா என்ற சொல்லைச் சேர்த்து வழங்குவது உண்டு. அழகை வெண்பா அந்தாதி, அறுபத்து மூவர் திருநட்சத்திர வெண்பா அந்தாதி, ஆதி வயலூர் வெண்பா அந்தாதி, ஆளுடையப் பிள்ளையார் வெண்பா அந்தாதி, எறும்பீச்சுரம் வெண்பா அந்தாதி, கம்பர்

வெண்பா அந்தாதி, கயிலை வெண்பா அந்தாதி, கும்பேசர் வெண்பா அந்தாதி, குருவாயூரப்பன் வெண்பா அந்தாதி, சற்குரு வெண்பா அந்தாதி, சித்திர வெண்பா அந்தாதி போன்ற அந்தாதிகள் தங்கள் பெயரியிலேயே வெண்பா யாப்பைக் காட்டி நிற்கின்றன. வேறுசில அந்தாதிகள் வெண்பா யாப்பில் அமைந்தாலும் வெண்பா என்ற பெயரை அவை பெறவில்லை. எடுத்துக் காட்டாகப் பெரிய திருவந்தாதி எனப் பெயர் பெற்ற அந்தாதி 87 வெண்பாக்களையும், இரண்டாம் திருவந்தாதி என்று பெயர் பெற்ற பூதத்தாழ்வார் திருவந்தாதி 100 வெண்பாக்களையும், மூன்றாம் திருவந்தாதி எனப்பெயர் பெற்ற பேயாழ்வார் திருவந்தாதி 100 வெண்பாக்களையும், தேசீய நூற்றந்தாதி எனப்பெயர் பெற்ற மன்னப்ப ஐயங்கார் திருவந்தாதி 100 வெண்பாக்களையும், அருணகிரி அந்தாதி எனப் பெயர் பெற்ற குகை நமச்சிவாயர் பாடிய அந்தாதி 100 வெண்பாக்களையும் பெற்று விளங்குகின்றன. இவ்வாறு வெண்பா என்ற பெயரைப் பெற்றும், பெறாதும் கணக்கற்ற அந்தாதி நூல்கள் விளங்குகின்றன எனலாம்.

கலித்துறை அந்தாதி

அந்தாதிக்குரிய மற்றொரு பாவினம் கட்டளைக் கலித்துறையாகும். கிடைத்திருக்கும் அந்தாதிகளில் தொன்மையான அற்புதத் திருவந்தாதி வெண்பா யாப்பில் அமைய அடுத்த தொன்மையான பொன்வண்ணத்தந்தாதி கட்டளைக் கலித்துறையால் அமைந்துள்ளது. கட்டளைக் கலித்துறை எழுத்து எண்ணிப் பாடப்பெறும் பா வகையாகும். ஐந்து சீர்களைக் கொண்ட இப்பாவினத்தால் அந்தாதிகள் பாடப்பெற்றுப் புலவர் தம் திறனை வெளிப்படுத்தின. வெண்பா அந்தாதியைப் போல இவ்வகையிலும் கலித்துறை என்ற பெயரைப் பெற்றும் பெறாதும் இவ்வகை அந்தாதிகள் அமைந்துள்ளன. கலித்துறை அந்தாதி என்று ஓர் அந்தாதி தத்துவராய சுவாமிகளால பாடப்பெற்று விளங்குகின்றது. பாவின் பெயரை மட்டும் கொண்டு வழங்கப்படும் அந்தாதி இது ஒன்றேயாகும். அவினாசி கலித்துறை அந்தாதி, உலகம்மன் கலித்துறை அந்தாதி, கயிலை கலித்துறை அந்தாதி, காந்திமதி அம்மன் கலித்துறை அந்தாதி, சிவகாசி கலித்துறை அந்தாதி,

சோளீசர் கலித்துறை அந்தாதி, திருப்பேரூர்க் கலித்துறை அந்தாதி போன்ற அந்தாதிகள் கலித்துறை என்ற பெயரைப் பெற்று விளங்குகின்றன.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய பாலைவனப் பதிற்றுப் பத்தாந்தி நூறு கட்டளைக் கலித் துறைகளைப் பெற்றும், நைனார் ஆச்சாரியார் எழுதிய பிள்ளையந்தாதி 20 கட்டளைக் கலித்துறைகளையும், சைவ எல்லப்ப நாவலர் பாடிய திருவருணை அந்தாதி 100 கட்டளைக் கலித்துறைகளையும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத் தொண்டர் திருவந்தாதி 89 கட்டளைக் கலித்துறைகளையும் பெற்று விளங்குகின்றன. இவைகள் கலித்துறை என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளாதவை. இவைகளை அடி யொற்றி பிற்காலப் புலவர்கள் பலரும் கட்டளைக் கலித் துறையால் அந்தாதி அமைப்புக்களைப் பாடித் தந்துள்ளார்.

ஆசிரியப்பா அந்தாதி

அந்தாதியின் செல்வாக்கு மிக்கோங்கிய சிற்றிலக்கிய காலமாகிய இடைக்காலத்தில் அந்தாதி அமைப்பில் சில மாற்றங்கள் தோன்றின. அம்மாற்றங்களில் ஒன்று பா அமைப்பை வளர்த்துக் கொண்டதாகும். அதாவது வெண்பா, கட்டளைக் கலித்துறைகளுக்குப் பதிலாக ஆசிரிய விருத்தங்களைக் கொண்டு பாடுகின்ற வழக்கம் ஏற்பட்டது. விருத்தப் பாக்களின் செல்வாக்கு சங்க காலத்திலேயே இருந்தாலும், தேவார காலத்தில் தான் தமிழகத்தில் மிக்கோங்கி விளங்கிற்று. எனவே பிற்கால அந்தாதி இலக்கியங்கள் பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களால் பாடப் பெற்றன. விருத்தம் என்ற பெயரோ - ஆசிரியம் என்ற பெயரோ நூல்களின் பெயர்களில் இடம் பெற்றில. ஆயின் பிற்காலப் பதிற்றுப் பத்தந்தாதியில் ஆசிரியப்பாவின் விருத்த அமைப்பு தவறாது இடம் பெற்றுள்ளது.

கலிவிருத்த அந்தாதி

கலிவிருத்தப் பாக்களால் அமைந்த அந்தாதியே கலிவிருத்த அந்தாதி என்று கூறப்பெறும். அவ்வகை அந்தாதிகளில் இப்பொழுது நமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள

அந்தாதிகளில் மு. ரா. அருணாசலக் கவிராயர் பாடிய சிவகாசிக் கலிவிருத்த அந்தாதி சிறப்புடையதாகும்.

வஞ்சிப்பா அந்தாதிகள் சீரமைப்பில் அமைத்துக் காட்டப் பெற்றுள்ளன. மும்மாலை அந்தாதி என்பது மும்மணிக்கோவை போன்று மூன்று பாவினங்களால் பாடப்பொற்ற அந்தாதி யாகும். கலித்துறை, விருத்தம், வெண்பா என்ற மூன்று பா வகையினால் அந்தாதி பாடப்படுமானால் அவ்வந்தாதியை இப்பெயரால் குறிப்பிடுவர். இப்பொழுது கிடைக்கப் பெற்ற அந்தாதியில் திருமலையப்ப முதலியார் எழுதிய தளவாய் மும்மணியந்தாதியும், குழந்தைக் காலத்தில் வென்றார் பாடிய பஞ்சாக்ஷர மும்மணியந்தாதியும் சிறப்புடையன ஆகும்.

இவ்வாறு பாவின் அமைப்புகளில் பெயரைப் பெற்றும் பெறாமலும் விளங்கிச் சிற்றிலக்கியத்தின் செல்வங்களாகக் காட்சி தருகின்றன அந்தாதி நூல்கள்.

5. ஓசை நிலையில் அமைந்த அந்தாதி

பாவகைகளின் இலக்கணங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க இலக்கணம் ஓசை பற்றிய இலக்கணமாகும். ஒவ்வொரு பாவகைக்கும் தனித்தனி ஓசைகளைத் தமிழ் இலக்கண நூலார் வகுத்துள்ளனர். ஓசை என்பது ஒலியின் கூட்டமாகும். எனவே ஓசைக்கு இன்றியமையாத ஒலிகள் அந்தாதிப் புலவர்களால் பெரிதும் போற்றப்பட்டது. ஒலி அடிப்படையில் சில அந்தாதி களை அமைத்து ஓசைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இத்தகைய ஓசை பற்றிய அந்தாதியில் குறிப்பிடத் தக்கன ஒலியந்தாதி, கலியந்தாதி, பல்சந்த அந்தாதி என்பனவாகும்.

ஒலியந்தாதி

பாட்டியல் நூல்கள் குறிப்பிடும் மூவகை அந்தாதிகளில் ஒலியந்தாதி மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். பதினாறு கலை ஓரடியில் வைத்து நாலடிக்கு அறுபத்த நான்கு கலையாக வகுத்துப் பல சந்தமும், வண்ணமும் அமையப்பெற்று முப்பது செய்யுட்களால் பாடப் பெறுவது ஒலியந்தாதியாகும். இவ்விலக்கணத்தைத் தவிர வெண்பா அகவல், கலித்துறை என்ற பாவகைகளைப் பத்துப் பத்துச் செய்யுட்களில் வைத்து

அந்தாதித் தொடரமையப் பாடுவது இவ்வகையந்தாதி என்று பிரபந்தத் தீபம் கூறுகிறது. இவ்வந்தாதி வகையில் முதல் ஒலியியல் அந்தாதி, நடு ஒலியியல் அந்தாதி, பேரொலியியல் அந்தாதி ஆகிய வகைகளையும் அடக்கலாம். தண்டபாணி சுவாமிகள் பாடிய ஒலியந்தாதிகள் சிறப்பிடம் பெறுகின்றன. சிவகிரி ஒலியியலந்தாதி (ஆசிரியர் பெயர் தெரியவில்லை) முருகதாசர் பாடிய ஒலியியலந்தாதி, ஆகியவை இவ்வகை அந்தாதியைப் புலப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

கலியந்தாதி

கலியந்தாதி பற்றி பன்னிரு பாட்டியல் தெளிவாக எடுத்தியம்புகிறது. வல்லின, மெல்லின, இடையின எழுத்தும், புள்ளி மருங்கு போகாது ஒன்றிக் குறில் எனின் குறிலே, நெடில் எனின் நெடிலே பொருந்திய நாற்கலை கொண்டு ஓர் அடியாய் திருந்தும் இவ்வகை நான்கடியாகி, ஓரொலியாகி, எண்ணான்காகி, கலையோடு பொருந்தி, குறிலும் நெடிலும் முதல் முறைவரின் அவ்வெழுத்தாகி முப்பது கட்டளை மிக்கது கலியந்தாதியாகும், என்று பன்னிரு பட்டியலின் 157-ஆம் சூத்திரம் கூறுகிறது. இக்கலியந்தாதியில் மு.ரா. அருணாசலக் கவிராயர் பாடிய சிவகாசிக் கலியந்தாதி குறிப்பிடத் தக்கதாகும்.

பல்சந்த அந்தாதி

ஓசை அடிப்படையில் பலவிதமான சந்தங்களை அமைத்து பாடப் பெறுமானால் அவ்வந்தாதிக்குப் பல்சந்த அந்தாதி என்று பெயர். தண்டபாணி சுவாமிகள் பாடிய பதிற்றுப்பத்தந்தாதி யில் பல்சந்த அமைப்பை நாம் காணமுடிகிறது. வண்ணத் தியல்பு பாடிய புலவர் ஆதலால் அவருடைய பாடல்களில் வண்ணங்களாம் சந்தங்கள் கொலுவிருக்கின்றன. திருச்செந்தில் பதிற்றுப் பந்தந்தாதியில் அமைந்துள்ள சந்தங்கள் படித்து இன்புறத் தக்கனவாக அமைந்துள்ளன. சான்றுக்கு இதோ ஓர் பாடல்,

"தனனத் தனனத் தனத்த தனனா"

"பரமுங் குருவும் தகப்பன் அனைநேர்
பலரும் பிறவும் கடுத்த பெரியோர்

சரணங் கதியென் றிருக்கும் அதுவே
தவமென் றுணருந் திறத்தை யருள்வாய்
சரபஞ் சருதின் டிறற்சண் முகனே
சகுணங் களின்மிஞ் சியற்கை யுடையாய்
வரமொன் றியசெந் திலுக்கோர் இறைவா
மதுரம் பொலியுந் தமிழ்க்கொள் குகனே”

இவ்வாறு ஓசையமைப்பில் சில அந்தாதிகள் இயற்றப் பெற்றுத் தனித்தமிழ் ஓசை வளத்தைத் தரணிக்கு எடுத்துக் காட்டியுள்ளன.

6. எண்ணிக்கை அமைப்பில் அமைந்த அந்தாதிகள்

அந்தாதி வகைகளில் பாவகைப் பெயர்கள், இசை வடிவங் களின் பெயர்கள் அமைவதுபோல எண்ணுப் பெயர்கள் அமைந்த சில அந்தாதி நூல்கள் காணப்பெறுகின்றன. அவற்றில் பதிற்றுப் பத்தந்தாதியும், நூற்றந்தாதியும், பதிற்றந்தாதியும் குறிப்பிடத்தக்கனவாகும்.

பதிற்றுப் பத்தந்தாதி

தொடக்கத்தில் குறிப்பிட்ட பாவகையால் அமைந்த அந்தாதி இலக்கியங்கள் பின்னர் காலப் போக்கில் பா வகையில் வளர்ச்சியைப் பெற்றன. வெண்பா, கட்டளைக் கலித்துறை என்பவற்றோடு நின்றிருந்த அந்தாதி இலக்கியங்கள் பின்னர் ஆசிரியப்பா, கலிவிருத்தம், வஞ்சிப்பா என்பவற்றை ஏற்றுக் கொண்டு வளர்ந்தன. அத்தகு நிலையில் ஒரே பா வகையில் யாக்கப் பெற்ற அந்தாதி இலக்கியம் நன்கு வளர்ச்சியுற்று இடைக்காலத்தில் புதியதொரு வடிவத்தைப் பெற்றது. அவ்வடிவமே “பதிற்றுப் பத்தந்தாதி” வடிவமாகும். இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பதிற்றுப் பத்தந்தாதி இலக்கியங் களில் 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அதிவீரராம பாண்டியர் அருளிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி தொன்மை யானதாகும்.

பதிற்றுப் பத்தந்தாதி பல வேறுபட்ட பா வகைகளைக் கொண்ட அந்தாதி இலக்கியமாகும். இன்னும் சொல்லப் போனால் பதிற்றுப்பத்து என்பதற்கு ஏற்ப 10 பா அமைப்புக் களைப் பெற்று விளங்கும் நூல் எனலாம். ஒரு பா வகையில்

அமைந்த காலப்போக்கு கழிய 10 பா வகைகளை அல்லது சந்தங்களைக் கொண்டு விளங்கி பதிற்றுப் பத்தந்தாதி உருவாயிற்று.

குட்டித் திருவாசகம் என்றழைக்கப் பெறும் திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதியில் முதல் பத்துப் பாடல்கள் அறுசீர் விருத்தத்தாலும், அடுத்த பத்துப் பாடல்கள் எழுசீர் விருத்தத்தாலும், அடுத்த மூன்றாம் பத்துப் பாடல்கள் அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலும், நான்காம் பத்து கலி விருத்தத்தாலும், ஐந்தாம் பத்து கொச்சகக் கலிப்பாவாலும், ஆறாம் பத்து எழுசீர் ஆசிரிய விருத்தத்தாலும், ஏழாம் பத்து அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலும், எட்டாம் பத்து கலி விருத்தத்தாலும், ஒன்பதாம் பத்து கலித்துறையாலும், பத்தாம் பத்து எண்சீர் ஆசிரிய விருத்தத்தாலும் அமைந்துள்ளன. இந்நூலில் ஆறு வகையான பா வகை அமைப்பு காணப் பெறுகிறது. இந்நூல் போலப் பின்னர் வந்த பதிற்றுப் பத்தந்தாதி நூல்களில் 4 முதல் 10 சந்தங்கள் அமைந்து புலவர்களின் திறமைகளை வெளிப்படுத்துகின்றன. திரிசிபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி, திருவூறைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருப்பழைசைப் பதிற்றுப் பத்தந்தாதி, பூவாளூர் பதிற்றுப் பத்தந்தாதி, மதுரை திருஞான சம்பந்தரின் பதிற்றுப் பத்தந்தாதி ஆகியவை பத்து வேறுபட்ட சந்தங்களைப் பெற்று பிள்ளையவர்களின் நுண்மான் நுழைபுலத்தைக் காட்டுகின்றன.

இவ்வகை நூல்களில் சந்தங்களில் மட்டும் வேறுபாடு அமையாமல் பா அமைப்பாலும் வேறுபாடு காணப் பெறுகின்றன. யமகம், திரிவு ஆகிய அமைப்புக்களும் பதிற்றுப் பத்தந்தாதியினிடையே காணப்பெறுகின்றன. சிவஞான முனிவரின் இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் 90- ஆவது பாடல் திரிபு அந்தாதியாகும். அதுபோலக் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் 55 - ஆம் பாடல் யமக அந்தாதியாகும். இவ்வாறு பதிற்றுப் பத்தந்தாதியில் பா வகையிலும், பா அமைப்பிலும் கலப்புகள் ஏற்பட்டுப் படிப்போர் உள்ளத்திற்குச் சுவையூட்டின.

நூற்றந்தாதி

அந்தாதி என்ற பெயரில் விளங்குகின்ற இலக்கியங்களோடு நூற்றந்தாதி என்ற பெயருடைய இலக்கியங்களும் அந்தாதி வரிசையில் இடம் பெறுகின்றன. அந்தாதி இலக்கியங்களுக்கும் நூற்றாந்தாதி இலக்கியங்களுக்கும் பெயரளவில்தான் வேறுபாடு தெரிகிறதே தவிர பா வகையில் அல்லது பா அமைப்பிலோ வேறுபாடு தெரியவில்லை. தொடக்க காலத்தில் அந்தாதி என்பது நூறு பாடல்களைக் கொண்டு விளங்கிற்று. பின்னர் காலம் வளர வளரப் பாடல் எண்ணிக்கையில் குறைந்தும், கூடியும் விளங்கிய காரணத்தால் நூறு பாடல்களைத் திட்டவட்டமாகப் பாடிய புலவர்கள் தங்கள் நூலின் திறனை அறிவிக்க வேண்டும் என்ற கருத்தால் நூறு என்ற எண்ணுப் பெயரை அந்தாதிக்கு அடைமொழியாக இணைத்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இவ்வகை அந்தாதிகளில் தொன்மை படைத்ததாக விளங்குவது பதினோராம் நூற்றாண்டில் திருவரங்கத்து அமுதனாரால் வெளியிடப் பெற்ற இராமானுச நூற்றந்தாதியாகும். அடுத்து விளங்குவது திருநூற்று அந்தாதி என்ற பெயரில் அமைந்துள்ள 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அவிரோதநாதர் எழுதிய நூலாகும். இந்நூல் அருகக் கடவுள்மீது பாடப்பெற்ற சமண இலக்கியமாகும், இன்று பழைய உரையுடன் கூடிய ரா. ராகவையங்கார் பதிப்பித்த பதிப்பு கிடைக்கிறது.

பதிற்றுப் பத்து அந்தாதிக்கும், நூற்றந்தாதிக்கும் வேறுபாடு பா வகையே ஆகும். நூற்றந்தாதியில் ஒரே பா வகை காணப் பெறுகிறது. பதிற்றுப் பத்தந்தாதியில் பல பா வகைகள் காணப் பெறுகின்றன. பாடல்கள் நூறினையே இரண்டு வகைகளும் பெற்று விளங்குகின்றன. சங்க இலக்கியங்களைத் தொகுத்த வர்கள் புறநானூறு, அகநானூறு என எண்ணிக்கையைச் சேர்த்துத் தொகை நூல்களுக்குப் பெயரிடுவதில் விருப்பம் கொண்டதுபோல அந்தாதி இலக்கிய வளர்ச்சி நிலையில் இவ் இலக்கியங்களை யாத்த புலவர்களுக்கு எண்ணுப் பெயர்களை நூல்களில் சேர்த்துக் கொள்ள விருப்பம் கொண்டனர் என்பதை இவ்வகை நூல்கள் காட்டுகின்றன.

நூற்றந்தாதிக்கு மற்றொரு பெயராகச் சதகத்தந்தாதி என்ற பெயரும் வழங்கப் பெற்றிருக்கிறது. இவ்வகைப் பெயரைப் பயன்படுதிதியவர் தண்டபாணி சுவாமிகள் ஆவார்கள்.

பதிற்றந்தாதி

மிகவும் எண்ணிக்கையில் குறைவான அந்தாதி இலக்கியம் பத்துப் பாடல்களைக் கொண்ட பதிற்றந்தாதியாகும். பத்து வெண்பாக்களையோ, கலித்துறையினையோ கொண்டு விளங்குவது இவ்வகையாகும். இருபா இருபஃது, ஒருபா ஒருபஃது என்பது போல இவ்வகை நூலும், பதிற்றந்தாதி என எண்ணிக்கையால் பெயர் பெற்று விளங்குகிறது. கு. ராமலிங்க முதலியார் என்பவரால் எழுதப்பெற்ற பதிற்றந்தாதி என்ற நூல் குறிப்பிடத் தக்கதாகும். பெரியசாமிப் பிள்ளை என்பவரால் பாடப்பெற்ற பாலாம்பிகை பதிற்றந்தாதி என்பது பெயரால் பத்து என்ற எண்ணிக்கையைப் பெயராகப் பெற்றிருந்தாலும் இருபது பாடல்கள் அந்நூலில் காணப்பெறுகின்றன. எனவே பெயருக்கும் அமைப்புக்கும் வேறுபட்டுக் காணப்பெறுகின்ற அந்தாதியாகும் இது. இவ்வகை அந்தாதிகள் மிக அருகிக் காணப்பெறுகின்றன. இவ்வாறு எண்ணிக்கை அந்தாதிகள் ஏற்றமும், பீடும் பெற்றுச் சிற்றிலக்கிய வகைக்கு அழகு சேர்க்கின்றன.

7. பொருள் அடிப்படையில் அமைந்த அந்தாதிகள்

அந்தாதி இலக்கியங்களின் பாடுபொருள் அடிப்படையில் பெயர் பெற்ற இலக்கியங்களே பெரும்பாலன. இறைமையைப் பாடிப் போற்றிடக் கருவியாகிய அந்தாதி இலக்கியங்கள் கடவுளர் மீதும், கடவுளர்கள் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் மீதும் - கடவுளர்களின் திருவருள் பெற்ற அடியார்கள் மீதும் போற்றிப் பாடிடவே எழுந்தன என்றால் அது மிகையாகாது. கிடைத்திருக்கும் அந்தாதி இலக்கியங் களைப் பகுத்துக் காண்போமேயானால் ஒன்று இறைவன் மீது பாடப்பெற்றதாக இருக்கும் அல்லது திருத்தல மீதோ அல்லது அடியார்கள் மீதோதான் இருக்கும். மற்ற சிற்றிலக்கியங்களைப் போல மானிடரைப் பாடப் பெரிதும் இவ்வகை பயன்படுத்தப் பெறவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாகச்

சொல்லப் போனால் முடியுடை வேந்தர் காலத்தில் சிறப்புற்றிருந்த அந்தாதி இலக்கியத்தில் மன்னர்மீது பாடிய ஒரு அந்தாதி கூட இன்று கிடைக்கவில்லை. மன்னர் மரபில் தோன்றியவர்கள் பாடிய அந்தாதி கிடைக்கின்றதே தவிர (அதிவீரராம பாண்டியர் பாடிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந் தாதி சேரமான் பெருமாள் பாடிய பொன் வண்ணத்தந்தாதி) மன்னர் மீது பாடப்பெற்ற நூல்கள் கிடைக்காமையை நோக்கும்போது அந்தாதி இலக்கியம் உலகின் அந்தாதியாக விளங்கும் இறைவன் தொடர்பையே பாடு பொருளாகக் கொண்டது எனலாம்.

இவ்வடிப்படையில் கிடைத்திருக்கும் அந்தாதி இலக்கியங்களை இறைவன் மீது பாடப்பெற்ற இலக்கியங்கள் என்றும், திருத்தலங்களின்மீது பாடப்பெற்ற இலக்கியங்கள் என்றும், அடியார்கள் மீது பாடப்பெற்ற இலக்கியங்கள் என்றும், சமயத் தத்துவங்களை விளக்க எழுந்த இலக்கியங்கள் என்றும் பாகுபாடு செய்யலாம்.

இறைவர்கள் மீது பாடப்பெற்ற அந்தாதி இலக்கியங்கள் என்ற நிலையில் சமய வேறுபாடின்றிச் சைவம், வைணவம், சமணம், இஸ்லாம் ஆகிய சமயங்களைச் சார்ந்த இலக்கியங்கள் கிடைக்கின்றன. எனவே எல்லாச் சமயத்தாரும் தத்தம் கடவுளரைப் போற்றிப் பணிந்திட இச்சிற்றிலக்கியத்தைப் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெள்ளிது.

எடுத்துக்காட்டு

1. சிவபெருமான் திருவந்தாதி - கபிலர் - சைவம்.

2. அழகர் அந்தாதி - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் - வைணவம்.

3. திருநூற்றந்தாதி - அவிரோதி நயினார் - சமணம்.

4. முகையிதீன் அப்துல் காதிர் ஆண்டவர் பதிற்றுப் பத்தந்தாதி - அல்லி மரைக்காயர் - இஸ்லாம்.

5. அபிடேக நாதர் அந்தாதி - கிறித்துவம்.

இவ்வாறு அனைத்துச் சமயங்களிலும் அந்தாதி இலக்கியம் விளங்கியிருப்பது நன்கு தெளிவுகிறது.

திருத்தலத்தைப் பற்றி எழுந்த இலக்கியங்கள் தமிழகத்தின் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலங்கள், வைணவத் திருத் தலங்கள், முருகப் பெருமானின் திருத்தலங்கள் என்ற சிறப்புடைத் திருத்தலங்கள் அனைத்தின்மீதும் பாடப் பெற்றுள்ளன. பாடப் பெறாது விடப் பெற்ற திருத்தலங்கள் இல்லை என்றே கூறிவிடலாம். தமிழகத் திருத்தலங்களை மட்டுமல்லாது தமிழகத்தோடு வழிபாட்டுத் தொர்புடைய இலங்கை நாட்டுத் திருத்தலங்கள் மீதும் அந்தாதி நூல்கள் எழுந்துள்ளன. கண்டி அந்தாதி, கல்வளை அந்தாதி, கதிர்காமத்து அந்ததி, திரிகோணமலை அந்தாதி ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கன. ஒரு திருத்தலத்தை மட்டும் பாடாது இருதலங்களைப் பாடுகின்ற முறைமையுண்டு என்பதை கைலைபாதி காளத்திபாதி என்ற அந்தாதியும், இரு தெய்வங்களைப் பாடலாம் என்பதனை திருவாசகமணி பால சுப்பிரமணியம் பாடிய அம்மை பாதி அப்பன் பாதி அந்தாதி என்ற அந்தாதியும், இருசமயங்களைப் பாடலாம் என்பதனை அவர் பாடிய சங்கரன் பாதி - நாராயணன் பாதி அந்தாதியும் நிலை நாட்டுகின்றன.

அடியார்களைப் போற்றி எழுந்த இலக்கியங்கள் அருளாளர்களின் நற்றிறம் போற்றுகின்றன. தொன்மை இலக்கியங்களில் ஒன்றான திருத்தொண்டர் திருவந்தாதி நாயன்மார்களின் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்ந்து வருகிறது. நம்பியாண்டார் நம்பி தொடங்கி வைத்த அப்பணி நாளும் வளர்ந்து - அவரைப் போற்றி வணங்கி அந்தாதிபாடும் அளவிற்குப் பெருமை பெற்றுள்ளது. (நம்பி திருவந்தாதி என்ற ஒரு நூல் கிடைக்கப் பெற்றிருக்கிறது) திருஞான சம்பந்தர் மீது பல அந்தாதிகள் எழுந்துள்ளன. மதுரைத் திருஞானசம்பந்தர் அந்தாதி என்று திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் மதுரை என்ற அடை மொழியோடு அந்தாதி ஒன்று பாடியுள் ளார்கள். ஞானசம்பந்தப் பெருமானின் திருவிளையாடல்களில் மதுரை நிகழ்ச்சிகள் பிள்ளையவர்களின் மனதில் சிறப்பிடம் பெற்றமையை அவ் அடைமொழி காட்டுகிறது.

கந்தசாமிப் பிள்ளையவர்கள் பாடியருளிய அருட்பிரகாசர் அற்புதத் திருவந்தாதி, கம்பர் பாடிய ஆழ்வார் அந்தாதி, திருவரங்க அமுதனார் பாடிய இராமாநுச நூற்றந்தாதி,

கச்சியப்பர் பாடிய பஞ்சாக்கிரதேசிகர் திருவந்தாதி, வீரசுப்பைய தேசிகர் பாடியருளிய சிவஞானபாலய சுவாமிகள் பதிற்றுப்பத்தந்தாதி அனந்தாழ்வான் பாடிய மணவாள மாமுனி நூற்றந்தாதி ஆகியவை இவ்வகையில் குறிப்பிடத் தக்கனவாகும்.

அடுத்ததாகத் தத்துவ விளக்கங்களுக்கும் அந்தாதி இலக்கியம் கருவியாக அமைந்துள்ளமை - சண்முகம் பிள்ளை அவர்கள் எழுதிய தத்துவசாரம் கலித்துறை அந்தாதி, தத்துவராயர் எழுதியருளிய தத்துவ விளக்கம் வெண்பா அந்தாதி ஆகியவற்றால் புலப்படுகின்றது.

தேசிய உணர்வு மக்களிடையே குடிகொண்டிருந்த சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசியத் தலைவர்களாகிய நாட்டுப்பற்று மிக்க அரசியல் தொண்டர் மீதும் அந்தாதி பாடப்பெற்றது என்பதனை சிவசூரியம் பிள்ளை என்பார் யாத்தருளிய காந்தி அடிகள் அந்தாதி நிலைநாட்டுகிறது. அதுபோலச் சமுதாயச் தொண்டர் மீதும் அந்தாதி பாடப்பெற்றது என்பதனை அவர் பாடிய அன்னி பெசன்ட் அந்தாதி என்ற அந்தாதி வெளிப் படுத்துகிறது.

இவ்வாறு பொருள் அடிப்படையில் பலவகைப் பிரிவு களைப் பெற்று அந்தாதி இலக்கியங்கள் எண்ணிறந்தனவாக அமைந்துள்ளன.

பாடுபொருள்

அந்தாதி இலக்கியத்தின் பாடுபொருள் பக்திப் பெருக்கினை வெளிப்படுத்துவது என்பது தெள்ளிது. முதன்மை நூலான அற்புதத் திருவந்தாதி இப்பாடு பொருளைத் தொடங்கி வைத்தது எனலாம்.

"அற்புதம் என்பது யாவராலும் வியந்து போற்றுதற்குரிய சிவஞானம் என்ற பொருளைத் தருவதாகும். 'அற்புத மூர்த்தி' என்னும் நன்னூல் சிறப்புப் பாயிரத் தொடருக்கு ஞானமே திருமேனி உடையான் என்ற சங்கர நமச்சிவாயர் உரை இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. எனவே இறைவன் அருளால் தம் உள்ளத்தில் தோன்றிய சிவஞானத்தின் ஒருமைப் பாட்டினால் உமையொரு கூறனாகிய இறைவனைப் போற்றிய அந்தாதியாதலின் இப்பெயர் பெற்றது" என்ற வெள்ளை

வாரணம் அவர்களின் கூற்று நினைவுகூரத் தக்கது. எனவே தொடக்கத்தில் அமைந்த பாடு பொருள் இற்றைக் காலம்வரை வேறுபாடு இல்லாது அந்தாதி இலக்கியங்களில் அமைந் துள்ளது எனலாம்.

பக்திப் பெருக்கினை வெளியிடும்போது தெய்வங்களின் பெருமைகளைப் பேசியும் மானிடப் பிறவியின் இழி நிலையைப் புலப்படுத்தியும் படைப்பாளர்கள் அந்தாதியைப் படைத்துள்ளனர்.

"நடக்கின் படிநடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும்" (பா. 100)

"அன்றுந் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவம் காண்கிலேன்" (பா. 61)

என்ற அற்புத திருவந்தாதிப் பகுதிகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

இறைவனின் பெருமைகளைக் கூறும்போது இறைவனின் திருவிளையாடல்களாம் புராணச் செய்திகளைக் கூறுவது அந்தாதி இலக்கியங்களில் மரபுகளாகக் காணப்பெறுகிறது.

"அடியும் படிகடப்பத் தோள்திசைமேல் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர் - வடியுகிரால்
ஈர்ந்தான் இரணியன தாகம், இருஞ்சிறைப்புள்
வார்ந்தா னுலகளந்த ஞான்று" (3200)

என்ற முதற் திருவந்தாதியில் பாம்பணையானின் பெருமைகள் ஆழ்வாரால் பெரிதும் பேசப்பெற்றுள்ளன.

"பேரானை ஈருரிவை போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப் - பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாம்நா ளல்ல உயிர்" (81)

என்ற சிவபெருமான் திருவந்தாதிப் பாடலில் சிவபெருமானின் திருவிளையாடல்கள் குறிக்கப் பெற்றுள்ளன.

"வையம் படருந் திருக்கன்னை கெற்பத்துள் வாழ்பொழுதூர்
வையம் படருந் திருக்கரை வென்றவ் வாழிசரண்" (94)

என்ற நாகையந்தாதிப் பாடலில் நாகூர் ஆண்டவனின் போர்க் கோலமும், அவர் கள்ளரை விரட்டிய செய்தியும் கூறப் பெற்றுள்ளது.

அந்தாதி நூல்களில் இறைவனுடைய பெருமைகளைப் பற்றிச் சொல்லும்பொழுது தன் நெஞ்சத்தைப் பார்த்து ஆற்றுப்படுத்துகின்ற செய்திகளும், இடையிடையே படைப்பாளிகளால் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைக்கப் பெற்றுள்ளன. சங்ககாலம் முதல் இற்றைக்கால இலக்கியங்கள் வரை தன்னுணர்ச்சிப் பாடல்கள் புலவர் பெருமக்களால் பெரிதும் போற்றிக் கொள்ளப் பெற்றன. அந்த அடிப்படையில் அந்தாதி இலக்கியங்களில் ஒவ்வொரு படைப்பாளியும் பாடித் தன்னுணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

“நேர்ந்த நெஞ்சமே! நெடிது வாடிநீ
சோர்ந்த துன்பமும் துயரும் போக்குவான்
வார்ந்த செஞ்சடைக் கருவை வானவன்
ஆர்ந்த பேரருள் அருவி யாடவே” (73)

என்று திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியில் மன்னர் பெருமான் தன் நெஞ்சத்தைப் பார்த்து அறிவுறுத்துகின்ற பாடல் அமைந்து தன்னுணர்ச்சி அமைப்பை வெளிப்படுத்துகிறது.

“இருந்தேன் புவிக்கொரு பார
மதாயெவ் வகைசெயினுந்
திருந்தேன்தில் லைச்சிவ காமி
யருளிற் செயலறவும்
பொருந்தே னிருந்தும் பணியே
னவன்சொலும் போதத்தின்பும்
அருந்தே னினியுன்னை யென்னென்று
சொல்லி அறைகுவதே” (36)

என்ற சிவகாமி அம்மன் அந்ததியில் அதன் ஆசிரியர் தன்னின் குறைகளை வெளிப்படுத்தி தன்னுணர்ச்சிப் பாடலின் அமைப்பைக் காட்டியுள்ளார்.

இவ்வாறு புறத்திணைச் செய்திகள் அந்தாதி இலக்கியங் களில் அமைந்ததுபோல அகத்துறைச் செய்திகளும் அந்தாதி இலக்கியங்களில் காணப் பெறுகின்றன. இத்தகைய இறைநூல்களில் காணப் பெறும் அகத்துறைப் பாடல்களை,

"காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"[19]

என்ற புறத்திணைப் பாடாண் பகுதியில் அடக்குவர். ஆயின் இறைமை நூல்களில் காணப்பெறும் அகத்துறைச் செய்திகளை அகன் ஐந்திணையிலே அடக்கலாம்.[20] அதன் அடிப்படையில் அந்தாதி இலக்கியங்களில் காணப்பெறும் அகத்துறைச் செய்திகளை நாம் அகன் ஐந்திணைச் செய்திகளாகவே காணுதல் வேண்டும்.

அந்தாதி இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அகத்திணைச் செய்திகள் அவ்வவ் நூலுக்குரிய பாட்டுடைத் தலைவனாம் இறைவனைக் காதலனாகக் கொண்டு, படைப்பாளிகள் தன்னைத் தலைவியாகக் கொண்டு நாயகன் நாயகி பாவத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. எந்த ஒரு அந்தாதியும் முழுமையாக அகத்துறைச் செய்திகளைப் பெறவில்லை என்றாலும் நூலின் இடையிடையே அகத்துறைப் பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. ஆனால் அதேநேரத்தில் எல்லா அந்தாதிகளிலும் இவ்வாறு அகத்துறைச் செய்திகள் இடம்பெற்றுள்ளன என்று கூறிவிட முடியாது. பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ள எட்டு அந்தாதிகளில் ஆறு அந்தாதிகளில் அகப்பொருள் துறைகளைக் காணமுடிகிறது.

பொன்வண்ணத்தந்தாதி என்பது சிவபெருமானைக் கண்டு காமுற்று அடையப் பெறாமையால் தலைவி ஒருத்தி பசலைநிறம் கொண்டு அப்பசலை நிறமும் இறைவனின் மேனி நிறமும் ஒப்புமையாக இருப்பதை எண்ணி உளம் குளிர்ந்த, தலைவியின் கூற்றாக அமைந்த பாடல்கள் மிகுதியாக கொண்ட அந்தாதியாகும்.

பட்டினத்தடிகள் பாடிய திருவேகம்பத் தந்தாதியில் காணப் பெறுகின்ற அகத்துறைப் பாடல்கள் - சுவை மிகுந்ததாகவும் திருக்கோவையாரோடு ஒப்ப எண்ணும் படியாகவும் அமைந்துள்ளன.

"துணையொத்த கோவையும் பேரெழில்
பேதையும் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையோ டேஒத்த
காதலொ டேகினரே

அணையத்தர் ஏறொத்த காளையைக்
கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள்
தன்னொடும் பேசுமினே" (73)

என்ற பாடல் கீழ்வரும் திருக்கோவையார்ப் பாடலொடு ஒப்பிட்டுச் சுவை காணக்கூடிய பாடலாகும்.

"மீண்டா ரெனவுவந் தேன்கண்டு நும்மையில் மேதகவே
பூண்டா ரிருவர்முன் போயினரே புலியூரெனநின்
றாண்டா னருவரை யாளியன்னானைக் கண்டேனயலே
தூண்டா விளக்கனையாய் என்னையோ அன்னை சொல்லியதே"

இவ்வாறு அந்தாதி இலக்கியங்களில் பாடுபொருளாக இறைமைக் கொள்கை அமைந்து இடையிடையே அகத்துறைச் செய்திகளும் அமைந்து தன்னிகரற்று விளங்குகின்றன எனலாம்.

அந்தாதி நூல் அமைப்பு

அந்தாதி நூல்கள் அனைத்தும் பெயர்களைப் பெறும் பொழுது இறைமை அடிப்படையில் மூர்த்தி (கந்தரந்தாதி), தலம் (ஆவினன்குடி அந்தாதி), தீர்த்தம் (கங்கையந்தாதி) அடியார் (திருஞானசம்பந்தர் திருவந்தாதி), பா (வெண்பா அந்தாதி) பாவகை (கலித்துறையந்தாதி), எண்ணிக்கை (நூற்றந்தாதி) என்ற அமைப்பில் பெயர்களைப் பெற்றுள்ளன. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள்கள் ஒவ்வொரு நூலிலும் இடம் பெற்றுள்ளன. காப்புச் செய்யுளை அடுத்துக் குரு வணக்கமும் அமைந்துள்ளன. அதன்பின் நூலின் பகுதியான அந்தாதிச் செய்யுள்கள் அமைந்துள்ளன. நூலின் இறுதியில் சில குறிப்பிட்ட அந்தாதிகளில் மட்டும் நூலின் பயனும், வாழ்த்தும் இடம் பெற்றுள்ளன. சில அந்தாதிகளில் சிறப்புப் பாயிரமும் அமைந்துள்ளன.

எனவே பொதுவான அமைப்பு என்று பார்க்கின்ற பொழுது காப்புச் செய்யுளும், நூல் பகுதியுமே ஆகும். காப்புச் செய்யுள்கள் பெரும்பாலும் விநாயகரைப் பற்றியே அமைந்துள்ளன.

"எண்டந்த முல்லை விழிவே
லளக மிருளிடைசொற்

பண்டந்த மாமெனும் வள்ளிதெய்
வானைதம் பங்கனுயர்
அண்டந்த ராதலம் போற்றே
ரகன்றனந் தாதிசொல்லக்
கண்டந்த வேழ முகனக
லானென் கருத்திடையே"

என்பது திருவேரக யமகவந்தாதியின் காப்புச் செய்யுளாகும். பிறமதச் செய்யுள்களில் அவ்வவ் மதத்திற்குரிய காப்புச் செய்யுள்கள் அமைந்துள்ளன.

"மணியொளி போலு மலர்மணம் போலு மருவியுயிர்க்
கணியொளி போன்றவுண் மைப்பொரு ளேயக முஞ்சுகமும்
கணியொளிர் மேதையுந் தந்தருள்வாய் அப்துல் காதிர்புகழ்ப்
பணியொளி யாநிதி நாகை யந்தாதி படிப்பவர்க்கே"

என்று நாகையந்தாதியில் உண்மைப் பொருளே தெய்வமாக எண்ணிக் காப்புச் செய்யுள் அமைக்கப் பெற்றுள்ளது.

தொன்மை இலக்கியங்களில் அதாவது அற்புதத் திருவந்தாதி பொன் வண்ணத்தந்தாதிகளில் காப்புச் செய்யுள்கள் காணப்படவில்லை. என்றாலும் பின்னர் வந்த இலக்கியங்களில் காப்புச் செய்யுள்கள் அமைந்துள்ளன. காப்புச் செய்யுளை அடுத்து அதன் ஒரு பகுதியாகக் குருவணக்கம் அமைந்துள்ளது. எடுக்காட்டாக

"பாரோங்கு தெய்வத் திருக்கயிலாய பரம்பரையிற்
பேரோங்கு ஞானப் பிரகாச னாரருள் பெற்றபிரான்
காரோங்கு சோலைத் தருமைப் பதிவாழ் கருணையினான்
சீரோங்கு ஞானசம் பந்தன் கழற்கன்பு செய்குதுமே"

என்ற திருவரசிலி அந்தாதியை எடுத்துக் காட்டலாம்.

சில அந்தாதிகளின் ஈற்றில் பயன் கூறப் பெற்றுள்ளது. இப்பயன் கூறுகின்ற நிலை தேவார ஆசிரியர்களின் அடியொற்றிய நிலை என்பதில் ஐயமில்லை. தண்டபாணி சுவாமிகள் பாடிய திருச்செந்தூர் வெண்பா அந்தாதி என்ற இலக்கியத்தின் ஈற்றில் பயன் என்ற தலைப்பில் ஒரு பாடல் அமைந்துள்ளது. இது பிற்காலத்திய அமைப்பேயாகும்.

"நண்பாவு செஞ்சொற் தமிழ்த்திருச் செந்தூர் முருகன்
வெண்பா ஒருநூ றும் வேண்டுவார் - காண்பாய
பூவுலகும் வானுகுலம் போற்றும் புகழ்பொறுத்து
மேவுவரன் னோனடிக்கீழ் மெய்"

இப்பாடலில் தண்டபாணி சுவாமிகள் தன்னூலைப் பாடுவோர் பூவுலகமும், பொன்னுலகமும் போற்ற இறைவனின் திருவடியைச் சார்வர் என்று சத்தியம் கூறியிருப்பது நினைந்து இன்புறத் தக்கதாகும்.

சில அந்தாதிகளில் பயனுக்குப் பின்னே பொதுவான வாழ்த்து ஒன்று அமைந்துள்ளது. இறைமையைப் போற்றிய கவிஞர்கள் உலகு வாழவும், மானிட இனம் வாழவும், மற்ற உயிரினங்களும் வாழவும் வாழ்த்துகிற மரபு போற்றுதற்குரித் தாக அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாகத் திருமுல்லைவாயில் கொடியிடை நாயகி அந்தாதிப் பாடலை இங்கு நினைவு கூரலாம்.

"வாழிதிரு வெண்ணீறு வாழிருத் ராக்கமணி
வாழியஞ் சாக்கர மாமந்திரம் - வாழிநின்
னற்புதல்வர் வாழிநின் நாயகனார் வாழிநின்
பொற்சரண மென்றும் பொலிந்து"

இப்பாடல் சமயத்துறை வாழ்த்தாக மட்டும் அமையாது மானிடப் பிறவிவாழ்த்தாகவும் அமைந்துள்ளமை உய்த்துணரத்தக்கதாகும்.

இவ்வாறு அந்தாதி நூல்கள் வணக்கம் முதல் வாழ்த்து ஈறாகக் கஷி• நயங்களைப் பெற்று ஆழி சூழ் உலகில் அணிபெற்றுத் திகழ்கின்றன.

அறவுரை நூல்கள்

அந்தாதி நூல்கள் இறைமைக் கொள்கை அடிப்படையில் எழுந்தமை என்பதால் அவைகள் ஏதோ பாமாலைகளாக மட்டும்தான் அமைந்துள்ளன என்று எண்ணிவிட முடியாது. இறைமையைப் போன்றுவதை அடிப்படையாகக் கொண்டாலும் சமுதாய மக்களுக்கு நல்வழி காட்டுவதை அவை மறந்துவிடவில்லை. அந்தாதி நூல்களில் ஒன்று ஆத்திச்சூடி அந்தாதியாகும். முழுக்க முழுக்க நீதிகளைக் கொண்டு இந்நூல் மிகச் சிறந்த அந்தாதியாக விளங்குகிறது.

ஒவ்வோர் ஆத்திச் சூடியிலுள்ள நீதித் தொடருக்கும் ஒரு புராண வரலாற்று நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி இந்த அந்தாதி நூல் விளங்குகிறது. இந்த அந்தாதி நூலில் 108 பாடல்கள் அமைந்துள்ளன.

அறம் செய விரும்பு என்பது ஆத்திச்சூடியின் முதல் நீதி ஆகும். இதனை ஆத்திச்சூடி அந்தாதி கீழ்வரும் பாடலில் சுட்டிக் காட்டி விளக்குகிறது.

"அறம்வளர் சீதக்காதி முன்னாளி லவனிமிசை
யிரவலர் தங்களுக்கீய்ந்து மகிழ்ந்துமிகத் தைவிட்டுப்
பரமதைச் சேர்ந்துஞ் சமாதியில் நின்றும் பரிசளித்தான்
விரவினில் மெய்த்துணை யாகறஞ் செயவிரும் பிடுதினமே"

இப்பாடலில் சீதக்காதி செத்தும் கொடுத்தான் என்பதை நினைவு படுத்தி அறம்செய்ய வற்புறுத்தப் பெறுகிறது.

ஊக்கமது கைவிடேல் என்ற நீதிக்கு மார்க்கண்டேய னுடைய கதையைக் கூறி அவன் ஊக்கத்தோடு இறைவனைப் போற்றி வணங்கி, இறைவனை எதிர்த்து வாதாடி விடாமுயற்சியால் பயன்பெற்றதைக் கூறி விளக்குகிறது (பா. 6).

பொறுமையாக இருந்து நல்ல குணங்களை எக்காலத் திலும் கைவிடக் கூடாது என்பதை, திரௌபதி ஐவரை மணந்து வாழ்ந்ததை நினைவுபடுத்தி வலியுறுத்துகிறது. தன்னுயிரைக் கொடுத்துத் தானம் செய்ய வேண்டுமென்பதைச் சிபிச் சக்கரவர்த்தியின் மூலமாகக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

"திரிந்திடுவேடன் புறாவையம் பாலெய்ய திசைதப்பியே
தருவாகிய சிபிச்சக்கரவர்த்தி யின்றாளில்விழ
அரிதாகியவுயிர் காத்திடச்சதையறுத் தவனீய்ந்ததால்
விரிவாகியபுகழ் நின்றது தானவிரும்புதினே" (55)

இவ்வாறு தனி ஒரு நூல் அறவுரைகளைச் சொல்லுவது மிகவும் குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

அந்தாதி நூல்கள் பல சமய அடியார்களால் பாடப் பெறுவதால் காம இச்சையை வெறுக்கின்ற பாடல்கள் அமைந்துள்ளன. பாடல்களை உலகோர் அப்பாசக் குழியில் விழுந்து துயர் உறா வண்ணம் அறிவுறுத்துகின்றன எனலாம். கந்தரந்தாதியில் அருணகிரிநாதர் காம இச்சைக்குரிய

மங்கையர் ஆசையில் மயங்கித் திரியாது நலலருள்தா என்று வேண்டுகின்ற பாடலை இங்கு நினைவு கூரலாம்.

"சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சை குறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் குகனுந் திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே" (32)

இப்பாடலில் மங்கையர் இச்சையில் மயங்கி அவர்கள் சொல்லைக் கரும்பென்றும், வாயைப் பவளமென்றும், புகழ்ந்து காம இச்சையில் அடியேன் வீணே கிடந்து உழன்று திரியாது திருவருள் ஞானச் செல்வத்தை அடைய அருள்புரிய வேண்டும் என்று அவர் வேண்டுவது சமுதாயப் பார்வையில் நல்லொழுக்கச் செயலன்றோ!

திருவேங்கடத்தந்தாதியில் செல்வர்களுக்குப் பின்னே இரந்து நிற்றல் இழிநிலைக்கு உரித்து என்பதை மிகச் சிறப்பாக அதன் ஆசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். அப்பாடல் இரந்துண்டு வாழ்வதைவிட இறந்துவிடலாம் என்பதைக் குறிப்பிடுகிறது. அப்பாடல் இதோ:

"பழுத்தெட்டி போன்ற நருச்செல்வர் பின்சென்று பல்செருக்கால்
கொழுத்தெட் டினையன வெண்ணமற் றீர்குவ டேறிமந்தி
கழுத்தெட்டி யண்டர் பதிநோக்கும் வேங்கடக் காவலனை
எழுத்தெட்டி னாஎண்ணி ஏத்தீர் பரகதி யேறுதற்கே"

இவ்வாறு ஒவ்வொரு அந்தாதியிலும் பல அறிவுரைக் கருத்துக்களைக் காண முடியும். அந்தாதி நூல்களில் காணப்படும் அவ்வறிவுரைகள் எல்லாம் சமுதாயம் சீர்பட வேண்டும் அல்லது செம்மையுற வேண்டும் என்ற அடிப்படையில் எழுந்தவைகளாகும்.

அணிநலன்கள்

சிற்றிலக்கிய மரபில் அந்தாதி இலக்கியங்கள் தனி ஒரு இடம் பெற்று விளங்குவதை மேற்காட்டிய பகுதிகளினால் உணரலாம். இலக்கியச் சுவைக்கு ஏற்ப அனைத்துச் செய்திகளும் அந்தாதி இலக்கியங்களில் நிறைந்துள்ளன. இலக்கியங்களும் அழகு தரும் அணிகளையும் அவை தன்னகத்துக் கொண்டு விளங்குகின்றன. உவமை என்னும் தவலருங்கூத்தி அந்தாதி இலக்கியங்களில் ஆனந்த நடனமிடுகிறாள் என்றே கூறவேண்டும்.

"மருவி அம்பரம் மறைந்துநின் றாட்டுவான் போல
உரக கங்கணக் கருவையான் ஒருவன்நின் றாட்ட"(83)

என்ற திருக்கருவை பதிற்றுப் பத்தந்தாதியில் சிவபெருமான் நாடகமாந்தரைப் போல ஆடச் செய்கிறான் என்ற உவமை இடம் பெற்றுள்ளது. பிற இலக்கியங்களைப் போல மானிட அவயவங்களுக்கு உவமைகள் சொல்லுகிற பாங்கு அந்தாதி இலக்கியங்களிடையே மிளிர்ந்து காணப்படுகின்றன. உதராணமாகச் சிவகாமி அம்மன் அந்தாதியில் "மின்னார் மருங்குல்" (1) என்று இடையும், வேய்த்தோள் (75) எனத் தோளும், அயில் விழி (47) எனக் கண்களும், உவமையைக் கொண்டுள்ளன. சேரமான் பெருமான் நாயனார் பாடிய கீழ்வரும் பாடலின் இறைவனின் தெய்வக் காட்சி உவமை வாயிலாக வெளிப்படுத்தப் பெறுகிறது.

"விரிகின்ற ஞாயிறு போன்றது மேனியஞ் ஞாயிறு சூழ்ந்
தெரிகின்ற வெங்கதி ரொத்தது செஞ்சடை யச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது கண்டமக் காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுளதா லெந்தையொண்
பொடியே"(26)

இப்பாடல் ஞாயிறு போன்று இறைவனின் சிவந்த மேனியும், ஞாயிற்றின் ஒளிக்கற்றை போன்று செஞ்சடையும், ஞாயிற்றுக்குப் பயந்தோடிய கருமேகம் போன்ற கண்டமும் என்பன போன்று உவமைகள் இடம் பெற்றுச் சிறப்புடன் திகழ்கின்றது.

உவமையணியைப் போல உருவக அணி போன்றவைகளும் அந்தாதி இலக்கியங்களில் அமைந்து செய்யுள் நலம் தருகின்றன. உதரணமாக நாகையந்தாதியில் நோய்த் துயராக உருவகம் செய்யப் பெற்றுள்ளது (5). கீழ்வரும் பாடலில் உருவகம் முழுமையும் இடம் பெற்றுள்ளது.

"கணவிலங்கா வல்அவாச் சிறைமேலெண்ணங் கண்டனைமிக்
கணவிலங்கா வலம்கோட்டைத் துயரம் கடத்தினும்தாள்
கணஇலம் காவல் அகத்தாக்கி சூளிர் கனியும்புள்ளும்
எணம்விலங்கு ஆவலங் கொட்டும் தண்ணாசைக் கதிர்விளக்கே"
(78)

இப்பாடல் ஆவலை விலங்கு என்றும், பேராசையைச் சிறை என்றும், மேல் எண்ணங்களைத் தண்டனை என்றும், துயரத்தைக்

கோட்டை என்றும் இறைவனின் பாதத்தினை வீடு என்றும் உருவகப் படுத்தியது பயின்று இன்புறத் தக்கதாகும்.

அணிகலன்களில் உவமையணியும் உருவக அணியும் பெருமை சேர்க்க வேறுபிற அணிகள் அந்தாதி இலக்கியங்கள் தோறும் விரவிக்கிடப்பதைப் பயிலும போது உய்த்துணர முடிகிறது.

கிடைத்திருக்கும் அந்தாதி நூல்கள்

இலக்கிய நயம் குறித்த அந்தாதி இலக்கியங்கள் அற்புதத் திருவந்தாதியிலிருந்து தொடங்கியதால் இற்றைக்கு நூற்றுக் கணக்கில் கிடைக்கப் பெறுகின்றன. முன்னர்க் குறிப்பிட்டது போல் பிற சிற்றிலக்கியங்களைக் காட்டிலும், அந்தாதி இலக்கியங்களே அதிக எண்ணிக்கையில் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. அந்தாதி இலக்கியங்கள் பெயர்களைத் தொகுக்கும் பணியில் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகமும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், உ. வே. சாமிநாதய்யர் நூலகமும் பெரிதும் முயன்று பெயர்ப் பட்டியல்களை வெளியிட்டுள்ளன. அம்மூன்று நிறுவனத்தின் பணிகள் இலக்கிய ஆய்வாளர்கள் போற்றிப் பாராட்டுவதற்கு உரித்தாகும். தனி நிலையில் டாக்டர் ந.வி. ஜெயராமன் அவர்கள் தன்னுடைய சிற்றிலக்கிய அகராதியில் அந்தாதி இலக்கியங்களைத் தொகுத்துத் தந்துள்ளார். அவருடைய பணியும் நினைந்து போற்றுதற்குரியதாகும்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1969-இல் அந்தாதி இலக்கிய மாநாடு நடத்தி அம்மாநாட்டில் வழங்கப் பெற்றக் கட்டுரைகளை அச்சேற்றி வழங்கியிருக்கிறது. மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய சரவண ஆறுமுக முதலியார் அவர்கள் தன்னுடைய தலைமை உரையின் இறுதிப் பகுதியில் 108 அந்தாதிகளைக் குறிப்பிட்டு காலமும் குறித்திருக்கின்றார்கள். அடுத்து 1982-இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள தமிழ் இலக்கியக்கொள்கை ஏழாவது தொகுதியில் அந்தாதி இலக்கியங்களைப் பற்றிய கட்டு ரையைத் தந்தருளிய திரு.க. காந்தியவர்கள் 840 அந்தாதிகளின் பெயர்களைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அடுத்து 1984-இல் உ.வே. சாமிநாதய்யர் நூல்நிலையம் வெளியிட்ட

சிவகாமியம்மன் அந்தாதியின் பதிப்பாசிரியர் புலவர் ந. ஐயாசாமி அவர்கள் 242 அந்தாதிகளைப் பட்டியலிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். அடுத்து 1983-இல் டாக்டர் ந.வி. ஜெயராமன் வெளியிட்ட அவர்கள் சிற்றிலக்கிய அகராதியில் 398 அந்தாதிகள் பட்டியலிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

ந.வி. ஜெயராமன் அவர்கள் அந்தாதி என்றும், இதழகல் அந்தாதி என்றும் எழுந்தந்தாதி என்றும் ஒலியலந்தாதி என்றும் கலித்துறை அந்தாதி என்றும் கலிவிருத்த அந்தாதி என்றும், சிலேடை அந்தாதி என்றும், திரிபு அந்தாதி என்றும், நிரோட்டக யமக அந்தாதி என்றும், நூற்றந்தாதி என்றும், பதிற்றந்தாதி என்றும், பதிற்றுப் பத்தந்தாதி என்றும், யமக அந்தாதி என்றும், வெண்பா அந்தாதி என்றும் பதினான்கு பகுதியாகப் பிரித்து அப்பட்டியலை அளித்திருக்கிறார்கள்.

இத்தகைய நான்கு நூல்களைக் கொண்டு பார்க்கின்ற பொழுது அந்தாதி இலக்கியங்கள் 800-க்கு மேற்பட்டு கிடைத்திருக்கிறது என்றால் மறைந்த நூல்கள் எத்தனையோ என எண்ணிக் கவலையுற வேண்டியுள்ளது, மறைந்தவை போக எஞ்சியவை நூற்றுக் கணக்கிலிருக்கின்றதை நினைக்கும் பொழுது மனத்திற்கு ஆறுதலும் ஏற்படுகிறது. இன்னும் ஏடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தாதி இலக்கியங்கள், அச்சு என்னும் தேரேறினால் தமிழன்னை இன்னும் பெருமை பெறுவாள் என்பதில் ஐயமில்லை.

ஆய்வு நிலையில் எதிர்பார்ப்பு

தமிழன்னைக்கு அணிகலன்களாக அழகுதரும் தமிழ் மொழியில் எண்ணிறந்தனவாக இடம் பெற்றுள்ள சிற்றிலக் கியங்களில் தனியொரு இடத்தைப் பெற்ற அந்தாதி இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஆய்ந்து பார்க்கின்ற பொழுது வியப்பைத் தருகின்றது. பாடுபொருள் மாறுபடாது வடிவத்தில் மாறுபட்டுப் படைப்பாளிகளின் கவிபுனைத் திறனை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் அந்தாதிகள் கணக்கற்றவையாகப் பெருகிக் காணப்படுகின்றன என்று நினைக்கும் பொழுது அவ்வியப்பு மேலும் அதிகரிக்கிறது. இத்தகைய அந்தாதிகளைப் பற்றி ஆய்ந்ததின் பயனாகக் கீழ்க்கண்ட எதிர்பார்ப்புகள் எழுகின்றன.

1. பெருகிக் கிடக்கின்ற அந்தாதிகளைத் தமிழ்மொழி காத்திடும் இயக்கங்கள் ஒருசேரத் தொகுத்து அந்தாதித் கொத்துக்களாகி வகுத்துக் காத்திட முயற்சி செய்தல் வேண்டும்.

2. அச்சேறாத அந்தாதி இலக்கியச் செல்வங்களை அச்சேற்றி அழகுக்கு அழகு சேர்க்க வேண்டும்.

3. அந்தாதி இலக்கியங்களின் எளிமை கருதி இக்காலப் படைப்பாளிகள் இச்சிற்றிலக்கியத்தை வளர்த்திட மேலும் பல புதியன படைத்திடல் வேண்டும்.

4. யமகம், திரிபு போன்ற அந்தாதிகள் இக்காலத்திலும் தோற்றுவிக்கப் பெற்று போற்றிப் பாதுகாக்கப் பெறவேண்டும்.

5. இலக்கிய ஆய்வாளர்கள் குறிப்பிட்ட அந்தாதி வகைகளை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்திட முற்பட வேண்டும்.

6. பிற சிற்றிலக்கியங்களோடு அந்தாதி இலக்கியங்கள் ஒப்பிட்டு ஆய்வு செய்யப் பெற்றுப் பொருள்நலம் காணப்பெற வேண்டும்.

இத்தகைய எண்ணங்கள் நிறைவேறுமானால் அந்தாதி இலக்கியங்களாம் அழியாச் செல்வங்கள் தமிழன்னைக்கு என்றும் அழகு சேர்க்கும் அணிகலனாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை.

முடிப்புரை

சிற்றிலக்கிய உலகில் அந்தாதி என்று ஆய்வு செய்து பார்க்கும் பொழுது பொய்கையார் அந்தாதியில் தொன்மை பெற்று அற்புதத் திருவந்தாதியில் உருவம் பெற்று வடிவாலும், பொருளாலும் பல்வேறு வகைப்பட்ட பிரிவுகளைப் பெற்று இற்றைக்கு 800க்கும் மேற்பட்ட அந்தாதி இலக்கியங்கள் கிடைக்கப் பெறுகின்றன என்பது தெளிவாகிறது. அந்தம் ஆதியாக விளங்கும் இறைவனின் கொள்கைகளைப் பாடுபொருளாகக் கொண்டு மிளிரும் அந்தாதி இலக்கியம் வளத்தாலும், சுவையாலும், கொள்கையாலும் வான் புகழ் பெற்று விளங்குகிறது என்பது ஐயமறத் தெளிவாகிறது. விரிந்த

நிலையில் இலக்கிய ஆய்வாளர்கள் ஆய்வை மேற்கொள் வோர்களே ஆனால் இன்னும் கருத்து விளக்க அணிகள் கிடைக்கப் பெறலாம் என்பது தெளிவாகிறது.

அடிக்குறிப்பு விளக்கம்

1. டாக்டர் மு.வ; இலக்கியத் திறன், 1979, ப. 57.
2. ச.வே. சுப்பிரமணியன்: இலக்கிய வகையும் வடிவும், 1948, ப. 9.
3. தமிழ்விடுதூது; கண்ணி 24-25.
4. மு. கோவிந்தசாமி; தமிழ் இலக்கிய வரலாறு, 1969, ப. 3.
5. டாக்டர் மு.வ; இலக்கிய மரபு, ப. 9.
6. தமிழ் இலக்கிய வகையும் வடிவும்; ப. 21.
7. டாக்டர். தமிழண்ணல்; புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. பக். 313-314.
8. டாக்டர். முத்து சண்முகம் - நிர்மலா மோகன்; தமிழ் இலக்கிய வகைகள் கருத்தரங்கு, ப. 52.
9. தமிழ் இலக்கியக் கொள்கை - 2; ப. 77.
10. டாக்டர் ந.வி. செயராமன்; சிற்றிலக்கியச் செல்வம், 1979. ப. 27.
11. சரவண ஆறுமுக முதலியார்; சிற்றிலக்கியச் சொற் பொழிவுகள் (அந்தாதி), கழகம். 1962. ப. 26.
12. டாக்டர். ந, வி. செயராமன்; சிற்றிலக்கியச் செல்வம், ப. 47.
13. புலவர். ஐயாசாமி; சிவகாமி அம்மன் அந்தாதி, பதிப்பாளர் குறிப்பு, ப. 28.
14. மாறனலங்காரம்; 274.
15. முத்துவீரியம்; 19.
16. சுவாமிநாதம்; 198.
17. புலவர். ந. ஐயாசாமி; சிவகாமி அம்மன் அந்தாதி, பதிப்பாசிரியர் குறிப்பு, ப. 30.
18. பன்னிரு திருமுறை வரலாறு பாகம்-II ப. 534.
19. தொல். பொருள் 83.
20. திருமுறைகளில் அகக்கோட்பாடு. டாக்டர். பழ. முத்தப்பன். ப. 16.

O

2

சிவஞான முனிவரின் இலக்கியப்பணி

சைவ சித்தாந்தம் என்று நினைக்கின்ற பொழுது சிவஞான முனிவர் நினைப்பவர் மனத்தகத்தே தோன்றுவார். தத்துவ வித்தகராய், உரையாசிரியர்களுக்கு எல்லாம் தலைவராய் விளங்கிடும் மாதவச் சிவஞானியார் தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரத்தில் அவதரித்தார். ஞானியைத் தந்த பெற்றோர் ஆனந்தக் கூத்தரும் மயிலம்மையும் ஆவர். சிவஞானியின் இளமைப் பெயர் முக்காள லிங்கர். குழந்தைப் பருவத்தில் ஐந்து வயதினை எய்திய பொழுது தம்மூருக்கு எழுந்தருளிய திருவாவடுதுறை ஆதினத் தம்பிரான் மார்களைக் காண நேர்ந்தது. அவர்களின் துறவுக் கோலத்தில் தம்மை இழந்தார். தம்பிரான் சுவாமிகளைத் தன் இல்லத்திற்கு அழைத்து வந்து அன்னையை வேண்டி அமுது படைத்திட ஆவன செய்தார். அதன் பின்னர் தன் பெற்றோர்பால் அனுமதி பெற்றுத் தம்பிரான் சுவாமிகளுடன் தன் வாழ்வை நடத்திட ஆவல் கொண்டு அவர்களோடு இணைந்து சுசீந்திரம் சென்றார். சுசீந்திரத் திருமடத்தில் எழுந்தருளியிருந்த இளைய பட்டம் வேலப்ப தேசிகரை வணங்கித் துறவுக்கோலம் பெறவேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தார். வேலப்ப தேசிகரும் முக்காள லிங்கருக்குச் சமய தீட்சையையும் விசேஷ தீட்சையையும் அளித்துக் காவியுடை வழங்கியருளித் தத்துவ நூல்களைப் போதித்து அருளினார்.

துறவுக் கோலம் பூண்ட சுவாமிகள் சாத்திரத்திலும், வடமொழி, தமிழ் மொழியிலும் வல்லுநர் ஆயினார். அவரின் ஆற்றல் கண்டு சிவஞானத் தம்பிரான் என்ற பெயர் அவருக்கு உரியதாக வழங்கப் பெற்றது. பின்னர் திருவருள் பேற்றினால் திருவாவடுதுறை சென்று மகாசந்நிதானத்தின் அன்பினைப் பெற்று தம் வாழ்வைத் திரு மடத்தில் தொடங்கினார். தம் வாழ்வில் பதினைந்து இலக்கிய நூல்களையும், மூன்று இலக்கண நூல்களையும், ஒரு தருக்க சாஸ்திர நூலையும், சமய சம்பந்தப்பட்ட பத்து நூல்களையும் யாத்துச் சிறந்தார். தத்துவ உலகிலும், சமய உலகிலும், திருமடப் பாரம்பரியத்திலும், சிவஞான முனிவரின் திறன் பாராட்டிப் போற்றப்பட்டது. தமிழகத்தின் சிறப்புடைய திருத்தலங்கள் எல்லாம் யாத்திரை செய்த பொழுது மேற்குறித்த நூல்கள் பலவற்றைச் செய்தருளினார் என்று அவருடைய வரலாறு குறிப்பிடுகிறது. இத்தகைய சிறப்புடைய சிவஞான முனிவர் விசுவாசுவ ஆண்டு சித்திரைத் திங்கள் எட்டாம் நாள் உலக வாழ்வை நீத்து திருவருட்பேறு பெற்றார்.

மானிடப் பிறவி எடுத்ததின் பெரும் பயனைத் துய்த்தருளிய சிவஞான முனிவர் எழுதிய இலக்கிய நூல்கள் அந்தாதியாக, பிள்ளைத் தமிழாக, மாலையாக, பதிகமாக விளங்குகின்றன. அவ் இலக்கியச் செல்வங்களைப் பற்றிய அறிமுகமாகச் சில கருத்துக்களை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம்.

1. கச்சி ஆனந்த ருத்ரேசர் பதிகம்

காஞ்சிமாநகரில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருநாமம் ஆனந்த ருத்ரேசன் என்பதாகும். உருத்திரர் நூற்றுப் பதின்மரில் முதன்மையானவர் ஆனந்த உருத்திரர் ஆவார். அவர் பூசித்த இறைவன் ஆதலால் இறைவன் ஆனந்த ருத்ரேசன் ஆவார். அவ் இறைவன்மீது சிவஞான முனிவரால் பாடப்பெற்ற நூலே கச்சி ஆனந்த ருத்ரேச பதிகம் ஆகும்.

தமிழ் ஞாயிறாக விளங்கிய சிவஞான முனிவரால் பாடப் பெற்ற இந்நூல் பதினோரு பாடல்களைக் கொண்டதாகும். பாடல்கள் நான்கடிகளைக் கொண்டு விளங்குகின்றன. முதல் இரண்டு அடிகளில் ஆனந்த ருத்ரேசரை வணங்கினால்

கிடைத்திடும் பயன்களும், மூன்றாமடியில் காஞ்சித் திருத் தலத்தின் வருணனையும், நான்காம் அடியில் இறைவனைப் போற்றும் நிலையும் அமைந்துள்ளன. பாடல்கள் எளிமையும், இனிமையும் உடையன.

சிவஞான முனிவரின் பேரறிவுத் திறன் பாடல்களில் மிளிர்ந்து காணப் பெறுகின்றது. தவத்தை உடையோர் பெருமையை முனிவர் குறிப்பிடும் பொழுது,

"மடம் களைந்து அறிவால் மிக்க மாதவர்" (பா. 2)

என்று எழுதுவார். துறவிகளோடு வாழ்ந்தவர் ஆதலால் அவர்தம் நிலையை எளிமையாகச் சிறு தொடரால் விளக்கிடும் பாங்கு போற்ற தக்கதாக அமைகின்றது. அந்நூலில் முனிவர் பெரிதும் வெளிப்படுத்துவது இறைவனை வழிபடுதலால் பெறுகின்ற பேறுகளே ஆகும். இறைவனை வணங்குவதால்:

1. "ஐந்தை ஆறினை அடக்கி அருந்தவம் புரியாரேனும்
   வந்துஐயா என எல்லோரும் வணங்கிட வாழலாம்" (பா. 1)

2. "வருந்தலாது எண்ணெண் கல்வியும் வாய்க்கும் எண்செலவப்பேறு
   பொருந்தா யுகங்கள் நூறும் புகழுடன் பொலியலாம்" (பா. 3)

3. "பொறை தவம் அறிவு ஒழுக்கம் புத்திரர் மித்திரர் ஆதி
   குறைவறு செல்வம் யாவும் குலவ வீற்றிருக்கலாம்" (பா. 4)

இத்தகைய செல்வங்களை மட்டும் பெறலாம் என்பதில்லை. நம்மிடத்திலிருக்கும் தீவினையையும் நீக்கலாம் என்பதும்,

"விழிகளான் மாதர் நாளும் விளைத்திடும் வேட்கையாய
குழிகளால் துற்றுவீழும் கொடுந்துயர் குலைக்கலாமால்"
(பா. 8)

என்று குறிப்பிட்டுப் பெண்களால் விளையும் காமக் கடுந்துயர் அகலும் என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு பாடல்தோறும் முதல் இரண்டு அடிகளில் ஆனந்த ருத்ரேசரை வணங்குவதால் பெறுகின்ற பயனைக் குறிப்பிடுகிறார். கடைசிவரி தோறும் எந்தையான் ஆனந்த ருத்ரேசனை இறைஞ்சினோர்க்கு என்றும், இறைவனாம் ஆனந்த ருத்ரேசன் என்றும், ஈசனான் ஆனந்த ருத்ரேசன் என்றும், கங்கை ஏந்தும் ஆனந்த ருத்ரேசன் என்றும் கச்சிப்பதி ஆனந்த ருத்ரேசரைப் போற்றிப் பணிகின்றார். இடையில் உள்ள மூன்றாவது வரியின் மூலம் கச்சிப்பதியின் சிறப்புக்கள் வெளிவருகின்றன.

கச்சிப்பதியைப் பற்றிச் சொல்லும் பொழுது மறையொலி முரசம் துஞ்சா வளநகர் காஞ்சி (பா. 4) என்று குறிப்பிட்டு நகரின் பெருமை யினை வெளிப்படுத்துகிறார். அதனுடைய வளப்பத்திற்குக் காரணம் "கானம் தண்பொழில் ஆறுகால் செய்யும் கச்சி மூதூர்" (பா. 6) என்று குறிப்பிட்டு நீர் வளத்தின் சிறப்பை எடுத்தியம்புகிறார். நீர் வளத்தால் சோலை சூழ்ந்து நகரம் காட்சியளிக்கிறது என்பதை "வழிகளார் சோலை சூழ்ந்த மாமதில் கச்சி" (பா. 8) என்று குறிப்பிடுகின்றார். இந்நகரில் ஆனந்த நிருத்தம் செய்கின்றான் ஆனந்த ருத்ரேசன் என்று பதிகத்தை நிறைவு செய்கிறார்.

பதினோரு பாடல்களைக் கொண்ட இச்சிறு நூல் சிவஞான முனிவர் கச்சி நகர் என்று ஆனந்த ருத்ரேசன்மீது பாடியருளியதாக மட்டும் அமையாது உலகமக்கள் ஆனந்த ருத்ரேசனை வழிபடவேண்டும், வழிபட்டால் பெரும்பயனைப் பெறலாம் என்பதையும் நினைவுபடுத்துகிற பெருமைமிகு நூலாக விளங்குகிறது.

2. கம்ப இராமாயண முதற் செய்யுள் - சங்கோத்திர விருத்தி

சித்தாந்த வித்தகராம் சிவஞான முனிவரின் வாதத் திறமையை எடுத்துக் காட்டும் உரைநடை நூல் இது. முனிவர் காஞ்சீபுரம் வருகை தந்தபோது அந்நகரத்து வைணவப் பெரு மக்கள் கம்பரின் நூலையே தமிழ் உலகின் தலைசிறந்த நூலென்று தருக்கிப் பேசி வந்தனர். அதனைக் கேட்ட சிவஞான முனிவர் இவர்தம் செருக்கை அடக்கிட எடுத்திட்ட முயற்சியே இந்நூல் ஆகும்.

நூல் முழுமையும் காணப்படுகின்ற குறைகளை எடுத்துரைக்கின் விரியும் என்று எண்ணியோ என்னவோ முதற்பாடலை மட்டும் எடுத்து அப்பாடலில் காணப்படும் குறைகளைக் கேள்வியாகக் கூறி யாரும் பதில் தாராமையால் - தானே பதில் தந்தார் அதுவே இந்நூலாகும். அவர் எடுத்துக் காட்டிய பாடல்:

"நாடிய பொருள் கைகூடும் ஞானமும் புகழும் உண்டாம்;
வீடுயர் வழிஅது ஆக்கும்; வேரிஅம் கமலை நோக்கும்;
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டுஅழிய, வாகை;
சூடிய சிலைஇராமன் தோள் வலி கூறுவார்க்கே"

இப்பாடலையே முனிவர் மறுத்து பாடலில் குறிக்க வேண்டிய தன்னின் விளக்கத்தைச் செம்மாந்த நடையில் எழுதிச் செல்கின்றார்.

நாடிய பொருள் முதலாயவற்றைத் தருகின்ற அருள், வடிவான அண்ணலை அவர்க்குரிய சத்துவ குணத்தைப் சிறப்பித்துக் கூறாது நீடிய அரக்கர் சேனை நீறுபட்டு ஒழிய வாகை சூடிய சிலை இராமன் என்று வீரச்சுவையைப் பாடியிருப்பது கம்பனின் தவறாகும் என்று ஆதாரங்கள் பலவற்றை எடுத்துக் காட்டிச் சிவஞான முனிவர் தன் வாதத்தை வைத்துள்ளார். இப்பாடலில் காணப்பெறுகின்ற சொற்களுக்குரிய குற்றங்களையும் முனிவர் சுட்டிக் காட்டத் தவறவில்லை. பாடலில் நீறுபட்டு ஒழிய என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இச்சொல்லைப் பற்றி முனிவர் தன்னுடைய வாதத்தினை வைத்துள்ளமை போற்றுதற்குரியது. நீறுபட என்றுதான் கூறவேண்டுமே அன்றி நீறுபட்டு ஒழிய என்று கூறுவது மிகையாகும் என்று கூறி அதற்கு அமைதி கூறும் முகத்தான் செய்திகளையும் கூறியுள்ளார். ஒரு பொருள் நீறு பட்டது என்றால் அதாவது அப்பொருள் நெருப்பில் வெந்து நீறானபின் அப்பொருளின் பழைய பெயர் கூறாது நீறு, பொடி, சாம்பல் என்று தான் பெயர் கூறப்படும். அவ்வாறு பொடியாக, சாம்பலாக அழிந்தவர்கள் மீண்டும் உய்ந்துவர முடியாது. எனவே நீறுபட்டு என்று சொன்னாலேயே போதும். அதனை விடுத்து நீறுபட்டு ஒழிய எனக் கூறவேண்டா எனக் குறிக்கின்றார். இவ்வாறு கருத்தாலும் சொல்லாலும் இப்பாடல் பொருத்தமுடையதாக இல்லை, தவறாக இருக்கிறது என்று சிவஞான முனிவர் தன் வாதத் திறமையை வைத்துக் கம்பனை இலக்கிய உலகின் தலைமைக்கு உரியவர் அல்லர் என்று கூறுகின்றார்.

இப்பாடல் சிவஞான முனிவரின் கூற்றுப்படி அக்காலக் கம்ப இராமயணப் பதிப்பில் முதற்பாடலாக இருந்திக்க வேண்டும். அப்பாடலுக்கு மறுப்புரைக்கின்ற காரணத்தால் தான் தன் நூலிற்குக் கம்பராமாயண முதற்பாடல் - சங்கோத்திர விருத்தி முனிவர் பெயரிட்டுள்ளார். இச்செய்யுளுக்குச் சிவஞான முனிவர் கூறிய கருத்துக்கள் ஏற்புடையதே என்பதால்தான் போலும் முனிவர் சுட்டுகின்ற குறைகள் கம்பனுக்கு வந்துவிடக் கூடாது என்று இக்காலத்தார் அதனை யாரோ ஒருவர் எழுதிச் சேர்த்தாகக் கொண்டுள்ளனர். இன்றைய சென்னைக் கம்பன் கழகக் கம்ப இராமாயணப் பதிப்பிலும் இப்பாடல் மிகைப்பாடல் வரிசையில் இடம் பெற்றுள்ளதே தவிர கம்பன் பாடியதாகக் காட்டவில்லை.

எவ்வாறுயிருப்பினும் சிவஞான முனிவரின் மறுப்புரை, வாதத்திறன் தமிழுலகத்தால் ஏற்றுக் கொள்ளப் பெற்றுள்ளது'

என்பது நன்கு வெளியாகிறது. இதனால் சிவஞான முனிவரின் பெருமையும் தமிழறிந்த உலக மக்களால் பாராட்டப் பெறுகிறது என்பதும் இந்நூல் தரும் சிறப்பாகும்.

3. கலசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்

கலசை என்பது சென்னை நகருக்கு அண்மையிலுள்ள ஆவடி என்னும் நகருக்கு அருகில் உள்ள ஊராகும். இவ்வூருக்குத் தொட்டிக்கலை என்ற பெயரும் உண்டு. இவ்வூரில் உள்ள சைவத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகர் பெயர் செங்கழுநீர் விநாயகர் என்பதாகும். அப்பெருமான் மீது சிவஞான முனிவர் பாடியருளிய நூல் இந்நூல் ஆகும். இந்நூலில் மொத்தம் 53 பாடல்களே உள்ளன. பிள்ளைத்தமிழ் என்பது 100 பாடல்களுக்குக் குறையாது பாடப்பெறுவதாயினும் முனிவர் அவர்கள் இப்பிள்ளைத் தமிழில் 100க்குக் குறைவான பாக்களையே அமைத்துள்ளார். காப்புப் பாடல் 1, ஆசிரியர் கருத்து - 1, காப்புப் பருவம் முதல் சிறுபறைப் பருவம் ஈறாக உள்ள 9 பருவங்களில் பருவத்திற்கு 5 பாடல்கள் வீதம் 45 பாடல்கள், - இறுதிப் பருவமான சிறுதேர்ப் பருவத்தில் 6 பாடல்கள் ஆக 53 பாடல்கள் உள்ளன.

இவ்வெண்ணிக்கை குறைவாக இருப்பதால் மரபு மீறினாரோ என எண்ணவேண்டா. ஏனெனில் முனிவர் தனது மற்றொரு பிள்ளைத் தமிழான குளத்தூர் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழில் 100 பாடல் என்பதைப் பின்பற்றியுள்ளார். (எனவே இப்பிள்ளைத் தமிழ் குறைவான பாடல்களைக் கொண்டிருப்பதற்குக் காரணங்கள்: கிடைக்கப் பெறாமல் இருக்க வேண்டும் அல்லது ஏடு எழுதுபவரால் விடப் பெற்றிருக்க வேண்டும் அல்லது முனிவராலேயே எழுதாமல் விடப்பெற்றிருக்க வேண்டும்.) இந்நூலுக்கு ஒரு சிறப்பு என்னவென்றால் விநாயகர்மீது பிள்ளைத் தமிழ் பாடிய மரபில் இந்நூலே முதல் நூலாகத் தோன்றுகிறது,

ஐம்பத்து மூன்று பாடல்களுமே சுவையும் கருத்துவளமும் கொண்டு விளங்குகின்றன.

"இகலுமொரு வேடம் பரித்துவரு மொருவனுழை
யெல்லோரு மொல்லைக் குழீஇ

யியல்பாக வவ்வுருவ முடையவரி னும்பெருமை
யெண்ணிப் பெருஞ்செல் வமு
மிகவுதவ நீர்மையை மதித்தியல்ப தாத்துதி
விளம்புமத் தாதிய ரினும்
வினையினேன் றன்னிடத் தோவாத பேரருள்
விளைத்திடு மெனக் குறித்தே"

இது ஆசிரியரின் கருத்து என்ற தலைப்பின்கீழ் அமைந்துள்ள பாடலாகும். "தான் ஒரு ஆண்பிள்ளையாக இருப்பதால் பெண்ணாக வேடமிட்டுக் கொண்டு இந்நூலை இயற்றுகிறேன். நாடகத்தில் வேடமிடுவோர்க்குச் சமுதாயம் பல பரிசுகளை நல்குவதுண்டு. அதுபோல இவ்விநாயகர் எனக்கு நிறைய அருள் வழங்குவார்" என்ற கருத்தில் ஆசிரியர் இப்பகுதியை அமைத்துப் பாடியுள்ளார். இதுபோல் பாடிய நிலை எப்புலவரிடத்தும் நாம் காணமுடியவில்லை. பெண்ணாக இருந்து பிள்ளைமேல் அன்பு காட்டினால் இயற்கை அன்பு பிறக்கும். ஆகவே தன்னைப் பெண்ணாக மாற்றிக் கொண்டு விநாயகரைக் குழந்தையாக எண்ணி அன்பின் கசிந்துருகிப் பாடித் திருவருள் வேண்டுகிறார்.

பாடல்கள் தோறும் கற்பனை வளமும், விநாயகரின் சிறப்புக்களும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. சப்பாணிப் பருவத்தில் ஒருபாடலை இங்கு நாம் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். விநாயகரின் இருகரங்களில் ஒருகை அருளும் கை, மற்றொரு கை உயிர்களின் வேண்டுதலை ஏற்கும் கை. எனவே இரண்டு கரங்களால் விநாயகர் சப்பாணி கொட்டுவது ஏற்றலுக்கும், அருளலுக்கும் பகைமை ஏற்பட்டு அமைதிப் படுத்துவார் யாரும் இல்லாததால் ஒன்றையொன்று சாடுவதுபோல் அமைந்துள்ளது என்று கற்பனை செய்கிறார் முனிவர். இதோ அப்பாடல்.

"மிக்குறும் பகைமைமேன் மேலெய்தி யாங்கது
விலக்கத் தமக்கு யர்ந்தோர்
மேதினிக் கின்மையாற் போராட் டியற்கையின்
மெலியா லொன்றை யொன்று
தாக்கவகை தாக்குதல் கடுப்பக் கவின்செயவொர்
சப்பாணி கொட்டியருளே"

பிள்ளையாரின் உருவத்திற்கு விளக்கம் தருகின்ற நிலையிலும் முனிவர் சில பாடல்களை அமைத்துள்ளார். சப்பாணிப் பருவத்தில்

விநாயகப் பெருமான் தன் கைகளில் பாசக் கயிற்றையும், அங்குசத்தையும் பெற்றிருப்பதற்கு அருமையான விளக்கம் தருகிறார். நாட்டில் வாழும் யானைகள் சில நேரங்களில் தன் நிலை மாறி ஒழுக்கம் சிதைந்து மதங்கொண்டு ஓடித் திரியும். அவற்றைப் பிடிக்கக் கருதும் யானைப் பாகர்கள் கையில் அங்குசமும், கயிறும் கொண்டு தேடியலைவர். அது போல உயிர்களின் மலங்களைப் போற்றித் தருக்கித் திரிகின்ற போது அவற்றை நன்னெறிப் படுத்தவே விநாயகர் அங்குசமும், பாசக் கயிறும் தாங்கியிருக்கிறார் என உருவக அணி சிறக்க முனிவர் பாடியுள்ளார் (பா. 20). இவ்வாறு முனிவர் பெருமான் பிள்ளையார் மீது முதன் முதலாகப் பிள்ளைத்தமிழ்பாடி விநாயகப் பெருமானின் பேரருளை நிலவ வைத்துவிடுகிறார்.

4. காஞ்சிப்புராணம் - முதற்காண்டம்

சிற்றிலக்கியப் பணியோடு நின்று விடாது சிவஞான முனிவரின் இலக்கியப்பணி - புராணத்தையும் படைத்துச் சிறந்தது. சிவஞான முனிவரால் இயற்றப் பெற்ற புராணம் காஞ்சி புராண முதற்காண்டமாகும். புராணம் என்பதற்குப் பழமையான வரலாறு என்பது பொருள். காஞ்சித் தலத்தின் பழமையான வரலாற்றை உரைத்திடுவது காஞ்சி புராணம்.

இந்நூல் 2742 பாக்களைக் கொண்டது. "தொண்டைநாடு சான்றோர் உடைத்து" என்பது தொல்லோர் மொழி. அத்தகு சிறப்புப் பெற்ற தொண்டை நாட்டின் சிறப்பினையும், அந்நாட்டின் தலைநகரான - கரும்புச் சாற்றுக் கட்டியாக உருவகப்படுத்திச் சிறப்பிக்கும் பழம் நகரான காஞ்சித் திருத்தலத்தின் சிறப்பினையும் அத்திருத்தலத்தில் தோற்றுவிக்கப் பெற்ற திருக்கோயில்களின் மாண்பினையும் - வரலாறுகளையும் இலக்கிய நயத்தோடு எடுத்துரைப்பது காஞ்சிபுராணத்தின் அடிப்படையாகும். பெரும்பாலும் சைவசமயப் புராணச் செய்திகள் அனைத்தும் சிவஞான முனிவரால் இப்புராணத்தில் கூறப் பெற்றுள்ளது எனலாம்.

மற்றுமோர் சிறப்பு சைவசித்தாந்த வித்தகராகிய முனிவரால் இந்நூல்யாக்கப் பெற்றதால் சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களும் பரந்து பட்டு விளக்கப் பெற்றுள்ளன. சாத்திர நூல்களில் கடினமாக அமைந்திருக்கும் தத்துவக் கருத்துக்கள்

இப்புராணத்தில் மிக எளிமையாகச் சுட்டிக் காட்டப் பெற்றுள் ளன. சாத்திரக் கருத்துகளை விளக்குவதற்கு உவமைகளைப் பயன்படுத்துவது தத்துவ அறிஞர்களின் மரபாகும். அதன்படி சிவஞான முனிவரும் இப்புராணத்தில் உவமைகளின் வாயில்களாக தத்துவக் கருத்துக்களை எளிமைப்படுத்தி விளக்கியுள்ளார்.

"பாரிடம் குழித்து வீழும் பல்வயின் அருவியெல்லாம்
ஓரிரும் பாலியாற்றின் ஒருங்குசென் றணையும்
சீரிய புவனந் தோறுஞ் சிதறிய வினைக ளெல்லாம்
ஓரிடத் தொருவன் றன்பால் உடங்குசென் றுறுதல் போலும்"

எனவரும் பாடலில் உவமை நிலையில் வினைகள் செய்தவனை அடையும் என்பது விளக்கப் பெறுகிறது. பல இடங்களில் தோன்றும் அருவியெல்லாம் - இறுதியிற் பாலியாற்றில் சென்று சேர்வது போல ஒருவன் பல பிறப்புகளில் செய்த வினைகள் எல்லாம் வினை செய்த அவனிடத்தே உறுதியாகச் சென்று சேர்ந்திடும் என விளக்கப் பெறுகிறது.

உவமையோடு மட்டுமா, இலக்கணக் குறிப்போடும் அல்லவா முனிவர் வாக்கு சித்தாந்தத்தை விளக்குகிறது. நாட்டுப்படலம் 136 ஆவது பாடலில் முல்லைத்திணை, நெய்தல்திணையில் மயங்கிய திணை மயக்கம் மூலமாக வினை எங்கிருந்தாலும் செய்தவனை விடாது பற்றும் என்ற சாத்திரக் கருத்து விளக்கப் பெறுகிறது. அதாவது இடையர் குலப் பெண்கள் தயிர் கடையும் போது அதன் ஓசைக்குப் பயந்து நெய்தல் நிலத் தாழம்புதரில் பதுங்கிய முயலைக் கடலோசை அச்சுறுத்தும். அது போல ஒருவன் செய்த கடுவினை யாங்குறினும் விடாது பற்றும் எனக் கூறுகிறார். இப்பாடலில் சிவஞான முனிவர் சிறந்த இலக்கண உரையாசிரியர் ஆதலால் - திணை மயக்கமாகிய இலக்கணக் குறிப்போடு சாத்திரக் கருத்து விளக்கப் பெறுகிறது.

முனிவரின் அழகிய கற்பனைத் திறனும் இந்நூலில் ஆங்காங்கு காணப்பெறுகின்றது. சிவபெருமானை அடிய வர்கள் சிறை வைத்தார்கள். என்ன வியப்பாக இருக்கிறதா? இல்லை, முற்றிலும் உண்மை. பெருமான் சிறையில் அடைக்கப் பெற்றான். காரணம் என்ன? முரண்பட்ட கருத்தைப் பெருமான்

செய்தனன். என்ன முரண்பாடு? முனிவர் அதற்குப் பதில் உரைக்கிறார். "சிவபெருமான் நெடுஞ்சடை தரித்து - தவக் கோலம் பூண்டு - காமனை எரித்து நிற்பவர். அப்படிப்பட்டவர் - உமையவளோடு கூடி - முலைச் சுவட்டை மார்பில் ஏந்தியுள்ளார்" இது முரண்பாடுதானே. முரண்பாட்டுக்குத் தண்டனை வழங்குமாப்போல் சிறை வைக்கப் பெற்றார். எத்தகைய சிறை என்று வினாத் தோன்றுகிறதா? முனிவரே விடை தருகிறார். சிறை வேறெங்கும் இல்லை. மாதவ முனிவர்களின் மனமாகிய குகையுள்தான் சிறை வைக்கப் பெற்றார். இதுவே முனிவரின் விடை.

இத்தகைய சுவை படைத்தபாடல் போல நூல்தோறும் பாடல்கள் கவினுறக் காணப்பெறுவது காஞ்சி புராணமாகும்.

5. குளத்தூர் அமுதாம்பிகைப் பிள்ளைத் தமிழ்

சிற்றிலக்கிய வேந்தராகி விளங்கிடும் சிவஞான முனிவர் பாடிய இருபிள்ளைத் தமிழ் நூல்களில் இது பெண்பாற் பிள்ளைத் தமிழ் நூலாகும். குளத்தூர் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகையின் பேரில் இப்பிள்ளைத் தமிழ் பாடப் பெற்றுள்ளது. இந்நூலில் மொத்தம் 104 பாடல்கள் அமைந்துள்ளன. நூலின் முதற்பாடல் ஆசிரியரின் கருத்து என ஒரு பாடலும், அவையடக்கமாக ஒரு பாடலும், விநாயகர் வணக்கமாக ஒரு பாடலும், காப்புப் பருவத்தில் 11 பாடல்களும், மற்ற பருவங்களில் 10 பாடல்கள் வீதம் 90 பாடல்களும் அமைந்து 104 பாடல்கள் அமைந்துள்ளன. இப்பிள்ளைத் தமிழில் சிவஞான முனிவர் ஒரு புதுமையையும் புகுத்தியுள்ளார். அதாவது அம்புலிப் பருவத்திற்குப் பின் கழங்காடல் என்பதை அமைக்காது நீராடல் பருவம் என்ற பருவத்தை அமைத்துள்ளமையே அப்புதுமை.

கற்பனை நலம் படைத்த பாடல்கள் இந்நூலில் பரந்து காணப்பெறுகின்றன. அம்பிகை துயிலும் கட்டிலையும், தாலாட்டுப் பாடும் மகளிரையும் ஓர் உவமைமூலம் விளக்கும் முனிவரின் இலக்கியப் பாங்கு மிகவும் படித்துச் சுவைக்கக் கூடியதாகும். குளத்தில் செம்மை வண்ணத் தாமரை மலர், அம்மலரில் சுறாமீன் குஞ்சு பொரித்துச் செல்கிறது. சுறாமீன் குஞ்சுகள் தாமரைப் படுக்கையில் இருக்கும் போது - நண்டு

களின் பிளவு பட்ட கால்கள் பட்டுத் தண்டு துண்டாக்கப்பட்டு நீரின் மேல் பரப்பில் மலர் விழுந்தது. அலையின் நடுவே அசைந்து வந்தது. அசைந்து வரும் அம்மலரைச் சுற்றி வண்டுகள் ஒலிக்கின்றன. இக்காட்சி கட்டிலில் அமுதாம்பிகை துயிலக் - கட்டில் அசைய - மகளிர் தாலாட்டுப் பாடுவதை ஒத்தது என்கிறார் முனிவர். (பா. 27)

சப்பாணிப் பருவத்தின் மூன்றாவது பாடலின் பூசனை முறைகளை முனிவர் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார். மூர்த்தங்களுக்குப் பூசனை செய்வதில் ஆர்வமுடையவர் முனிவர் ஆதலால் தன் பயிற்சியால் விளைந்த பெரும்பயனைப் பாரோரும் பெற வழிபாட்டு முறையே நன்கு புலப்படுத்தி யுள்ளார்.

“ஐவகைச் சுத்தியு மமைத்துவான் கம்பைநதி
யருகன்பு பூப்பமலரால்
அஞ்சலி நிறைத்துமே னோக்கிமுக மதியினெதி
ரல்கிய தெனக்குவிந்து
மெய்வகைத் துவாதசாந் தத்தலத் தானந்த
வெள்ளப் பெருஞ்சோதியை
விரிமலர்த் தவிசாக வேற்றுமுன் போலென்ன
மீண்டுங் குவிந்திழிந்தாங்
குய்வகைச் சிவலிங்க நாப்பணா வாகித்தவ்
வும்பனய னச்சுடரெதிர்
உறக்குவிந் தலர்விரைவு மானமுத் திரைகொடுத்
துலவாது பூசைமுற்றுஞ்
சைவமுறை யாற்றுகைப் பங்கயஞ் சேப்பவொரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்ச் சுவைகண்ட தென்குளத் தூரம்மை
சப்பாணி கொட்டியருளே” (37)

இப்பாடல் சிவஞான முனிவரின் சைவப்பற்றுக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது எனலாம். 19-ஆம் திங்களில் நிகழும் நீராடல் பருவம் முனிவரால் இணைக்கப் பெற்ற பருவமாகும். இப்பருவத்தின் பாடல்கள் சிவஞான முனிவரின் இலக்கியத் திறனை மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. இறைவனின் தீர்த்தங்களில் ஆடுகின்றவர்களுக்கு என்னென்ன பயன்கள் விளையும் என்பதைப் பாடல்தோறும் எடுத்துக் காட்டுகிறார்.

"தீர்த்தம் பந்தாடினால் குற்றக் கூட்டமாக விளங்கும் மலமாயை கன்மக்குழாம் விரைந்து ஓடும்" (88)

என்று குறிப்பிடுவது எடுத்துக்காட்டுக்கு ஒன்றாகும். இவ்வாற் பெண்பாற் தமிழுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூல் விளங்கி முனிவரின் இலக்கியப் பணிக்குத் திலகம் போல விளங்குகிறது எனலாம்.

6. செப்பறைப்பதி இராசை அகிலாண்டேசுவரி பதிகம்

செப்பறை என்ற திருத்தலம் திருநெல்வேலியிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள இராசவில்லிபுத்தூருக்கு அண்மையில் உள்ள திருத்தலமாகும். இத்தலத்திற்குச் செப்பறை என்ற பெயர் உண்டு. இத்தலத்தில் அமைந்த திருக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அம்பிகைமீது முனிவர் பாடி யருளிய நூலே இப்பதிகம். இந்நூல் பதிகம் என்பதற்கேற்பப் பத்துப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது.

இந்தப் பதிகத்தில் அமைந்துள்ள பத்துப் பாடல்களையும் சித்தாந்தப் பெருமக்கள் தசகாரியம் என்று குறிப்பிடுவர். தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபாகம் என்ற பத்துக் காரியங்களையும் இப்பாடல்கள் குறிப்பாகக் காட்டுகின்றன என்பதாம். முதற்பாடலின் தத்துவ ரூபத்தை முனிவர் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார். ஆணவமலத்தைப் பெற்றிருக்கிற உயிர்கள் அதைநீக்க வேண்டுமானால் மாயை, கன்மம் என்ற இரண்டு மலங்களையும் பொருந்த வேண்டும். இத்தகைய தத்துவ ரூபத்தை அறியாமல் உயிர்கள் வாழ்கின்றன என்பதை முதற் பாடலில் குறிக்கின்றார்.

"பண்டை வினையாலும் வருபழவினையினால் உறு
பாழ்த்த கன்மத்தினாலும்
பாழான மாயைப் புணர்ச்சியாலும் தொலைவில்
பலபல தறுக்கள் தூக்கிக்
கொண்டு சுழல் பாவியேன்"

என்று இப்பாடலின் மூலம் பழவினையாகிய கன்மங்களும் மாயைப் புணர்ச்சியும் உயிர்களைச் சூழ்ந்துள்ளன என்பது தெரிகிறது. அது

போல தத்துவ தரிசனத்தையும் உவமைகளின் மூலமாகச் சிவஞான முனிவர் விளக்குகிறார். தத்துவங்களைப் பற்றி உணர்வது தத்துவ தரிசனமாகும். தத்துவ தரிசனங்களை அறிய வேண்டுமானால் இறைவனுடைய திருவடி வேண்டும். உயிர்கள் உலக வாழ்வில் இல்லாதனவற்றை இருப்பதாகக் கொண்டு, அறியாதனவற்றை அறிந்துவிட்டதாகக் கொண்டு வாழ்கின்றன. அதனால் அவை தத்துவ தரிசனங்களை அறிய முடியவில்லை என்று விளக்குகிறார். நாயானது உலர்ந்த எலும்பைக் கடித்ததனால் தன் வாயில் ஏற்பட்ட புண்ணிலிருந்து தன் இரத்தம் ஒழுகுவதைத் தானே சுவைத்து (தன் இரத்தம் என்று அறியாது) இன்புறுதல் போல உயிர்கள் உலகில் பெருந்துன்பங்களை எல்லாம் சுகமெனக் கொள்கின்றன, என்ற பொருளமைந்த இரண்டாம் பாடலின் மூலம் மேற்குறிப்பிட்ட கருத்தை விளக்குகிறார்.

.... பசையிலாத
வெற்று என்பினைக் கடித்து அலகு புண்ணாய்க் குருதி
விழும் அதைப்பருகு நாய்போல்
சொல்லற்ற உலகில் உறுதன்பு எலாம் சுகமாய்த்
துடிப்பர் சிலர்"

என்பது அப்பாடலாகும. இவ்வாறு நூல் முழுமையும் தத்துவக் கருத்துக்கள் அமைந்து சிவஞான முனிவரின் தத்துவ வித்தகத்தை விளக்குகின்றன.

7. சோமேசர் முதுமொழி வெண்பா

சிவஞானமுனிவரின் பிற இலக்கியப் பயிற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது இந்நூல். அதிலும் முனிவர் பெருமான் திருக்குறள்பால் எவ்வளவு ஈடுபாடு கொண்டவர் என்பதை இந்நூல் தெற்றென விளக்கிக் காட்டுகிறது. குளத்தூர் என்ற திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் சோமேசர் என்பதாகும். அவரின் பெயரால் இந்நூல் விளங்கப் பெறுகிறது. மொத்தம் 133 வெண்பாக்கள் உள்ளன.

நூலின் அமைப்பு மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. திருக்குறளின் ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒவ்வொரு குறளை நூலில் காணப்படும் வெண்பாவின் ஈற்று இரண்டடியில் இடம்பெற வைத்து முன்னிரண்டு அடிகளில் அந்தக் குறளுக்குரிய விளக்கங்களை அமைத்துள்ளார். அதன்படி

திருக்குறளின் 133 அதிகாரத்திற்கேற்ப 133 வெண்பாக்கள் இந்நூலில் அமைந்துள்ளன. வெண்பாக்களுக்குத் தலைப்பு திருக்குறளின் அதிகாரத் தலைப்புக்களாகவே அமைந்துள்ளன. குறள்களுக்கு விளக்கமாகப் பல புராணக் கதைகள் இடம் பெற்றுள்ளன. அறுதியிட்டுச் சொன்னால் 133 வெண்பாக்களில் 127 வரலாறுகள் புராணத்திலிருந்து எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன. எறிபத்தர் யானையை வீழ்த்திய பெரியபுராணக் கதையைக் கீழ்க்கண்ட பாடலில்,

"வெங்கரியைப் பாகரைமுன் வீட்டினா ரேகராய்த்
துங்க வெறிபத்தார் சோமேசா - வங்கம்
பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்" (60)

குறிப்பிடுகிறார். இதுபோலக் கந்தபுராணம், நளவெண்பா, திருவிளையாடல், இராமாயணம், பாரதம், லிங்கபுராணம், கஞ்சி புராணம், பிரபுலிங்கலீலை, திருவாதவூரர் புராணம், இரகுவம்சம் ஆகிய புராண நூல்களின் புராணக் கதைகளை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

பின்னிரண்டு அடிகளில் திருக்குறளைக் கையாளும் பொழுது ஒவ்வொரு அதிகாரத்திற்கும் ஒரு குறளைக் கையாளுகிறார். அவ்வாறு முனிவர் கையாண்டிருப்பதைப் பார்க்கின்ற பொழுது அக்குறட்பாக்கள் முனிவரின் நெஞ்சத்தில் முதலிடம் பெற்றிருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. பத்துக் குறள்களைக் கொண்ட ஒரு அதிகாரத்தில் ஒரு குறளை ஏன் ஆசிரியர் எடுத்துக் கையாண்டிருக்கிறார் என்றால், அந்தக் குறள் ஆசிரியரின் மனத்தகத்தே சிறப்பாகப் பதிந்திருந்தமை யால்தான்.

திருக்குறள் வாழ்க்கையில் மேற்கொள்ளக்கூடிய அறங்களை வெளிப்படுத்தியுள்ளது, என்பதில் யார்க்கும் மாற்றுக் கருத்து இருக்க இயலாது. ஆனால் தமிழகத்தார் திருக்குறளை மேற்கோளாகக் கொள்கிறார்களே தவிர மேற்கொள்வதற்குத் திருக்குறளைக் கொள்வதில்லை. ஆனால் சிவஞான முனிவர் இவ்வுலக மக்கள் திருக்குறள் கருத்துக்களை மேற்கொள்ளலாம் என்று கூறும் முகத்தான் பண்டு புராணங் களின் பாத்திரங்கள் மேற்கொண்டமை எடுத்துக்காட்டி

இக்காலத்தோரும் மேற்கொள்ளவேண்டும் என்பதை வற்புறுத்த நினைத்திருக்கின்றார் எனலாம்.

"தோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற குறட்கருத்து என்றும் மேற்கொள்ளத் தக்கது என்பதனை அப்பரடிகள் வாழ்க்கையின் மூலமாக வெளிப்படுத்தி உலக உயிர்களைப் பின்பற்ற வைக்கின்றார். இதோ அவரின் பாடல்:

"நல்ல திலகவதி யார்மொழியை நம்பிவெந்நோய்
சொல்லரசர் தீர்ந்துய்ந்தார் சோமேசா - புல்லிய
நோய்நாடி நோய்முத னாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (95)

இவ்வாறு நூல் இக்காலச் சூழலும் ஏற்றுக் கொள்ளத் தக்க இலக்கியப் பாங்கினைப் பெற்று முனிவர் பெருமானின் இலக்கியப் பணியைப் பறை சாற்றிக் கொண்டிருக்கிறது.

8. திருத்தொண்டர் திருநாமக் கோவை

சிவஞான முனிவரின் இலக்கியப் பணியில் மிகச் சிறிய நூலாக விளங்குவது இந்நூலாகும். திருத்தொண்டத் தொகை, திருத்தொண்டத் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணம் என்ற வரிசையில் திருநாமக் கோவை என்ற நூல் இடம் பெறுகிறது. "தில்லைவாழ் அந்தணர்கள்" என்று தொடங்குகின்ற இந்நூலில் 63 சைவத் திருத்தொண்டர்களும், தொகையடியார்கள் ஒன்பது பேரும் குறிக்கப் பெறுகின்றனர். இந்நூல் எழுந்தது பற்றிச் செவிவழி மரபாக ஒரு செய்தி கூறப்பெற்று வருகிறது.

"காஞ்சீபுரத்தில் மார்கழி மாதத் திருவாதிரை விழா நடைபெறும் நாள்களில் திருவாசகத்து திருவெம்பாவைப் பாடல்களைத் தவிரப் பிறதேவாரம் முதலிய பாடல்களைப் பாடுவதில்லை. ஆன்மார்த்த வழிபாட்டிலும் ஓதப்படுதல் இல்லை. அடியார் பெயர்களையே மந்திரமாகக் கொண்டு வழிபடுபவர்களும் ஓதல் கூடாது. இப்படி ஒரு கட்டளை. இப்படியிருந்தது பலர்க்குக் குறைவாகப்பட்டது. சிவஞான முனிவர் அதற்கு ஓர் முடிவு செய்து மார்கழித் திருவாதிரை விழாக் காலத்தில் இறைவனைப் பற்றிய எப்பாடலும் பாடலாம் என்பதற்காகத் திருத்தொண்டர் சிறப்பை விளக்கித்

திருத்தொண்டர் திருநாமக்கோவை என்னும் நூலை இயற்றினார் என்பது அச்செவி வழிச் செய்தி.

இத்தகைய சிறப்புப் பெற்ற இந்நூலில் அடியார்களின் பெயர்கள் கோர்வையாகக் கூறப்பெற்றுள்ளன. அவ்வாற கூறும் பொழுது அடைமொழியோடு கூடிய நிலையில் பெயர்கள் அமைந்துள்ளன. உதாரணமாக திருக்கண்ணப்பர், நற்கலை யார், மருவுமறைச் சண்டீசர், தக்க குலச்சிறையார், முத்தமிழ் ஆளும் திருஞான சம்பந்தர், மொய்த்த கணம்புல்லர், என்ப போலத் தொண்டர் பெயர்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இந் நூலின் பயனாக முனிவர் கீழ்க்கண்ட வரிகளை அமைத்துள்ளார்.

"சிந்தனைசெய் திந்த திருநாமக் கோவைதனை
மந்திரமாகக் கொண்டு மயிர்சிலிர்த்து - நைந்துருகி
மெய்யன்பா லென்றும் விளம்பப் பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங் கற்பனையு - மையலுந்தீர்ந்
தத்துவிதா னந்த விகண்டபரி பூரணத்தின்
நித்தியமா வாழ்வார் நிசம்"

இப்பகுதி முனிவரின் இறைவன் மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையையும் இறைத் தொண்டர்களின் நாமத்தைக் கூறுவதால் பயன் கிடைத்திடும் என்ற நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுகிறது. ஈற்றில் அமைந்த நிசம் என்ற சொல் மிகச் சிறந்த நிலையில் முனிவரை நமக்கு அடையாளம் காட்டுகிறது. மேலும் முனிவரின் சைவப் பற்றினையும் கலிவெண்பா அமைப்பில் அமைந்தமையால் கவிப்புலமையையும் இந்நூல் கலங்கரை விளக்கைப் போல் காட்டிக் கொண்டிருக்கிறது.

9. திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு

திருநாமக் கோவையை அடுத்துச் சிறு நூலாக விளங்குவது திருவேகம்பர் ஆனந்தக் களிப்பு ஆகும். இது காஞ்சித் திருநகரில் பிச்சாடனர் திருவிழாவைக் கண்டுகளித்த இன்பப் பெருக்கால் முனிவரால் பாடப்பெற்ற நூலாகும். ஒன்றுமுதல் பத்துவரை அமைந்த எண்களை வரிகளின் தொடக்கமாகப் பெற்ற பத்து வரிகளையும் அதன்பின் ஐந்து வரிகளையும் கொண்டு ஆகப் பதினைந்து வரிகளில் அமைந்தது இந்நூல். பாட்டுடைத் தலைவி தன் தோழியிடம் பேசுவது போல இந்நூல் அமைந்துள்ளது.

முனிவர் இறைவனின் திருக்கோலத்தைக் கண்டு இந்நூல் இயற்றினார் என்பதற்கு அகச்சான்றாக நூலின் தொடக்கத்தில் அமைந்துள்ள சந்தப் பாடல் அமைந்துள்ளது.

"ஆனந்தமானந்தந்தோழி - கம்பர்
ஆடுந்திருவிளையாட்டினைப்பார்க்கில்
ஆனந்தமானந்தந்தோழி"

மேலும் தலைவியின் கூற்றாக இந்நூல் அமைந்துள்ளது என்பதற்கும் இப்பகுதி சான்றாக அமைந்துள்ளது எனலாம். இந்நூலில் இறைவனின் பெருமைகளும், இறைவனின் வடிவழகும் பலவாறாகப் பாராட்டப் பெற்றுள்ளது. மூன்று உலகம் படைப்பவராம் - அந்த மூன்றுலகும் உடனே துடைப்பாராம் - என்று இறைவனின் அந்தம் ஆதிச் செயல்களை முனிவர் விளக்குகிறார். மேலும் ஆறாறு தத்துவக் கூட்டம் - உடன் ஆறு அத்துவாக்களும் - ஆதாரம் ஆறும், ஆறு குற்றங்களும் நீங்க இறைவன் அருள்புரிவான் என்று கூறி இறைவனின் அருட்திறத்தைத் தத்துவ விளக்கத்தோடு புலப்படுத்தியுள்ளார். "எட்டுக்குணம் உடையவராம் பத்தி எட்டும் உடையோர் இதயத்தில் உள்ளவராம்" எனக்கூறி இறைவனின் எண்குணங்களையும், அடியவரின் இதயக் கமலத்தில் அவர் கொலுவிருப்பதையும் முனிவர் சுட்டிக் காட்டுகிறார். இவ்வாறு பலவாறாக இறைவனின் பெருமைகள் கூறப்பெற்றுள்ளன. இறைவனின் வடிவங்களை ஐந்து வரிகள் எடுத்தியம்புகின்றன. "கையில் பிடிப்பது பாம்பு, கையில் கபாலம், திருக்காலினில் பாதுகை, மெய்யில் திருநீறு, உடுப்பது காவி உடை, எடுப்பது பிச்சையமுது" என்று இறைவனின் திருவடிவத்தை ஆனந்தமாகப் பாடிக் களிக்கின்றார். இந்நூல் சிவஞான முனிவருக்குச் சந்தப் பாடல்கள் பாடும் திறன் உண்டு என்பதனை வெளிப்படுத்திக் காட்டுகிறது. சிறந்த ஒரு சிந்தாக இந்நூலை அவர் பாடியுள்ளார். நூல் சிறிதாக இருப்பினும் தத்துவ விளக்கமும், கற்பனையும் விரிந்ததாகும்.

10. பஞ்சாக்கர தேசிகர் மாலை

இந்நூல் மாதவச் சிவஞான யோகிகள் - திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருமுதல்வர் ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகளைப் போற்றி வழிபடும் முறையில் பாடப்பெற்ற மாலைச் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்ததாகும். இந்நூல் 10 கட்டளைக் கலித்துறைப் பாக்களால் அமைந்த தாகும்.

இந்நூல் இன்றளவும் ஆதி குருநாதராம் நமச்சிவாய மூர்த்திகளின் திருவருள் முன்னர் - நாள்தோறும் பாடப் பெற்றுவருகிறது. இதிலிருந்து இந்நூலின் சிறப்பை நாம் உணரலாம். முனிவர் பெருமான் தாம் சார்ந்த குருவின் திருவருள்பெற்ற திறத்தையும் - குரு முதல்வரின் பெருமை யையும், உபதேசங்களையும், புகழ்ந்து போற்றி இந்நூலை அமைத்துள்ளார். மேலும் இந்நூலில் தம் இழிநிலையைப் போக்கி ஞானம் அருள வேண்டும் என்பதற்கு இணங்கத் தன் வேண்டுகோளையும் அமைத்துள்ளார்.

ஒவ்வொரு செய்யுளும் "பஞ்சாக்கிர தேசிகனே" என்ற முடிபைப் பெற்றுள்ளது. இறுதிப் பாடலில்,

"திருவெண்ணெய் மெய்கண்ட தேவேபஞ்சாக்கிர தேசிகனே" என்ற முடிபைப் பெற்றுள்ளது. இத்தொடர் குரு நமச்சிவாயப் பெருமானை திருவெண்ணெய் நல்லூர் மெய் கண்டதேவரின் வடிவாக முனிவர் கண்டு போற்றியிருக்கிறார் என்பதற்கு ஆதாரமாக விளங்குகிறது.

ஞானிகள் தங்களைத் தாழ்த்தியே இறையருளை வேண்டுவர். அத்தகு நிலையில் சிவஞானம் கைவரப் பெற்ற சிவஞான முனிவர்,

> "பரிசறியேன் அருட் பண்பறியேன் என்னைப் பற்றும் வினைக்
> கரிசறியேன் அது மாற்ற றியேன்" என்றும் (3)
>
> "பொய்யுங் கவருங் கொடுமையும் வஞ்சமும் பூண்ட பொல்லாக்
> கையன்" என்றும் (2)
>
> "பிறவித் துயரினி யாற்றேன் அடைக்கலம்" - என்றும் (9)

தன்னைத் தாழ்வு படுத்தி பஞ்சாக்கிரத் தேசிகரிடம் திருவருள் பெற விழைகின்றார்.

பஞ்சாக்கிர தேசிகரின் பெருமை கூறும்போது "வற்றாக் கருணைத் திருநோக்கு" (6) எனவும், "அறிவே யருட்செல்வமே நிறைவே" (1) என்றும்.

"சீறாது அருள் செய்யும் தேவே" (8) என்றும், கூறிப் போற்றுகின்றார். முனிவர் இத்தகைய பெருமானிடம் கீழ்க்கண்டவாறு வேண்டுகிறார்.

"தொழும் பேறுக்கு உன் தெரிசனம் கிட்ட வேண்டும்" (3)

"அடிமையும் எந்நாள் உனதருள் மேவுவது" (4)

"பொற்றாளம் சின்முத்திரை நெஞ்சூடு பொறித்து வைப்பாய்" (7)

இவ்வாறு இச்சிறுநூலில் தன்னிலை இரக்கமும், குருவருள் மேன்மையும், தன் விழைவுகளும் முனிவர் பெருமானால் யாத்து வைக்கப் பெற்று நாமும் பாடிப் பரவிட அருள் செய்யப் பெற்றுள்ளது எனலாம்.

அந்தாதிகள்

சிவஞான முனிவரின் இலக்கியப் பணியில் சிற்றிலக்கியங் களை யாத்தருளியபணி போற்றுதலுக்குரிய நிலையில் அமைந்துள்ளது. அவருடைய சிற்றிலக்கிய பணியில் பிள்ளைத்தமிழ், பதிகம், மாலை, அந்தாதி, ஆனந்தக் களிப்பு என்ற சிந்து ஆகிய சிற்றிலக்கிய வகைகள் செம்மையாக அமைந்து தமிழிலக்கிய உலகில் பெருமையைத் தேடித் தந்திருக்கின்றன. அவர் யாத்த சிற்றிலக்கியங்களில் அதிக எண்ணிக்கையில் நூல்களைப் பெற்ற சிற்றிலக்கியம் அந்தாதி வகையாகும். 5 அந்தாதிகளை அவர் யார்த்துத் தந்துள்ளார். ஐந்தும் "அந்தாதி இலக்கணங்களில்" 'மாறுபடாமல்' 'இலக்கியச் சுவை குன்றாமல்' அமைந்துள்ளன. அவை இனிவரும் கட்டுரைகளில் முழுமையாக எடுத்து ஆய்வு செய்யப் பெற்றுள்ளன.

சிவஞான முனிவர் மழலைப் பருவத்திலேயே துறவில் நாட்டம் கொண்டு வாழ்ந்தவர். ஆதலால் அவருடைய வாழ்க்கை சமயம் சார்ந்த வாழ்க்கையாகவே அமைந்தது. சமயம் சார்ந்த நிலையில் அவர் தமிழ் மொழிக்கு அரிய தொண்டுகளைச் செய்து நீங்காப் புகழ்பெற விரும்பி இலக்கியங்களையும், இலக்கண உரைகளையும், தத்துவ விளக்க நூல்களையும் அருளினார். சமயம் சார்ந்தவர்கள் இறைவனைப் போற்றுவதிலேயே தங்களுடைய வாழ்வை ஈடுபடுத்துவர். ஆயின் சிவஞான முனிவரோ தான் சமயம் சார்ந்திருந்தாலும் சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றியதோடு தமிழ் வளர்ச்சிக்கும் தொண்டாற்றினார் என்பதை அவரின் மேற்குறித்த படைப்புகள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

எனவேதான் தமிழின் எல்லாத் துறையிலும் அவருடைய தொண்டு சிறந்து விளங்கிற்று. அவருடைய இலக்கியப் பணி அவருக்குப் பின்னர் வந்த சமயச் சார்புடையோருக்கு எடுத்துக் காட்டாக விளங்கிற்று. இலக்கியப் பணியைச் செய்கின்ற பொழுது சிற்றிலக்கியங்களையும் பேரிலக்கியங்களையும் படைத்துத் தன்னிகரற்று விளங்க முடியும் என்பதும் உறுதி யாயிற்று. எனவே தான் சிவஞான முனிவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பின்னர் வந்த சமயத் துறவிகள் இலக்கியப் பணியைச் செய்தார்கள்.

சிவஞான முனிவரின் இலக்கியப் பணியில் காஞ்சிபுராணம் என்ற பேரிலக்கிய யாத்த பணி மிகவும் போற்றிப் பாராட்டத் தக்க பணியாக அமைகின்றது. அதுபோலத் திருத் தொண்டர் திருநாமக்கோவை வரலாற்றுக்குத் துணைபுரிவதாக அமை கின்றது. கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோதர விருத்தி இலக்கியத் திறனாய்விற்கு வித்திட்டு ஆய்வாளர்களுக்குப் பெரும் பயனைத் தருகிறது. எஞ்சிய சிற்றிலக்கியங்கள் எல்லாம் சிற்றிலக்கிய வகைகளுக்குப் பொன் வண்ணம் பூசியதாக அமைகின்றன.

இத்தகைய இலக்கியப் பணி செய்த சிவஞான முனிவரைத் தமிழுலகம் என்றும் போற்றிப் பரவுதல் வேண்டும். எனவேதான் தொட்டிக்கலை சுப்ரமணிய சுவாமி அவர்கள்,

"கதிமதுரக் கவிதை மாரி
மாதவ வழுத்தப் பொழிந்தருளி வென்றுமவர்
மன்னிவளர் சந்தி தியிலோர்
மணிவிளக் கென்னவளர் சிவஞான மாதவன்
மலர்ப்பதம் வணங்கு வாமே!

எனப் போற்றிப் பரவுகிறார்.

O

3

சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள் அறிமுகம்

முன்னுரை

சிவஞான முனிவர் இலக்கியப் பணியில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குவது அந்தாதி எனும் சிற்றிலக்கிய வகைக்கு ஐந்து நூல்களை இயற்றித் தந்தமையாகும். முனிவருக்குக் கவிதை இயற்றும் ஆற்றல் இளமைக்காலம் தொட்டே இருந்தமை அவரின் வரலாற்றுச் செய்திகளின் மூலம் நன்கு தெரிகிறது. அதில் ஒன்றான திருவாவடுதுறைத் திருமடத்தில் ஒருநாள் உணவு உண்ணும்போது இடப் பெற்ற உணவு நிலைபற்றித் தம்பிரான் சுவாமிகளுக்கிடையே நடைபெற்ற உரையாடல் கவியாக எழுந்த போது சிவஞான முனிவர் ஈற்றடிபாடிக் கவியை நிறைவு படுத்திய நிகழ்த்தி குறிப்பிடத்தக்கதாகும். இளமையில் இருந்த கவிஇயற்றும் புலமை வளர்ந்து நூல்கள் இயற்றும் அளவிற்கு முத்தாய்ப்புப் பெற்றது. மரப்புக்கவிகளும், சந்தக் கவிகளும் முனிவரின் கைவண்ணத்தில் அழகு பெற்றுத் திகழ்ந்தன. வெண்பா - கலிப்பா - ஆசிரியம் ஆகிய பாவினங்களை எளிமையாகப் பாடும் திறன் முனிவருக்குக் கைவந்த கலையாக விளங்கிற்று. அத்திறனில் வடிவெடுத்ததே அந்தாதி இலக்கியங்கள். அவற்றைப் பற்றிய பொது அறிமுகத்தை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கம்.

அந்தாதி இலக்கியங்கள்

முனிவரால் இயற்றப் பெற்ற அந்தாதி இலக்கியங்கள் ஐந்து ஆகும். அந்தாதி இலக்கியங்கள் பாடுபொருள் இறைமைக் கொள்கை என்பதால் இறையுணர்வு வாய்க்கப் பெற்ற - குருவருளாம் திருவருள் வாய்க்கப் பெற்ற சிவஞான முனிவர் தாம்பாடிய இலக்கிய வகைகளிலேயே அந்தாதி இலக்கியங்களை அதிகமாகப் பாடியருளியிருக்கிறார். அந்தாதி இலக்கியங்கள் இறைவனைப் பற்றியோ - திருத்தலம் பற்றியோ பாடப் பெறுவது என்ற மரபிற்கேற்ப இறைவன்மீது திருவேகம்பர் அந்தாதி என்று ஒரு நூலும், திருத்தலம் மீது இளசைச் பதிற்றுப்பத்தந்தாதி, கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருமுல்லைவாயில் அந்தாதி, குளத்தூர் பதிற்றுப்பத்தாந்தி என்ற நான்கு அந்தாதிகளையும் பாடியருளியுள்ளார்.

அந்தாதி வகைகளில் அவை பதிற்றுப் பத்தந்தாதி என்ற வகையில் மூன்றாகவும், திரிபு அந்தாதியில் ஒன்றாகவும் (திருமுல்லைவாயில் அந்தாதி), யமக அந்தாதியில் ஒன்றாகவும் (திருவேகம்பர் அந்தாதி) அமைந்துள்ளன. இவ்வாறு அந்தாதி இலக்கியங்களின் மரபுணர்ந்து பாடும் திறன் சிவஞான முனிவர் பால் இருந்தமையால் - அவரின் அந்தாதி இலக்கியங்கள் சிற்றிலக்கிய வகைகளில் சிறப்புற்றுத் திகழ்கின்றன. இனித் தனித் தனியே அவ்வைந்து இலக்கியங்களின் அறிமுகம் தொடர்கின்றது.

திருவேகம்பர் அந்தாதி

இவ்வந்தாதி கம்பர் அந்தாதி என்று அழைக்கப்பெறுகிறது. இப்பெயரை நூலாசிரியராம் சிவஞான முனிவரே குறிப்பிட்டிருக்கிறார்.

> "என்சொல் - கம்பரந் தாதியும் கைக் கொண்ட வாகச்சிக்
> காவலனே" (1)

என்பது முனிவரின் வாக்காகும். திருவாவடுதுறைத் திருமடத்தின் பழைய பதிப்புக்களில் "கம்பரந்தாதி" என்ற பெயரே காணப் பெறுகிறது. மதுரை இராமசாமிப் பிள்ளையவர்கள் பதவுரை எழுதி வெளியிட்ட பதிப்பில் "கம்பர் அந்தாதி" என்ற பெயர் இருப்ப தையும் இங்கு சுட்டலாம். பின்னர் இறையருள் நூல்களுக்குத் திரு

என்ற அடைமொழி கொடுப்பது என்ற மரபுப்படி திருசேர்க்கும் போது கம்பர் என்ற பெயர் ஏகம்பர் என ஆகித் திரு இணைந்து திருவேகம்பர் என அமைந்திருக்கின்றது.

இவ்வந்தாதி காஞ்சிபுரத் திருத்தலத்தில் திருவேகம்பர் என்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன்மீது பாடப்பெற்ற அந்தாதியாகும். இவ் அந்தாதி இலக்கியம் கட்டளைக் கலித்துறைப் பா வகையால் பாடப்பெற்றுள்ளது. இப்பொழுது இவ்வந்தாதியில் கிடைப்பது 94 பாடல்களே. எஞ்சிய பாடல்கள் கிடைத்தில எனப் பதிப்பாளர்கள் குறித்துள்ளனர். முனிவர் மற்ற அந்தாதிகளில் 100 பாடல்கள் பாடியிருப்பதாலும், தாம்பாடிய அந்தாதிகளை மண்டலித்துப் பாடியிருப்பதாலும் - திருவேகம்பர் அந்தாதியின் 94-ஆம் பாடல் முதற்பாடலோடு மண்டலித்து முடியாமையாலும் எஞ்சிய ஆறு பாடல்கள் கிடைத்தில என்று கொள்வதில் தவறில்லை.

இவ் அந்தாதியின் பாடல்கள் யமக அமைப்பைப் பெரும்பாலும் பெற்றுள்ளன. இடைஇடையே திரிபு அமைப்பும் காணப் பெறுகிறது. அடிதோறும் முதற்சீரில் முதல் எழுத்து மாறிவரும் அமைப்பாகிய திரிபு அமைப்பில் இருப்பது 2, 30, 39, 55, 56 ஆகிய எண்களைக் கொண்டு விளங்கும் ஐந்துபாடல்களாகும். மேலும் திரிபும் யமகமும் இல்லாத அந்தாதி அமைப்பும் இரு பாடல்களில் காணப்பெறுகின்றன. அதாவது நான்கு அடிகளிலும் எதுகை அமைந்து மோனை முதலடியிலும் - நான்காமடியிலும் மாறியிருக்க இடையடிகள் இரண்டும் ஒத்திருக்க அமைந்திருக்கும் அமைப்பில் பாடல்கள் இரண்டு காணப்பெறுகின்றன. 31, 38 என்ற இரு எண்களைக் கொண்ட பாடல்களே அவை.

நூலின் தொடக்கத்தில் காப்புப் பாடல்கள் இல்லை. பிற அந்தாதிகளில் காப்புப் பாடல்கள் இருப்பதை நோக்கும்போது இவ்வந்தாதிக்கு முனிவரால் காப்புப் பாடப்பெற்றிருந்து இன்று அப்பாடல் கிடைக்கப்பெறவில்லை என்றே கருத வேண்டியுள்ளது.

திருவாவடுதுறை திருமடத்தின் 226வது வெளியீடாக வெளி வந்துள்ள பதிப்பில் நூலிற்குச் சிறப்புப் பாயிரம் ஒன்று

காணப் பெறுகிறது. இச்சிறப்புப் பாயிரம் யார் பாடியது என்று குறிக்கப் பெறவில்லை. இந்நூலிற்கு மதுரை இராமசாமிப் பிள்ளையவர்களின் பதவுரை வெளிவந்துள்ளது.

இளசை பதிற்றுப் பத்தந்தாதி

திருத்தலத்தின்பேரில் பாடப்பெற்ற அந்தாதிகளில் இவ்வந்தாதி ஒன்றாகும். தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் வேண்டுகோளுக்கு இணங்க அவரின் திருநகருக்கு எழுந்தருளிய போது இடையில் அமைந்த இளங்காடு என்ற திருத்தலத்தில் தங்கியிருந்தபோது பாடிய அந்தாதி இவ்வந்தாதியாகும். சென்னைக்கு அருகிலுள்ள தொட்டிக்கலை, அத் தொட்டிக் கலைக்கு அருகிலுள்ளது இளங்காடு. இளங்காடு என்பதே இளசை என மருவி வழங்கப் பெறுகிறது. இளங்காடு என்ற அத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது இந்நூல் பாடப்பெற்றதாகும். காப்புச் செய்யுளில் "இளங்காட்டு நகர்ப் பதிற்றுப் பத்தந்தாதி திருத்தொடையல் எம்பெருமான் சேவடியில் சூட்ட என" முனிவர் பெருமான் குறிப்பிட்டிருப்ப தால் இந்நூலுக்கு இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி என முனிவரே பெயர் சூட்டியிருக்கிறார் என்பது தெள்ளிது.

இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் பெயர் அகத்தீஸ்வரர். இதனை,

"பித்தரின் மயங்கித் திரிவது என்னேயோபேசிடா யகத்தீச்சுரனே'

என 5-ஆம் பாடல் குறிப்பிடுகிறது. இவ்வந்தாதி பதிற்றுப் பத்தந்தாதி என்பதற்கேற்பப்பத்து வேறுபட்ட பா வகைகளோடு 100 பாடல்களைப் பெற்று விளங்குகிறது. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் ஒன்றும், பஞ்சாக்கிர தேசிகர் வணக்கப் பாடல் ஒன்றும் அமைந்துள்ளது. கலிவிருத்தம், அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர் ஆசிரிய விருத்தம் ஆகிய பாவகைகளை இந்நூல் பெற்றுள்ளது. இந்நூலில் அமைந்துள்ள பாடல்கள் தோத்திரப் பாடல்களின் அமைப்பையே பெரும்பாலும் பெற்றுள்ளன.

"வாழ்த்துகிலேன் றிருப்புகழை மணங்கொள்ளேன் றிருவடியைத்
தாழ்த்துகிலேன் சென்னியினைத் தமியேனைக் கருக்குழியில்
வீழ்த்துவையோ பேரறிவை விளக்குவையோ வறியகிலேன்
ஊழ்த்தமலர் பொழில் புடைசூ ழிளங்காட்டி லுறைவோனே"

(பா. 11)

இச்செய்யுள் தேவராத் திருமுறைகளின் சாயலைப் பெற்றுள்ளதைப் படிக்கும் பொழுதே உணரலாம்.

தோத்திர அமைப்போடு சாத்திரக் கருத்துக்களும் இடையிடையே பெய்து வைக்கப் பெற்றுள்ளன. நூலின் தொடக்கத்தில் பஞ்சாக்கிர தேசிக வணக்கம், திருவாவடுதுறை ஆதின ஆதி குருவாம் குரு நமச்சிவாயர்மீது பாடப்பெற்றுள்ளது. இப்பாடலில் தனக்குக் குருவருள் கிடைத்த திறத்தினை முனிவர் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொண்டிருக்கிறார். குரு நமச்சிவாயர் தன்னுடைய மலங்களை நீக்கி அத்துவித நிலைகாட்டித் தண்ணளி வைத்துத் தனையாண்ட திறத்தை அப்பாடலில் குறிப்பிடுகிறார்.

இந்நூலின் பாடுபொருளில் பாமாலைப் பொருளும், தத்துவப் பொருளும் அமைந்திருப்பதோடு அடியார்களின் பெருமையும், வழிபாட்டின் பெரும்பயனும் அமைக்கப் பெற்று இந்நூல் மிகச் சிறந்த சமயநூலாக விளங்குகிறது எனலாம்.

கலைசை பதிற்றுப் பத்தந்தாதி

திருத்தலத்தின் பெயரில் பாடப் பெற்ற அந்தாதி நூல்களில் இதுவும் ஒன்று. சிவஞான முனிவர் தன்னுடைய நண்பர் சுப்பிரமணிய முனிவரின் திருநகரான தொட்டிக்கலைக்கு எழுந்தருளியபோது அத்திருத்தலத்தின் இறைவன் மீது பாடிய அந்தாதியாகும். இது தொட்டிக் கலைக்குக் கலைசை என்ற ஒரு பெயர் வழங்கியிருக்கிறது. இவ்வந்தாதியில் அமைந்துள்ள பாடல்களின் ஈற்றடிகளால் இது தெரியவருகிறது.

"நமையாளும் திருக்கலைசை நகர்மேவும் பரம்பொருளே"

(பா. 14)

எனவேதான் திருக்கலைசைப் பதிற்றுப் பத்தாந்தி என வழங்கிற்று போலும். ஆனால் சிவஞான முனிவர் இவ்வந்தாதியைத் தொட்டிக்கலைப் பதிற்றுப் பத்தந்தாதி என்றே அழைக்கிறார்.

"பருமாலை நிரைவீதித் திருத்தொட்டிக் கலைப்பதிற்றுப்
பத்தந்தாதித்
திருமாலை யெமையாளுஞ் சிவபெருமான் திருவடியிற்சேர்க்க"

என்பது காப்புச் செய்யுளின் பகுதியாகும். இப்பகுதியில் திருத் தொட்டிக்கலை பதிற்றுப் பத்தந்தாதி என்று சிவஞான முனிவர் குறித்திருப்பதை நாம் உணரலாம்.

பதிற்றுப் பத்தந்தாதி என்பதற்கேற்ப நூறு பாடல்களைப் பெற்று 10 பா வகைகளையும் பெற்றிருக்கிறது. அறுசீர் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கொச்சக் கலிப்பா, எழுசீர் ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை என்ற சந்தங்களால் இந்நூல் அமைந்துள்ளது. மேலும் காப்புச் செய்யுள் ஒன்றையும் இந்நூல் பெற்றுள்ளது. அக்காப்புச் செய்யுள் தொட்டிக் கலையில் எழுந்தருளியிருக்கும் செங்கழுநீர் விநாயகர் மீது பாடப்பெற்றதாகும். இவ்விநாயகர் மீது முனிவர் பிள்ளைத் தமிழ் ஒன்று பாடியிருப்பது இங்கு நினைவு கூரத் தக்கதாகும். மேலும் ஈற்றுப் பாடலின் ஈற்றுச் சீரில் உள்ள (திருத்தியே) திரு என்ற அசை நூலின் முதற்பாடலின் தொடக்கமாக அமைந்திருப்பதால் இவ் அந்தாதி மண்டலித்தே அமைந்துள்ளது எனலாம்.

இத்திருத்தலத்தின் இறைவன் பெயர் சிதம்பரேசர் என்பது பாடல்களில் குறிக்கப்பெற்றுள்ளது.

"அள்ளுவீர் கலைசை வாழ்சிதம்பரேசர் சீர்த்தியை" (பா. 27

என்றும்,

"மடந்தை பாகமாய் கலைசைவாழ் சிதம்பரேசரே" (பா. 21)

என்ற பாடல் பகுதிகள் சிதம்பரேசரின் திருநாமத்தைச் சுட்டுவதை உணரலாம்.

இவ்வந்தாதியின் பாடுபொருள் இறைமைக் கொள்கை யாக அமைந்ததால் சிவபெருமானின் பெருமைகளும், அம்பிகையின் திருவருளும், தொண்டர்தம் பெருமைகளும் சித்தாந்தக் கருத்துக்களும் பாடுபொருளாக அமைந்துள்ளன. இவ்வந்தாதியில் அமைந்துள்ள பாடல்கள் எளிமையும், பொருட்சுவையும் மிக்கு விளங்கித் தேவாரத் திருமுறைகளைப் போலப் பாமாலைகளாக விளங்குகின்றன. இப்பாமாலையைப் படிக்கின்ற பொழுது காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி உள்ளம் உருகும் என்பதில் ஐயமில்லை.

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி

இந்நூல் திருத்தலத்தின் பெயரில் பாடப்பெற்ற

அந்தாதிகளில் ஒன்று. குளத்தூர் என்பது தொட்டிக்கலைக்குப் பக்கத்தில் அமைந்துள்ள தலமாகும். அத்தலத்து இறைவன்மீத பாடப் பெற்ற நூலாகும். இதற்கு குளந்தாபுரி பதிற்றுப்பத்தந் தாதி என்ற பெயரைச் சிவஞான முனிவர் வழங்கியிருக்கிறார் என்பது பாடல்கள் மூலம் தெரியவருகிறது. காப்புச் செய்யுளில் கீழ்க்கண்டவாறு முனிவர் நூலின் பெயரைக் குறிப்பிடுகிறார்.

"பாமாலைக் குறுமணமாம் புகழ்க்குளந்தா புரிப்பதிற்றுப்
பத்தந் தாதித்
தேமாலை யெம்பெருமான் றிவருடியிற் புனையவருள்"

மேலும் நூலின் பாடல்களிலும் குளந்தாபுரி என்றும் குறிப்பிடுகிறார்.

"சாரும் தென்குளந்தாபுரி மேவி காருண் கண்டனை" (பா. 1)

"பொன்னே மணியே குளந்தாபுரிவாழ் மன்னே" (பா. 61)

என்ற பாடற்பகுதியை இங்கு எடுத்துக் காட்டலாம். இவ்வாறு ஒன்றிரண்டு இடங்களில் குளந்தாபுரி என்று குறிப்பிட்டிருக்கிற சிவஞான முனிவர் பாடல்களின் பல இடங்களில் குளத்தூர் என்று தான் குறிப்பிட்டிருக்கிறார். எனவே இத்திருத்தலத்திற்குக் குளந்தாபுரி, குளத்தூர், குளந்தை என்ற பெயர்கள் வழங்கப் பெற்றிருக்கின்றன என்பது தெரியவருகிறது.

பதிற்றுப் பத்தந்தாதி என்பதற்கேற்ப இந்நூலிலும் 100 பாடல்கள் பல பா வகைகளோடு அமைந்திருக்கின்றன. நூறாவது பாடலின் ஈற்றுச்சீர் "சீரே" என்பது. அதுவே நூலின் முதல் பாடலின் தொடக்கமாகச் "சீரும்" என்று தொடங்கி யிருக்கிறது. எனவே இவ்வந்தாதி மண்டலித்து முடிந்திருக் கிறது. நூலின் தொடக்கத்தில் விநாயகருக்குக் காப்புப் பாடல் அமைந்திருக்கிறது. இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் பெயர் சோமநாதர் என்பதாகும். இதனைப் பாடல்களில் ஆங்காங்கு சுட்டிச் சொல்கிறார் முனிவர்.

"தொல் குளத்தூ ருறை சோமநாதன்" (பா. 9)

"நம் சோமநாதனுக்கு என" (பா. 87)

என்று குறிப்பிடுவதை இங்கு அகச் சான்றாகக் காட்டலாம். இந்நூலில் திரிபு அந்தாதியாக ஒருசில பாடல்கள் அமைந்துள்ளன.

"திருக்கு ளந்தை வருஞ்செய லார்கடைத்
திருக்கு ளந்தை யலையிடஞ் சேர்த்தக
திருக்கு ளந்தை விழியவன் சேர்விடந்
திருக்கு ளந்தை தெரிசித்த யாங்களே" (பா. 10)

என்ற பாடலை எடுத்துக் காட்டலாம். அதுபோல 9, 55-ஆம் பாடல்களும் திரிபு அந்தாதிப் பாடல்களாகும். முனிவரின் பிற அந்தாதிகளைப் போல இவ்வந்தாதி நூலும் பாடுபொருளாக தத்துவக் கருத்துக்களையும், அடியார் பெருமைகளையும் பெற்று விளங்கிச் சிறந்த பாமாலையாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடதிருமுல்லை வாயில் அந்தாதி

இவ் அந்தாதி திரிபு அந்தாதியாக விளங்குகிறது. இதுவும் திருத்தலத்தின் பேரில் பாடப்பெற்ற அந்தாதிகளில் ஒன்றாகும். திருமுல்லை வாயில் என்பது தொண்டை நாட்டுத் திருத்தலங் களில் ஒன்றாகும். அந்தாதிக்கு ஏற்ப 100 பாடல்களைப் பெற்று விளங்குகிறது. நூலின் தொடக்கத்தில் காப்புச் செய்யுள் ஒன்று அமைந்துள்ளது. இந்நூலுக்கு முல்லை அந்தாதி என்றே முனிவர் பெயர் சூட்டியிருக்கிறார். "முல்லை விநாயகன் முல்லை அந்தாதிக்கு முன் நிற்குமே" என்பது காப்புச் செய்யுளின் ஈற்றடியாகும். இவ் அடி முல்லை அந்தாதி என்ற பெயருக்கு அகச் சான்றாக விளங்குகிறது. இவ்வந்தாதியில் அமைந்துள்ள பாக்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைகளாக அமைந்துள்ளன.

இவ் அந்தாதியில் 75 செய்யுட்கள் திரிபு அந்தாதியாக அமைய, 25 செய்யுட்கள் யமக அந்தாதியாக அமைந்துள்ளன. 1, 10, 22, 23, 26, 32, 34, 43, 44, 46, 53, 61, 65, 70, 71, 79, 80, 85, 87, 90, 93, 97, 98 ஆகிய எண்கள் கொண்ட செய்யுள்கள் யமகச் செய்யுள்களாகும். எனவே இவ் அந்தாதி சிவஞான முனிவரின் இலக்கியத் திறனுக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

திருமுல்லை வாயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் மாசிலாமணி என்பதாகும். "மாசிலாமணி வள்ளல் வெற்பா உனைத்தேடி" (பா. 21) என்று முனிவர் குறிப்பிட் டிருப்பதை இங்கு எடுத்துக் காட்டலாம். இம்மாசிலாமணி என்ற பெயர் திருவாவடுதுறை திருத்தலத்தின் இறைவன்

பெயருமாகும். எனவே இவ்விரு திருத்தலங்களையும் ஒன்று சேர்த்து முனிவர் ஒரு செய்யுளில் பாடியுள்ளார். இதோ அப்பாடல்,

"திப்பிய மாவடு தண்டுறைக் கண்ணுந் திருந்துநிலை
தப்பிய மாவடுத் தீர்முல்லை யூரினுஞ் சந்தமுலை
யப்பிய மாவடு வார்கண்ணி பாக னமர்ந்துபுகழ்
பப்பிய மாவடு நாமமொன் றாக்கொண்டு பாரிப்பதே" (பா. 64)

என்பதாகும்.

இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் ஒன்று பாடப்பெற்றுள்ளது. பாடலைப் பாடியவர் யார் என்று தெரியவில்லை. அப்பாடலில் சிவஞான முனிவரின் பல எழுத்துப் பணிகள் பாராட்டிப் போற்றப் பெற்றுள்ளன. அப்பாடல் வருமாறு:

"பொருட்டுறை மலிந்த முல்லையந் தாதி
புலவர்கட் கமிழ்தெனப் பொழிந்த
தருட்டுறை யடியர் நிதியமாய்ப் போந்த
வண்ணன்மெய் கண்டமா தேவன்
மருட்டுறை யொழிப்பான் வார்த்திகப் பொழிப்பான்
வகுசிவ ஞானபோ தத்தின்
றெருட்டுறை பிறங்கப் பாடிய முறையிற்
செய்சிவ ஞானவான் முகிலே"

இந்நூலின் பாடுபொருள் சமயம் சார்ந்தது. ஆதலால் தத்துவக் கருத்துகளும் இறையடியார்கள் பண்பும் மிகச் செம்மாந்த நிலையில் இடம் பெற்றுள்ளன.

முடிவுரை

இத்தகு நிலையில் சிவஞான முனிவரின் இலக்கியப்பணி சிறப்பிடம் பெறுகின்ற அந்தாதி இலக்கியங்களின் அறிமுகம் - பெயர் பற்றிய செய்திகள் நூலில் உள்ள செய்யுட்களின் எண்ணிக்கை - செய்யுள்களின் சந்தங்கள் - அந்தாதி பாடப் பெற்ற இறைவனின் பெயர் பற்றிய செய்திகள் நூலில் இடம் பெற்றுள்ள காப்பு, சிறப்புப் பாயிரம் பற்றிய செய்திகள், நூல்களில் அமைந்துள்ள பாடுபொருள் பற்றிய செய்திகள் ஆகியவைகள் எடுத்துக் காட்டப் பெற்றன. இனிவரும் கட்டுரையில் ஐந்து அந்தாதியிலும் காணப்பெறும் இலக்கியக் கொள்கைகள் ஆய்ந்து கூறப்பெறுகின்றன.

○

4

அந்தாதி இலக்கியக் கொள்கை

தொல்காப்பிய உரையாசிரியர்களின் கூற்றுப்படி விருந்து என்ற யாப்பின் மேற்றதாகிய அந்தாதி இலக்கியங்கள் காலந்தோறும் வளர்ச்சியுற்று எண்ணிறந்தனவாகப் பல்கிப் பெருகியுள்ளன. தொடையமைப்பில் தோன்றிய அந்தாதி தனி ஒரு இலக்கியமாக வளர்ச்சியுற்றிருக்கிறது. இத்தகைய வளர்ச்சியினை அவ் இலக்கியம் பெற்றாலும் அதனுடைய கொள்கைகளில் எவ்வித மாற்றமும் பெறவில்லை. தொடக்க நிலையில் அமைந்த இறைமைக் கொள்கையே வளர்ந்த நிலையிலும் கொள்கையாக அமைந்து விளங்குகிறது. ஆம். வடிவமைப்பால் மாறுபட்டாலும் அந்தாதி இலக்கியம் பாடுபொருளில் மாறுபடவில்லை. காரைக்கால் அம்மையார் எக்கொள்கையை வெளிப்படுத்த அந்தாதி இலக்கியத்தைக் கருவியாகக் கொண்டாரோ அதே கொள்கை அடிப்படையில் தான் இங்கு எடுத்துக் கொள்ளப் பெற்றிருக்கிற சிவஞான முனிவரும் கொண்டிருக்கிறார்.

சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்கள் பதிற்றுப் பத்தந்தாதியாகவும், திரிபு அந்தாதியாகவும், யமக அந்தாதியாகவும் விளங்கிச் சைவ சமயத்தின் வழிபடு தெய்வமாம் கறைக் கண்டனின் பெருமையைத் கவினுற எடுத்துக்காட்டுகின்றன. ஐந்து இலக்கியங்களும் சேர்ந்து மொத்தம் ஐநூறு பாடல்களைக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு பாடலும் பரமனையே போற்றுகின்றன. அப்பாடல்கள் தருகின்ற இலக்கியக் கொள்கைகளை இனி முறையாகக் காண்போம்.

அந்தாதி - பா - அமைப்பு

முதல் கட்டுரையில் குறிப்பிட்டாங்கு ஒரு செய்யுளின் ஈற்றில் அமைந்த சீரோ, அச்சீரில் அசையோ, ஒரு எழுத்தோ அடுத்த பாடலின் முதல் சீராகவோ, அசையாகவோ, எழுத்தாகவோ அமைய - இந்த முறையில் 100 பாடல்கள் பாடவேண்டும் என்ற இலக்கணத்திற்கேற்பச் சிவஞான முனிவரின் ஐந்து அந்தாதி இலக்கியங்களும் அமைந்துள்ளன.

"னென் பங்கம் பங்கம் பியாவண்ண மேத்துவ மேழை நெஞ்சே"

என்பது திருவேகம்ப அந்தாதியின் இரண்டாவது பாடலின் ஈற்றடியாகும். இவ் ஈற்றடியின் இறுதியில் அமைந்த 'சே' என்ற எழுத்தை மூன்றாவது பாடலின் தொடக்கமாகக் கொண்டு, அப்பாடலின் முதலடி

"சேகரந்தோய முடித்தோ யிருள்சிந்தை பார்க்கபரி"

என்று அமைந்துள்ளது.

குளத்தூர் அந்தாதியிலும், "தண்டா துறையும் பெருங் கருணைத் தகைசேர் ஞானப் பெருவாழ்வே"

என்பது 17ஆம் பாடலின் ஈற்றடியாகும். ஈற்றடியில் உள்ள இறுதி எழுத்து 'வே' அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்து,

"வேலை யலைபோற் பிறந்திறந்து மெலியா வண்ணஞ் சிவஞான" என்ற முதலடி அமைந்துள்ளது. இதுபோலப் பிற அந்தாதிகளிலும் எழுத்தமைப்பு அந்தாதி காணப் பெறுகிறது.

"கத்தனுள னென்பாரை யாங்காணக் கடவோமே"

என்பது இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் 15ஆம் பாடலின் ஈற்றடியாகும். இதில் உள்ள ஈற்றுச்சீர் கடவோமே என்பது. அதில் ஓர் அசை கட என்பது. அக் கட என்ற அசையை முதலாகக் கொண்டு அடுதத பாடலின் முதல் அடி,

"கடக்களிற்றி னுரி போர்த்த விளங்காட்டுக் கண்ணுதலோர்க்"

என்று அமைந்துள்ளது.

"கனவிற் கழியாய் கலைசைக் கிறையே" என்பது கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியின் 6ஆம் பாடலின் இறுதிச் சீராகும். அதில் ஓர் அசை இறை என்பது. அவ் இறை என்ற அசையை முதலாகக் கொண்டு அடுத்த பாடலின் முதல் அடி.

"இறையுந் தரியே னினியிவ் வுடலப்"

என அமைந்துள்ளது.

சீர்நிலை அந்தாதியும் ஐந்து அந்தாதி நூல்களில் காணப் பெறுகிறது. கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில்,

"தாவ சிவனே சரணஞ் சரணம்"

என்பது 9ஆம் பாடலின் ஈற்றடியாகும். இவ் ஈற்றடியின் இறுதிச் சீர் சரணம் என்பதாகும். இச்சரணம் என்ற சீரை முதலாகக் கொண்டு பத்தாவது பாடல்,

"சரணம் புகும்வா னவர்தாங் களெலா"

என்று அமைந்துள்ளது.

அது போலக் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில்

"னறப்பெருஞ் செல்வியோ டமர்ந்த வீசனே"

என்ற 81ஆம் பாடலின் ஈற்றடியின் ஈற்றுச் சொல் ஈசன் என்பதாகும். இந்த ஈசன் என்ற சீரை முதலாகக் கொண்டு அடுத்த பாடல்,

"ஈசனே குளந்தை வாழிறைவ னேகொடும்"

என்று அமைந்துள்ளது. இவ்வாறு அந்தாதி அமைப்பு ஐந்து அந்தாதிகளிலும் அமைந்து சிவஞான முனிவரின் தனித் தன்மையை விளக்குகின்றது.

பாட்டுடைத் தலைவன்

ஐந்து அந்தாதி இலக்கியங்களிலும் பாட்டுடைத் தலைவன் சிவபெருமானே ஆவார். சிவஞான முனிவர் தம் யாத்திரையில் தங்கிச் சென்ற இடங்களில் உள்ள திருக்கோயில்களில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் மீது இவ்வந்தாதிகளைப் பாடியமையால் எல்லா அந்தாதிகளிலும் சிவபெருமானே பாட்டுடைத் தலைவராக அமைகின்றார். காஞ்சீரபுரத்து ஏகம்பநாதரும், குளத்தூரின் சோமநாதரும், திருமுல்லை வாயிலின் மாசிலாமணித் தேவரும், கலைசைச் சிதம்பரேசரும், இளசை அகத்தீஸ்வரரும் ஆகியோர் பாட்டுடைத் தலைமக்களாக அமைகின்றனர்.

தென்னாடுடைய சிவனே பாட்டுடைத் தலைவனாக இருக்கின்ற காரணத்தால் சிவபெருமானின் பெருமைகளும்,

திருவிளையாடல்களும், அவர் அடியார்க்கு அருள்புரியும் திறமும், அந்தாதி இலக்கியங்கள் ஐந்திலும் போற்றிப் புகழப் பெற்றுள்ளன. ஒரு நாமம் இல்லோர்க்கு ஆயிரம் திருநாமங்கள் பாடித் தெள்ளேணம் கொட்டுகின்ற மரபு சைவ அடியார்களின் மரபு ஆதலால் சிவஞான முனிவரும் இறைவனின் திருப்பெயர்கள் பலவற்றைத் தன்னுடைய நூல்களில் குறிப்பிட்டுச் செல்கிறார்.

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் ஈசன் (5), புராணன் (7), மாதுபாகன் (11) பரம்பொருள் (15), சிவபெருமான் (16), சிவம் (21) (45), தேவன் பிரான் (60) என்பன போன்ற யெர்கள் சிவஞான முனிவரால் எடுத்தாளப் பெற்றுள்ளன.

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் இளங்காடன் (10), எம்மான் (14), கண்ணுதலோன் (16), பெருங்கருணைத்தேன் (25), கறைக்கண்டன் (41) கோமான் (54) நாதன் (67) என்பன போன்ற பெயர்கள் சிவஞான முனிவரால் எடுத்தாளப் பெற்றுள்ளன.

கலைசைப் பதிற்றப் பத்தந்தாதியில் இறைவன் (7), பரம் பொருள் (15), சிவானந்தப்பழங்கடல் (17), கடவுள் (35) நாவலர்கோன் (43), சிவபிரான் (57) பசுபதி (77) என்றும் கூறப் பெற்றுள்ளன.

திருவேகம்பர் அந்தாதியில் கம்பன் (5), சடையன் (8), தென்னவன் (15), ஞானவரோதயன் (47), அம்பலவன் (56) என்று போற்றப் பெற்றுள்ளது.

திருமுல்லைவாயில் அந்தாதியில் முல்லைப்பிரான் (6), கண்டருமாபதியார் (13), வள்ளல் (17) பிறைக்கண்ணியன் (86) என்பன போன்ற பெயர்கள் சிவஞான முனிவரால் பாடல்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

வடிவம்

பாட்டுடைத் தலைவனாம் முக்கட் பெருமானின் வடிவத்தின் அழகுதனை முனிவர் பெருமான் தன் மனத்தகத்தே கண்டு களித்ததை இலக்கியம் தோறும் எடுத்தியம்புகிறார்.

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் இறைவனின் திருவுருவை மனக்கண்ணால் படம்பிடித்து வண்ணச்

சித்திரமாகக் காட்டி நம்மைப் போற்ற வைக்கிறார். இதோ அவரின் சித்திரக் கைவண்ணம்:

“கடியா ரிதழிச் சடைமுடியுங்
கண்கண் மூன்றுங் குறுநகையும்
வடியார் சூலத் தனிப்படையும்
வரைநேர் புயங்க ளொருநான்கும்
பொடியார் நுதலுந் திருமுகத்தின்
பொலிவுங் காட்டி யுளம்புகுந்தா
ணடியார் வழுத்தத் திருக்குளத்தூ
ரமருங் கருணைப் பெருமானே” (பா. 12)

இத்தகைய வடிவத்தினை உடைய இறைவன் குரு வடிவாகவும் காட்சி தருவான் என்பதை இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார். குருவடிவாகி வந்து தன்னை ஆட்கொள்ளும் பொழுது கைகளில் மலங்களை அகற்றும் ஆயுதங்களைக் கொண்டிருந்தான் என்றும் குறிப்பிடுகிறார். இதோ அப்பாடல்:

“தேற லேனைத் தெருட்டிச் சிவமனுக்
கூறி யாளக் குருவுருக் கொண்டவ
னாறு பூம்பொழி னல்லிளங் காட்டுறை
பாறு நச்சும் படைமழு வாளானே” (பா. 5)

மானிட வடிவத்தில் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் கண்ட இறைவனைத் திருக்கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் இயற்கையின் வடிவாகக் கண்டு மகிழுகின்றார் சிவஞான முனிவர். அவ் இயற்கையின் வடிவத்தை அட்ட மூர்த்தம் என்பர். மண்ணாக, நீராக, விசும்பாக, கனலாக, காற்றாக, சூரிய னாக, சந்திரனாக, ஆவியாக, அம்மூர்த்தங்கள் விளங்குகின்றன என்பதையும் குறிப்பிட்டு அவ் அட்ட மூர்த்தங்கள்,

“அண்ணா உனக்கு வடிவாகும் எண்ணின்
அவைதோ றுயிர்க்கு உயிரதாம்
கண்ணான தெய்வம் எவர் வேறுளார்கள்
கலைசைப் பதிக்கு இறைவனே” (பா. 69)

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய மூர்த்தம் தான் திருக் கோயில்களில் மாதொரு பாகனாக விளங்குகிறது என்பதையும் அதே அந்தாதியில் குறிப்பிடுகிறார்.

"அருண்மடை திறந்த நோக்கமும் வரதா
பயங்களு மம்புயக் கரமுந்
திருமுகப் பொலிவுங் குறுநகை யழகுஞ்
செஞ்சுடர் மகுடமு மரையின்
மருவுதோ லுடையுஞ் சேவடித் துணையு
மகிழ்சிவ காமிநா யகிசேர்
உருவுமாய்க் கலைசைச் சிதம்பரே சுரரென்
னுள்ளகங் கோயில்கொண் டனரே" (பா. 79)

இவ்வாறு சிவஞான முனிவர் சிவபெருமானின் வடிவங்களாக, ஞான வடிவத்தையும், குருவடிவத்தையும் அட்டமூர்த்தத்தையும், மாதொரு பாகத்தினையும் சுட்டிக் காட்டி இறைவனின் வடிவத்தை நம் மனத்தகத்தே நிறுத்தி விடுகிறார்.

திருவருள் திறன்

அந்தாதியில் பாட்டுடைத் தலைவராக விளங்கும் சிவபெருமானின் திருவருள் பாடல்கள் தோறும் பேசப்படுகிறது. திருவருள் திறனில் சிவஞான முனிவரின் கொள்கைகளை நாம் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். புராணங்களில் இடம் பெற்றுள்ள திருவிளையாடல்கள் முதல் நிலையாகும். இரண்டாம் நிலை சிவனடியார்களுக்கு வழங்கிய அருள்நிலையாகும். மூன்றவாது சிவஞான முனிவர்க்குக் கிடைத்த அருள் நிலையாகும். இம்மூன்று அருள் நிலைகள், பாடல்களில் திருவருள் நிலையாக இடம் பெற்றுள்ளன.

புராணச் செய்திகளாக இடம் பெற்ற திருவருள் நிலை இறைவனுடைய திருவிளையாடல்களாகும். பிரமனின் முடைத் தலையைக் கிள்ளியதும், புரம் மூன்றையும், காமனையும் நுதல் விழியால் நீறாக்கியதையும், (17) தாருகாவனத்து முனிவர்கள் விடுத்த யானையின் தோலை உரித்தமையையும் (21), திருப்பாற் கடலைக் கடைந்து அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்து இறைவன் நஞ்சுண்டதையும் (27) இவை போன்ற செய்திகள் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடப் பெறுகின்றன.

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் இறைவன் பாற்கடல் கடைந்த பொழுது ஏற்பட்ட நஞ்சினையுண்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடும் பொழுது (15), கீழ்க்கண்ட பாடலாகச் சுவை படத் தருகிறார் முனிவர்.

"வித்தகமாய் நடுக்கடலில் விடமெழலு நடுநடுங்கி
நத்தனயன் முதலானோ ரோட்டெடுப்ப நலிவகற்றி
மத்தமிடற் றிளங்காட்டு வான்பெருளை யன்றியுமோர்
கத்தனுள னென்பாரை யாங்காணக் கடவோமே" (பா. 15)

இப்பாடலில் அயன் முதலானோர் ஓட்டெடுப்ப என்பது ஓட்டம் எடுப்ப என்றும், அமுதத்திற்குக் கை ஏந்துவதையும் நயமாகக் குறிக்கிறது.

கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் தனி ஒரு பாடலில் திருமாலிடம் சிவபெருமான் எத்தகைய திருவிளையாடல் களால் எத்தகைய தொடர்பு கொண்டார் என்பதை மிக நயமாக விளக்குகிறார்.

"மாய னைன்கணை யாக வேவினை
மாய னைவிடை யாக வூர்ந்தனை
மாய னைத்திரு மனைவி யாக்கிமுன்
மணந்து சாத்தனைத் தந்த ளித்தனை
மாய னக்கொரு பாக மீந்தனை
மாய னுள்ளமே கோயில் கொண்டனை
மாய னேத்திர மலர்ந்த தாளினாய்
வரத போற்றிதென் கலைசை யீசனே" (பா. 99)

இப்பாடலில் திரிபுரம் எரிக்க மாயன் கணையாகிய தையும், பின்னொருகால் மாயன் தனக்கு ஊர்தியாக அமைந்ததையும், பின்னொருமுறை மாயனை மனைவியாக்கிச் சாத்தனை தோற்றவித்ததையும் இவைபோன்ற செய்திகளைக் குறிப்பிடும் பொழுது மாயனாம் திருமாலுக்கு மேலவனாய்ச் சிவபெருமான் விளங்குவதைச் சிவஞான முனிவர் ஓவியமாகக் காட்டிமகிழ்கிறார்.

இவ்வாறு வருகின்ற புராணச் செய்திகளாம் இறைவனு டைய திருவிளையாடல்கள் எல்லாம் இறைவனுக்குப் புகழினைத் தருகின்றனவே தவிர இறைவனுக்குக் குறைவைத் தரவில்லை என்பதுதான் சிவஞான முனிவரின் முடிந்த முடிபு. இதனைக் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியின் ஒருபாடலில் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார்.

"சிரித்தெ ரித்தனை புரங்களை விழியைத்
திறந்தெ ரித்தனை மாரனை யுகிரா

லுரித்து டுத்தனை யுழுவையைச் சரணா
லுதைத்து ருட்டினை காலனை விரலா
னெரித்த ழித்தனை யரக்கனை யென்பார்
நின்ற யாவையு நீங்குநா ளொருங்கே
பொரித்தெ ரித்திட வல்லதென் கலைசைப்
புண்ணிய யாவுனக் கிவையுமோர் புகழோ" (பா. 40)

அடியார் பெருமை

இத்தகைய புராணச் செய்திகளோடு அடியார்களுக்கு இறைவன் திருவருள் புரிந்த நிலையையும் சிவஞான முனிவர் ஆங்காங்கு தெரிவித்துக் கொண்டு செல்கிறார். ஓடும் செம் பொன்னும் ஒக்கவே நோக்குகின்ற அடியார்களாம் சிவனடியார்கள் பொருட்டுச் சிவபெருமான் பூவுலகிற்கு எழுந்தருளி திருவருள் புரிந்த நிலையைப் பெரிய புராணம் போன்ற புராணங்கள் சுட்டிக் காட்டுகின்றன. புராணங்களை முனிவர் நன்கு உணர்ந்தவர் ஆதலால் அவ்வடியார்களின் வரலாறுகளையும் இறைவனின் திருவருளாகத் தம் பாடல்களில் காட்டியுள்ளார்.

சிறுத்தொண்டர், திருஞானசம்பந்தர், செருத்துணை நாயனார், எறிபத்த நாயனார், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்க வாசகர், கண்ணப்பர் போன்ற அடியார்களுக்கு அருளிய திறத்தையெல்லாம் தனிப்பாடல்களில் குறிப்பிடு கின்றார்.

செருத்துணை நாயனாரையும், எறிபத்த நாயனாரையும் ஒருசேரத்திருவேகம்பர் அந்தாதியில் ஒருபாடலில் குறிப்பிடு கிறார். பூவின் பொருட்டு மனைவியின் மூக்கை அரிந்தவர் செருத்துணை நாயனார். பூக்கூடையைச் சிதறியதால் சோழ அரசனின் பட்டத்து யானையை வாளால் வெட்டியவர் எறிபத்தர் என்று பூவின் பொருட்டு இவ்வடியார்கள் செய்த செயல்களை நல்லறமாகக் கொண்டு திருவருள் புரிந்த இறைவனின் பெருமை பாடலில் பேசப்பெறுகிறது.

"அகத்திய னாரதன் பூவிற்கு நாசி யரிந்திடுசெய்
யகத்திய னாரத வந்தியென் னாறுதறுத் தன்முதலோ
ரகத்திய னாரத னாற்றொழுங் கம்ப ரறிவிற்செம்போ
தகத்திய னாரத மர்க்கொனித் தேமன்றி லாடுவரே" (பா. 55)

இவ்வாறு கொடுஞ்செயல்கள் புரிந்த அடியார்க்கு அருளுகின்ற இறைவன் அடியார் ஒருவருக்கு பணியாளனாகி ஒரு செயலைச் செய்தான். அச்செயல்தான் சுந்தரருக்காகப் பரவையாரிடம் தூது சென்றதாகும். அதனைச் சிவஞான முனிவர் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் தேவர்கள் மூவர் வணங்கி ஏவல் செய்கின்ற பெருமை பெற்ற இறைவன் நல்லூரின் கண் நாவலூரரார் ஏவிடப் பணியை மேற்கொண்டானே என்று குறிப்பிடுகின்ற இடம் முனிவரின் கவித்திறனைக் காட்டுகின்ற இடமாகும். (பா. 43)

அடியவருக்காகத் தான் தூது சென்றது மட்டுமல்லாமல் அடியவருக்காகத் தான் பிரம்படியும் பட்டவர் சிவபெருமான். அவ்வாறு மணிவாசகருக்காகப் பிரம்படி பட்டதையும் முனிவர் பெருமான் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் "உயர்கூடலில் மண்கள் சுமந்தே அடிபட்டனன் என்னே?" (பா. 41) என வினவிக் கொள்கிறார்.

இத்தகைய திருவருள் நிலையோடு தனக்கருளிய திருவருள் நிலையையும் அந்தாதிகளில் முனிவர் பெருமான் குறிப்பிட்டுச் சொல்கிறார். தனக்கருளிய திருவருள் நிலையைக் கூறும் பொழுது முனிவர் தன்நிலை விளக்கமாகத் தன் உணர்ச்சிப் பாடல்களை அமைத்துள்ளார்.

'போற்றிலேன் பூதி மெய்யிற் புனைந்திலே னெழுத்தோரைந்துஞ்
சாற்றிலே னக்க மாலை தரிக்கிலே னடியா ரேவ
லாற்றிலேன் கலைசை வாழு மண்ணலே தறுகண் வெள்ளை
யேற்றனே யெளியே னந்தோ வெங்ஙன முய்யுமாறே"

(கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி - பா. 53)

"வாழ்த்துகிலேன் றிருப்புகழை மணங்கொள்ளேன் றிருவடியைத்
தாழ்த்துகிலேன் சென்னியினைத் தமியேனைக் கருக்குழியில்
வீழ்த்துவையோ பேரறிவை விளக்குவையோ வறியகிலே
னூழ்ததமலர்ப் பொழில்புடை ழிளங்காட்டி லுறைவோனே"

(இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி - பா. 11)

"பதிகடொறுஞ் சென்றேத்திப் பரகதிக்கு வழிதேடேன்
மதியுடைய நின்னடியார் வழித்தொண்டின் முறைநில்லேன்
றுதிபெருகுந் தென்குளத்தூர்ச் சுடர்க்கொழுந்தே யடியேனை
யதிகமாந் தொழும்பேற்றி யாட்கொள்வ தெவ்வாறே"

(குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி - பா. 74)

என்ற மூன்று பாடல்கள் அவரின் தன்நிலை விளக்கத்தைத் தருகின்ற பாடல்களாகும். இப்பாடல்கள் தேவாரத்தின் அடியொற்றியது என்பதைப் பாடல்களைப் படிக்கும் பொழுது தெரிந்து கொள்ளலாம். இப்படிப்பட்ட தனக்கு இறைவன் வந்து அருள்புரிந்தான் என்பதைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். தன்னுடைய அறியாமையைப் போக்கி இறைவன் தனக்கு அருளிய திறம் எத்தகையது என்பதை இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறார்.

"எரித்தா னெனது வல்வினையி னிருள்சேர்
    பிறவிப் பெருங்காட்டைத்
தெரித்தான் மூன்று பொருளுண்மை தெரித்துப்
    பாச மிரண்டினையு
மிரித்தா னென்னைத் தன்னுள்ளே யிருத்தி
    யென்பாற் சுகவடிவாய்த்
தரித்தா னிளசைப் பதிவாழுந் தக்கோ
    னெவர்க்கு மிக்கோனே" (பா. 24)

இவ்வாறு அவன் அருள் புரிந்த காரணத்தால் தன்னுடைய பாவநிலை மாறிற்று. அதனால் சைவ சித்தாந்த நன்பொருள் அறிந்தேன் என்றும் சிவஞானமுனிவர் குறிப்பிட்டு இறைவ னோடு நான் அத்துவிதமானேன் என்றும் குறிப்பிடுகிறார். அத்தகைய அரும்பாடல் இதோ:

"மாறினேன் சமயபேத வழிப்படு புன்மை யெல்லாந்
தேறினேன் வீடுசேர்க்குஞ் சைவசித் தாந்தமென்றே
யேறினேன் சிவலோ கத்தே யிரண்டறக் கலந்தொன் றாகி
யாறினேன் வருத்த மெல்லாங் கலைசைக்கோ வருளி னாலே"

(கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 56)

அடுத்து யாரும் அறியாதிருந்த தன்னை இறைவன் தடுத்தாட் கொண்டான் என்பதை ஆங்காங்கு சுட்டிச் செல்வதைக் காண முடிகிறது. "யாதும் அறிவு ஒன்றில்லாத என்னையும் தடுத்து ஆட்கொண்டான்" (11) என்று குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுவதை இங்கு எடுத்துக் காட்டலாம். இவ்வாறு இறைவன் திருவருள் நிலையைப் பாட்டுடைத் தலைவனின் பெருமையாகக் குறிப்பிடுகிறார் எனலாம்.

அடியார்தம் பெருமை

அந்தாதி இலக்கியங்களின் பாடுபொருள் சமயம் சார்ந்ததாக இருப்பதால் பாட்டுடைத் தலைவனாகிய சிவபெருமானின் பெருமைகளோடு அவர்தம் அடியவராகிய திருத் தொண்டர்களின் பெருமைகளையும் ஆங்காங்கு சுட்டிச் செல்கிறார். அடியார்களின் இலக்கணத்தைப் பெரியபுராணம் குறிப்பிடுவதுபோலச் சிவஞான முனிவரும் தன்னுடைய நூல்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். அடியார்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார். "அழுது அழுது அலறி ஏங்கி அகம் குழைந்து உருகி நெக்குத் தொழுது எழும் அடியார்" (57) என்பது அவர் குறிப்பிடும் வாக்காகும்.

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் அடியார்களைப் பற்றிச் சொல்லும் பொழுது வாய்மை, ஒழுக்கம், தவம், சீலம், வணக்கம், பொதுமை, அறிவு, தூய்மை தவறா மெய்யடியார், என்று குறிப்பிடுவர். இத்தகைய இலக்கணங்களைச் சிவஞான முனிவர் குறிப்பிடும் பொழுது அவருடைய வாழ்வியலில் மெய்மை அடியார்களையும், பொய்மை அடியார்களையும் உணர்ந்ததின் பயன்தான் இத்தகைய எண்ணங்கள் எழுவதற்குக் காரணமாக இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இத்தகைய மெய்யடியார்களின் கூட்டத்தில் தன்னையும் ஒருவராக ஆக்கவேண்டும் என்று சிவஞான முனிவர் வேண்டுவது பல பாடல்களில் தெரிகிறது. அத்துடன் அமைவது பழைய அடியார்களைப் போலத் தானும் கவிபாட வேண்டும் என்று குறிப்பிடுகிறார். திருவேகம்பர் அந்தாதியில் பெண்களை வருணித்துப் பாடாது உன்னை முத்தமிழ் செய்யுள்களால் பாடப் பணியாய் அருள்வாய் என்ற ஒரு பாடல் முனிவரின் கவிபாட விழைந்த திறத்தைக் கட்டியம் கூறுகிறது.

> "...............மகளிர் கடிதடநா
> கம்பாகம் பாமொழி கண்ணென்னாதுன் கழலைமுறுக்
> கம்பாகம் பாக முறுந்தமிழ் பாடுங் கடன்பணியே" (பா. 93)

இதுபோலத் திருமுல்லைவாயில் அந்தாதியில்,

"சேவடி வானர மேவுங் கயிலைச் சிலம்பின் அரச
சேவடி வானறுந் தீந்தமிழ் பாடவும் செய்தருள" (பா. 23)

என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு இறைவனைப் பற்றிப் பாடுதற்கு ஒவ்வொருவர் மனமும் விழைய வேண்டுமே தவிர வெற்று மானிடர் வாழ்வைப் பாடிடல் கூடாது என்பதைக் கலைசைப் பதிற்றுப்பத்தாந்தியில் கீழ்க்கண்ட பாடலில் குறிப்பிடுகிறார்.

"வள்ள லென்று பாரி யென்று மாரி யென்று வீணிலே
யெள்ள ளவு மீகி லாரை யேத்தி யாயுளைத்
தள்ளு வீர்க லைசை வாழ்சி தம்ப ரேசர் சீர்த்தியைத்
தெள்ளி யோது கிற்கி லீர்க ணன்று நுங்கள் செய்கையே"
(பா. 27)

இப்பாடலில் வாரி வழங்காதவரை வள்ளல் என்று பாடுகின்ற புலவர்களை நகையாடி இறைவனைப் பாடாது வீணாகக் காலம் கழிக்கின்றார்களே என ஏங்கித் தவிக்கிறார் சிவஞான முனிவர். எனவே தான் முனிவரும் தான் பாடிய சிற்றிலக்கியங்கள் அனைத்திற்கும் இறைவனையே பாட்டுடைத் தலைவனாக்கினார் அன்றி மானிடரைப் பாட்டுடைத் தலைவனாக்கவில்லை.

அகத்துறைப் பாடல்கள்

அந்தாதி இலக்கியங்களின் மரபுக்கேற்பப் பாடு பொருளில் அகப்பொருட் செய்திகளையும் இணைத்துள்ளார். தன்னைப் பெண்மையாக்கி இறைவனைக் காதலனாக்கி நாயகன் நாயகி பாவத்தில் அப்பாடல்களை அமைத்துள்ளார். திருவேகம்பர் அந்தாதியிலும், திருமுல்லைவாயில் அந்தாதியிலும் அகப் பொருள் துறைச்செய்திகள் அடங்கியுள்ளன. மற்ற பதிற்றுப் பத்தாந்திகளில் இத்தகைய செய்திகள் இல்லை என்றே குறிப்பிட்டுவிடலாம்.

திருவேகம்பர் அந்தாதியில் இடம்பெற்றுள்ள அகப்பொருள் துறைகள்

போர்வயிற் சென்ற தலைவன் நீடத் தலைவி வருந்தல் 1, நற்றாயிரங்கல் 31, 32, 83, 88, கார்காலக் குறிகண்ட தலைவி கவன்றுரைத்தது 37, புதல்வனொடு புலத்தல் 38, தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல் 44, தலைவன் நீடத் தலைவி

வருந்தல் 50, 63, 69, 79, பாங்கி தலைவி குறிப்பறிதல். 52, அலர் அறிவுறுத்தல் 56, தலைவி இயலிடம் பாங்கற்குரைத்தல் 58, கல்வி மேற்பிரிவு நீயே கூறு என்றல் 62 திருவேகம்பநாதர் பவனி வருதலைத் தரிசித்து மால்கொண்டு நிறையழிந்து மாது சொல்லியது 65, மாலை விருப்புரைத்தல் 68, 91, பரத்தையிற் பிரிந்த தலைவன் நீடத் தலைவி வருந்தல். 70; இரவுரைத்தல் 73, தழைநயப்பு உரைத்தல் 74, மாலையம் பொழுது கண்டு இரங்கல் 78, விதியொடு வெறுத்தல் 86.

திருமுல்லைவாயில் அந்தாதியில் இடம்பெற்றுள்ள அகப்பொருள் துறைகள்

நற்றாய் இரங்கல் 25, அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல் 26, இரவுக்குறி நேரும் பாங்கி தலைவிக்குப் பருவரல் உரைத்தல் 27; மாலை விருப்பு உரைத்தல 28, தலைவன் நீடத் தலைவி வருந்துதல் 30, பவனி கண்ட பெண் மயக்கம் 32; தலைவி நெஞ்சொடு புலத்தல் 33, பாங்கி தலைவி குறிப்பறிதல் 36; கலவியில்மகிழ்தல் 41; புனல்தரு புணர்ச்சி அறத்தொடு நிற்றல் 48; நற்றாய் இரங்கல் 51; பாங்கன் கழறல். 68;

இத்தகைய இரண்டு அந்தாதிகளிலும் அகப்பொருள்கள் துறைகள் அமைந்த பாடல்கள் இடம்பெற்று அந்தாதி இலக்கியத்தின் பாடுபொருளில் அகப்பொருளும் உண்டு என்ற பண்டைய மரபு நிலையைக் காத்துக் கொண்டிருக்கின்றன.

இவ்விரண்டு நூல்களிலும் இடம் பெற்றுள்ள அகத்துறைப் பாடல்களில் நற்றாய், செவிலி ஆகியோரின் பண்புநலன்கள் காட்டப் பெற்றிருக்கின்றன. சிவஞான முனிவர் இப்பாடல் களில் தன்னைச் செவிலித் தாயாக ஆக்கிக் கொண்டு, ஆன்மாவை மகளாகக் கொண்டு பாடியிருப்பதை உணர முடிகின்றது. "காத்தல் தொழில் புரிந்து கொன்றை மாலையை எனக்குத் தந்தருளினார் அல்லர் திருவேகம்ப நாதர். இந்த நிலையில் சூரியனும் மேற்குத் திக்கை அடைந்து விட்டான். ஆலகால விஷம்போல அந்திக்காலமும் வந்து கொண்டிருக்கிறது. அந்த நேரத்தில் திருமாலின் புதல்வனாகிய மன்மதனும் ஐம்பூவாளியை விடுத்துக் கொல்வானே என்று என்னுடைய புதல்வி வருத்திக் கூறுகின்றாள்" என்று நற்றாய் கூறுவதாகத் திருவேகம்பர் அந்தாதியில் 83ஆம் பாடல்

அமைந்துள்ளது. இப்பாடலின் ஏகம்பநாதர் மாலைதர மறுக்கிறார். ஆனால் திருமாலோ தன்னுடைய புதல்வன் மூலமாக மலர்களை அம்பாக விடுகின்றார் என்று சுவைபடப் பாடப் பெற்றுள்ளது. இச்சுவைக்குரிய பாடல் இதோ:

"பாலனஞ் செய்துத வார்கொன்றை மாலைதண் பாசடைமேற்
பாலனஞ் செய்துறு தென்கச்சி யேகம்பர் பானுவுமேற்
பாலனஞ் செய்துதல் போலெய்து மாலையின் பைந்துளவோன்
பாலனஞ் செய்துகொல் வானென்றென் றேங்குமென்
பான்மொழியே" (83)

தன்மகள் மாலை தராமைக்கு வருந்தியதாகக் கூறுகின்ற திருவேகம்பர் அந்தாதியின் செவிலித்தாய் ஒருபுறம் இருக்கத் திருமுல்லைவாயில் அந்தாதிச் செவிலித் தாயோ-தன் மகளின் துயரத்தை வேறுவிதமாகக் காட்டுகிறாள். அவளின் கூற்று: "என்னுடைய மகள் தென்றல் காற்றிற்கு வருந்தி வாடித் தன்னுடைய துன்பத்தை யார் போக்குவார் என்று வருந்தி, இந்த நோயை அறிவிப்பதற்கு என்னை ஏன் அயன் படைத்தான் என்று வருந்தியும், துன்பப் படுகிறாளே, அத்துன்பத்தைத் திருமுல்லை வாயில் இறைவன் அறியவில்லையே" என்று வருந்துகிறாள்.

திருமுல்லைவாயில் செவிலித்தாயின் கூற்றில் அயன் ஏன் விதித்தான் என்ற பகுதி அகப்பொருள் செய்திபோல் இருந்தாலும் பிறப்பின் கொடுமையைக் கூறுகிறபகுதியாகும்.

அகப்பொருள்இலக்கியங்களில் சிறப்பிடம் பெறுபவள் தோழி ஆவாள். தோழியின் பாத்திரப் படைப்புகள் இலக்கியங்களில் மிகச் சிறப்பாகப் படைக்கப் பெறுதல் உண்டு. சிவஞான முனிவரின் தோழியும் இந்நிலைக்கு அப்பாற் பட்டவள் இல்லை. தோழியின் பண்புகளில் அறத்தொடு நிற்றலாகிய பண்பு இரண்டு இலக்கியங்களிலும் மிகச் சிறப்பாகச் சொல்லப் பெற்றுள்ளது. கம்பர் அந்தாதியில இடம் பெற்ற தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்கிறாள். அறத்தொடு நிற்கும் அவளின் கூற்று, "முலையே அரும்பாத, பற்கள் இளமை மாறாது இருக்கின்ற தலைவி, ஏகம்பநாதனுக்கு உரிய பொருள்களில் எலும்பு திரவியமாகவும், திருநீறு சந்தனமாகவும் இருக்கிறது என்று கூறி மேலும் கொன்றை மாலையைத்

தனக்குத் தந்தருளினால் மன்மதனுடைய அம்புகள் தாக்காது என்று என்னிடத்திலே தனித்து வந்து கூறுகிறாள்" என்று செவிலித்தாயிடம் தோழி கூறுகிறாள்.

இப்பாடலில் சிவபெருமான் மீது காதலுற்ற தலைவிக்கு அவனுடைய பொருள்கள் எவ்வாறு நற்பொருளாக விளங்குகின்றதோ அதுபோலச் சிவனடியார்களுக்கு எலும்பு மாலை திரவியமாகவும், திருநீறு சந்தனமாகவும் விளங்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறார் சிவஞான முனிவர். அத்துடன் இப்பாடலில் இடம் பெற்ற தோழி, "குழந்தையாய் ஒன்றும் தெரியாத தலைவிக்குச் சிவபெருமானே காதலைத் தந்தான்" என்பது போலக் கூறும் சொல்நயம் உடையவளாக முனிவரால் படைத்துக்காட்டப் பெற்றிருப்பது சிறப்புடைத் தாகும்.

அறத்தொடு நின்ற செவிலியிடம் தலைவியைப் பாதுகாத்த தோழி திருமுல்லைவாயில் அந்தாதியில் அலர் அறிவுறுத்தித் தலைவனிடம் வரைவு கடாவி, தலைவியைக் காப்பாற்றுகிறாள். இலைக் கறியும், - பால் அன்னத்தையும், அரைப்பணத்தையும் கோடிப் பொன்னையும் சமம் என்று நோக்குகின்ற பெருந்துறவிகள் வசிக்கின்ற திருமுல்லைவாயிலில் தலைவனோ, இடையில் தோலாடையை அணிந்திருக்கின்ற எம்முடைய சுற்றத்தார் வேலை ஏந்திக் காத்திருக்க, எம்முடைய தாய்மாரோ வேலனுக்கு வெறியாட்டு எடுக்கின்றார்கள். இருந்தும் என்னுடைய தலைவிக்குப்பசலை பூத்தது. பசலை பூத்ததை அறிந்தால் எம் சுற்றத்தார் யாது செய்வாரோ - எனவே இப்பழிச் சொல்லிலிருந்து எம்மைக்காப்பீராக எனத் திருமுல்லைவாயில் தலைவனிடத்தில் தோழிவேண்டுகிறாள்.

இப்பாடலில் முதற்பகுதியில் துறவிகளின் பெருமை கூறப் பெற்றிருக்கிறது. பின்பகுதியில் எதிர் மாறாகப் பசலை பூத்த தலைவி படைக்கப் பெற்றிருக்கிறாள். ஒன்றுக்கொன்று மாறு போலச் சிவஞான முனிவர் செய்திகளைப் படைத்திருந்தாலும் இப்பாடல் மிகச் சிறந்ததாக அமைந்துள்ளது என்பதைப் பலமுறை படிக்கும்போது உணரலாம். இறையடியார்களுக்கு எப்பொருளிலும் உயர்வு தாழ்வில்லை. எல்லாம் அவர்களுக்கு முன்னர் மண்துளி போன்றதுதான். அதுபோலத் தலைவிக்குத் தலைவனைத் தவிர மற்ற அனைத்துச் சுற்றத்தார், ஊரார்,

பெருமைக்கு உரியவர்கள் அல்லர். துறவிகளுக்கு இறைவனே பெருமைக்கு உரியவன். தலைவிக்குத் திருமுல்லைவாயில் தலைவனே பெருமைக்கு உரியவன் என்பது போல அமைத்துத் துறவறத்தில் இருப்பார்க்கும் இல்லறத்தில் இருப்பார்க்கும் இறைவனே முதன்மையானவன் என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறார்.

மேலும் இப்பாடலில் வெறியாட்டு எடுத்தும் பசலை நீங்கவில்லை என்பது வழிபாடு செய்தாலும் அதில் உள்ளம் நினையவில்லை என்றால் இறைவனின் திருவருள் கிடைக்காது என்பதைச் சுட்டிக் காட்டுவதுபோல் அமைந்துள்ளது. இத்தகைய நலம் படைத்த பாடல் இதோ.

"பாலி வடகரை கோடியு மொன்றெனப் பார்ப்பவர்வாழ்
பாலி வடகரை முல்லைப் பிரான்பழி தீரவருள்
பாலி வடகரை வேலெம ரென்னினைப் பாரெனுமைம்
பாலி வடகரை யன்னையர் நேர்ந்தும் பசப்புறினே"

(பா. 26)

திருவேகம்பர் அந்தாதியில் இடம் பெற்ற தோழி கல்வியின் சிறப்பை உணர்ந்து பாராட்டும் நலம் உடையவளாக விளங்குகிறாள். தலைவன் ஓதற்பிரிவிற்குச் செல்லத் தலைப்படுகிறான். அதனைத் தலைவிபால் தெரிவிக்கத் தோழியிடம் வேண்டுகிறான். ஆனால் தோழி தான் கூறமுடியாது என்று கூறி அவனையே கூறும்படியாகச் சொல்கிறாள். இப்பாடலில் சிவஞான முனிவர் அகப்பொருள் செய்திபோலச் செய்திகளை அமைத்திருந்தாலும் தோழியின் வாயிலாகக் கல்வியின் சிறப்பை எடுத்துரைக்கிறார் "தருமத்தின் தாழ்ச்சி உயர்ச்சிகளை ஆராய்ச்சி செய்தற்குரிய கருவி கல்வியாகும். அந்தக் கல்வியை விரும்பாது பூமியில் பிறந்தோர் தாழ்ந்திருக்கின்றார்கள். அவ்வார்த்தையைத் தனக்குரியதாக்கிக் கொள்ளாது சொல்ல நினைக்கிற தலைவனே நீயே சென்று உன்பிரிவைத் தலைவிக்குச் சாற்றுவாயாக" என்று தோழி கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

இப்பாடலில் கல்விப் பிரிவு பிரிவதற்குரிய பிரிவே. ஆதலால் தலைவியிடம் சொல்லியே பிரியலாம் என்பது போலத் தோழி சொல்லுகிற பாங்கு வேறு எந்த அக

இலக்கியத்திலும் காண முடியாத பாங்காகும். கல்வியும் தருமத்தை ஆய்ந்து பார்க்கக் கூடிய கருவி என்று வகைப் படுத்திக் காட்டுவதையும் வேறு எந்த அறநூல்களிலும் பார்க்க முடியாது.

"தருமந் தரதமந் தேர்கல்வி வேட்டுத் தரையினுருத்
தருமந் தரதமங் கெய்தர ரெனுஞ்சொற் றனைக்கம்பம்வாழ்
தருமந் தரதமர்க் கெட்டார் வரைதனிற் கைபுயமாந்
தருமந் தரதமக் கூந்தற்கு நீசென்று சாற்றுகவே"

(திருவேகம்பர் - பா. 62)

என்பதே மேற்கூறிய சுவைகளைக் கொண்டுள்ள பாடல்.

இவ்வாறு தோழியைப் படைத்துக் காட்டிய சிவஞான முனிவர் தலைவியையும் தன்னேரிலாக் குணம் படைத்தவ ளாகக் காட்டுகிறார். தலைவியின் பண்பு நலன்கள் தலைவன் பிரிந்திருக்கின்ற காலத்தில் அவள் பேசுகின்ற பேச்சிலும், அவள் செய்கின்ற செயல்களிலும் பிரதிபலிக்கும். கம்பர் அந்தாதியின் தலைவன் பரத்தையிற் பிரிந்து பரத்தையரிடத்திலேயே தங்கிவிட்டான். இதனைச் சொல்லி வருந்தி ஏசுகிறாள் (பா. 70) பொருட் செல்வம் உடையோர்க்கு உண்ணுவதற்குவரகுச் சோறு அழகாகுமோ, அதுபோல அழகு, கல்வி, அறிவு முதலியவற்றைப் பெற்றிருக்கின்ற நம்முடைய தலைவர்க்கு சுகத்தைவிற்கும் பரத்தையர் வீடு ஆசனமாக ஆகிவிட்டதே, என்னே கொடுமை? என்று வருந்துகிறாள்.

அழகு, கல்வி, அறிவு இம்மூன்றும் பெற்ற தலைவனை "கந்தமான வெற்பாளர்" போலும், என்று கூறி முருகப் பெருமானைப் போன்றவர் என்று தலைவனைத் தலைவி குறிப்பிடுகிறாள். இப்பாடலில் தலைவி சொல்நயமும், பொருட்சிறப்பும்அமைந்தவளாகப் படைக்கப் பெற்றிருப் பமை சிவஞான முனிவரின் கைவண்ணமாகும்.

இத்தகு நிலையில் அகத்துறைப் பாடல்கள் சிவஞான முனிவரின் தனித்திறனை எடுத்துக்காட்டி அக இலக்கியச் சுவையோடு பக்திச் சுவையையும் எடுத்துக் காட்டுகின்றன.

சமுதாயக் கோட்பாடு

அந்தாதி இலக்கியங்கள் தம்முடைய பாடுபொருளுக்கு ஏற்பச் சமய உணர்வுகளை இறைவனின் பெருமைகளாக,

அடியார்களின் சிறப்புக்களாக, அகப் பொருள் துறைகளாகத் தந்து நிற்கின்ற அதே நேரத்தில் அற்றைக்காலச் சமுதாயத் தையும், வருங்கலச் சமுதாயத்தையும் நினைவிற்குக் கொண்டு வருகின்றன. சிவஞான முனிவர் அந்தாதிகளிலும் இத்தகைய சிறப்பைக் காணமுடிகிறது. சிவஞான முனிவர் வாழ்ந்த காலத்துப் பலவகைப் பட்ட மானிடர்களைச் சந்தித்திருக் கின்றார். அவர்களைப் பலபாடல்களில் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

"வாயுறுறை மொழியார் பிறன்பொருள் விழைவார்
வஞ்சக நெஞ்சகம் பொதிவார்
தீயன மகிழ்வார் நல்லன விகழ்வார்
செருக்கினாற் றம்மையே மதிப்பார்
பேயரா மவர்பா லிரந்துசென் றுழலாப்
பெருவர மொன்றெனக் கருள்வா
யாயனே குளந்தைத் திருநக ரமர்ந்த
வருட்பெருங் கருணைமாமலையே.

(குளத்தூர் - 91)

இப்பாடலில் இத்தகை மக்களின்பால் பழகாமல் இருக்க எனக்கு வரம்தர வேண்டும் என அவர் பாடியிருப்பதை நோக்கும் போது தாம் தூய துறவியாக வாழ்வதையே விரும்பி யிருக்கிறார் என்பது நன்கு புலனாகின்றது. இத்தகைய மானிடரோடு "களவே விரும்பும் கவரும் மதியாளர் நட்பும்" என்னை அடையாது காத்தல் வேண்டும் என்கிறார்.

"பெரும்புங் கவரு மகிழ்ந்தேத்து முல்லைப்பெம் மான்களவே
விரும்புங் கவரு மதியாளர் நட்பை விழையும்வெறுந்
துரும்புங் கவரு மனமிது தீர்த்தென் றுரிசுளத்தே
யரும்புங் கவரு மவைகளு மாய வரும்பொருளே"

(திருமுல்லை வாயில் அந்தாதி பா. 15)

மேலும் ஆண்டவன் தன்னை அடிமை என்று உரைப்பர். அடிமையை ஆண்டவனென்று உரைப்பார். பதியைப் பசு என்பார். பசுவைப் பதி என்பார். இத்தகைய சழக்கரோடு இணங்காமல் காக்கவேண்டும் என்று கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் (பா. 77) குறிப்பிடுகிறார். இத்தகைய செய்தி களால் முனிவரின் காலத்தே சமுதாயத்தில் புரையோடிப்

போயிருந்த குற்றங்களால் மானிடர் நிலைமை மாறி முறை தவறி இருந்திருக்கிறது என்பது தெரிகிறது, அந்தக் குணங்கள் சாராமல் இருப்பதற்கே போலும் முனிவர் இளமையிலேயே துறவை மேற்கொண்டார் எனத் தெரிகிறது.

இத்தகைய மானிடர் வாழ்ந்த போதும் இறைவனின் விழாக்களும் இறைத் தொண்டுகளும் அக்காலத்தில் நடந்திருக்கின்றன, என்பது அவரின் பாடல்கள் மூலமாகத் தெரிகின்றது. ஏகாம்பரநாதரின் தெப்பத் திருநாள் நிகழ்ச்சியை.

"சாறுவ தீர்த்த நறுநீரில் ஏகம்பர் தாம் உலவும்" (பா. 27)

என்று குறிப்பிட்டு விழா நடந்ததைக் காட்டுகிறார்.

அதுபோலச் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது என்பதை,

"கம்பர் பிரானைச் சிவநிசிக் கண் வணங்கின்" (பா. 87)

என்று குறிப்பிட்டுச் சிறப்பிக்கின்றார்.

மக்களிடையே அன்று வழங்கிய சில பழக்க வழக்கங்களையும் சிவஞான முனிவரின் பாடல்களால் தெரிந்து கொள்ள முடிகிறது. திருமுல்லைவாயில் அந்தாதியில்

"காக்கை கரைந்தால் விருந்து வரும்" என்ற நம்பிக்கை முனிவரால் குறிக்கப் பெற்றிருக்கிறது. இதனை முனிவர் திருமுல்லைவாயில் இறைவனை,

"ஈண்டு வருவதற்குக் காகமே நீ கரைந்தால் உனக்கு ஊன்பலி தருவேன்" (பா. 44) என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

திருமணக் காலத்தில் இன்னிசைச் கருவிகள் அதிகமாக முழங்கி எப்பொழுதும் காஞ்சீபுரத்தில் பேரொலிகள் ஒலித்துக் கொண்டேயிருந்தன என்பதைக் கம்பர் அந்தாதி 8ஆம் பாடல் குறிப்பிடுகிறது.

அக்காலத் தொழில் இயல்புகளும் சில பாடல்களின் மூலமாக வெளிப்படுகின்றது. காஞ்சி நகரம் வணிக நகரமாக விளங்கியிருக்கிறது. முத்து, பொன், கோமேதகம் இவைகள் வணிகம் செய்யப் பெற்றன என்பதைத் திருவேகம்பர் அந்தாதியின் 19ஆம் பாடல் குறிப்பிடுகின்றது.

அதுபோலச் சூதாடுகிற வழக்கம் பெரிதும் நடை பெற்றிருக்கிறது. அதனை முனிவர் சாடியிருப்பதைக் காண முடிகிறது.

"தீங்கு அரும்பும் கவறு ஆடிப் பயனில்லை" (பா. 60)

என்று திருமுல்லைவாயில் அந்தாதியில் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு அவருடைய காலச் சமுதாயச் சூழலை அவருடைய பாடல்களால் தெரிந்து கொள்கிற அதே நேரத்தில் வரப்போகும் சமுதாயத்திற்கு அவர் கூறும் அறிவுரைகளையும் காணமுடிகிறது.

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் அமைந்த பாடல்,

"வேந்தராய்க் கவிஞராய் விஞ்சை கற்றுணர்
மாந்தரா யறிஞராய் வாழ வேண்டுவீர்
பூந்தராய்க் கவுணியன் போற்று மெந்தையைச்
சாந்தரா யிளசையிற் சாந்து கண்ணுமே" (பா. 88)

இப்பாடலில்

"கற்றதனால் ஆய பயனென் - கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்"

என்ற திருக்குறளின் கருத்தை அமைத்து முனிவர் அறவுரை கூறியிருப்பது போற்றத் தக்கது. கல்வியும், செல்வமும், ஞானமும் கிடைக்க வேண்டுமானால் இறைவழிபாடு தேவை என்பதைக் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியின் முதற்பாடலிலேயே குறிக்கிறார்.

இவ்வாறு இறை வழிபாடு வேண்டும் என்று கூறிய முனிவர் யாக்கையின் மேல் கொண்டிருக்கின்ற பற்றை நீக்கி வாழவேண்டும் என்று அறிவுறுத்துக்கின்றார். அவ்வாறு யாக்கை நிலையாமையை அறிவுறுத்திக் கூறும் பாடல்கள் சிந்தனைக்குரியதாக அமைந்துள்ளன. அதில் ஒன்று இளசைப் பதிற்றுப் பத்தாந்தியில் இடம் பெற்றுள்ள 92-ஆம் பாடலாகும்.

"நாயினுக் கிரையோ நரியினுக் கிரையோ
நகுநடைக் குழிவிழிப் பிறழ்பற்
பேயினுக் கிரையோ கழுகினுக் கிரையோ
பெரிதுநா றியபுழுக் குரம்பை
யீயினுக் கிரையோ யாதினுக் கிரையோ" (பா. 92)

இவ்வாறு இல்லறத்தார்க்கு அருளுரை கூறிய முனிவர் தவத்தை உடையவர்கள் எவ்வளவுதான் சிறப்புப் பெற்றிருந் தாலும் அடியவரை இதழ்தல் கூடாது என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய கருத்துள்ள பாடல் குளத்தூர் பதிற்றுப்பத்தந்தாதி யில் அமைந்துள்ளது. அப்பாடலைப் பார்க்கும் பொழுது முனிவரின் காலத்தில் ஒருசில துறவிகள் தங்களையே தருக்கிக் கொண்டு சிவன் அடியார்களை இகழ்ந்திருக்கிறார்கள். அதனைப் பொறுக்க முடியாது வளர்கின்ற சமுதாயத்திலாவது இந்நிலை மாறவேண்டும் என்று எண்ணி முனிவர் கீழ்வரும் பாடலை அமைத்திருக்கின்றார்.

மலைதொறுந் திரிந்தும் வெண்பொடி யணிந்து
மந்திர மோதியுங் தீர்த்தத்
தலைபுனல் குடைந்து மொழுக்கினிற் றவறா
தற்புதத் தவம்பல புரிந்துஞ்
சிலைவரை யாக வளைந் தருள் குளந்தைச்
சிவபிரான் முடிதவ ழொற்றைக்
கலையவ னடியார் தனையிகழ்ந் துரைப்பார்
கயவரிற் கயவரா குவரே. (பா. 92)

அணிநலன்கள்

இலக்கியக் கொள்கையின் முதற்பகுதியான பொருள் நலங்கண்டு இரண்டாவது பகுதியான அணிநலம் காண்பது இலக்கிய ஆய்வாளர்களின் மரபாகும். சிவஞான முனிவரின் அந்தாதி இலக்கியங்களில் அணிநலன்கள் என்று காணப்படு கின்றவற்றை நோக்கப் புகுங்கால் விரிந்து பெருகும் என்பதில் ஐயமில்லை. சொல்லணி என்ற நிலையில் சொல் பின்வரு நிலையணி முனிவரின் இலக்கியங்களில் செங்கோலோச்சுகிறது எனலாம். ஏனென்றால் அவ்வணி யமக அந்தாதி எனத் தனி ஒரு அந்தாதியாகவும், திருமுல்லைவாயில் அந்தாதியில் இடையிடையும் முனிவரின் கைவண்ணத்தால் அழகுபெற்றுத் திகழ்கிறது. அவை இல்லாமலும் பதிற்றுப் பத்தந்தாதிகளிலும் அவ்வணி அமைந்துள்ளதைக் காண முடிகிறது.

“மான்போலும் விழிசாயன் மயில் போலு மடந்தையர்சொற்
றேன்போலு மெனப்பிதற்றித் திரிவேனை யாட்கொண்டாய்
நான்போலு மடிமையுமற் றுன்போலு நாயனுந்தான்
மீன்போர்செய் வயற்கலைசை வித்தகனே கிடையாதே”

(பா. 13) (கலைசை)

இப்பாடலில் போலும் என்ற சொல் திரும்பத் திரும்ப வந்துள்ளது.

பூட்டுவில் பொருள்கேள் அணி பல இடங்களில காணப்பெறுகிறது. ஒரு பாட்டின் ஈற்றுச் சொல்லும், முதற் சொல்லும் பொருள் நிலையில் தொடர்பு படுமானால் அது பூட்டுவில் அணியாகும்.

> "என்னினிச் செய்ய வல்லா ரெறுழ்வலித் தடந்தோள் கொட்டிக்
> கொன்னுறு பாசந் தண்டங் குடங்கையி லேந்தி நக்குப்
> பின்னுரு மிருள்போற் கூற்றங் குறுகுவான் பெட்ட காலைத்
> தன்னைநே ரிளசைக் கோமான் றாளிணை யிறைஞ்சா தோரே"

(இளசை. பா. 51)

இப்பாடலில் ஈற்றுச் சொல் இறைவனின் தாழினை இறைஞ்சாதோர் என்பதாகும். அது முதல் வரியில் அமைந்துள்ள என்னினிச் செய்ய வல்லார் என அமைந்து இறைவனுடைய தாளை வணங்காதோர் எதனைச் செய்ய வல்லார்கள் என அமைந்து அணி சிறக்கிறது.

இவ்வாறு சொல்லணி அமைந்து சிறப்பதுபோலப் பொருளணியாக இருக்கிற உவமை, உருவகம், எடுத்துக்காட்டு உவமை ஆகிய அணிநலன்கள் இலக்கியத்தின் அழகுக்கு அழகு சேர்க்கின்றன. சிவஞான முனிவரின் உவமைகள் நினைந்து நினைந்து சுவைக்கத் தக்கனவாகும். இறைவன் தானே வந்து அருளினால்தான் உயிர்கள் அருளைப் பெறமுடியும் என்பதை மிகச் சிறந்த உவமை மூலம் எடுத்துக் காட்டுகிறாா. தாயானவள் குழந்தைக்குப் பால் புகட்ட வேண்டும் எனில் தன்னுடைய மார்பகத்தைக் குழந்தையின் வாயில் வைத்தால் அன்றிக் குழந்தை தானே உண்ணாது. அது போலத்தான் இறைவனும் குழந்தையாகிய உயிர்களிடத்தில் தானே வந்து அருள வேண்டும் என்கிறார். இத்தகு அருமையான உவமை இடம் பெற்ற பாடல் திருமுல்லைவாயில் அந்தாதியில் உள்ளது.

"தாய் இளம் சேய்க்கு அழகுதரும் முலை வாயில் வைத்தால் அன்றி உண்ணுந் தகுதியுண்டோ" (பா. 40) என்பது உவமை யாகும்.

ஒரே பொருளை உவமையாக இரண்டு இடங்களில் பயன்படுத்தி நல்லதொரு விளக்கம் தருகிறார் முனிவலர்.

"நாய்மேல் தவிசியிட்டு அங்கு எனையும் நயந்து இங்குவந்து ஆட்கொண்டான்" (குளத். பா. 16)

இங்குத் தன்னை நாயாக உவமைப் படுத்திக் கொண்டிருக்கிறார். அது போலத் திருமுல்லைவாலயில் அந்தாதியில்,

"நாய் அகங்கைக்கு இளைதாம் தெங்கங்காய் உறின் நாய் என் செய்யும்" (பா. 19) என்று குறிப்பிட்டு இங்கும் தனக்கு நாயை உவமைப் படுத்துகிறார்.

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் தனக்கு இறைவன் அருள் புரிந்து நாயின்மேல் யானைக்கு இடவேண்டிய தவிசை இட்டதுபோல் இருக்கிறது என்கிறார். திருமுல்லைவாயில் அந்தாதியில் துறவியாக இருக்கின்ற தான் இறைவனின் அருள் பெறாது ஒருதலைக் காமத்தால் வருந்துவது, நாய் பெற்ற தெங்கங்காய் பயனற்றதுபோல இருக்கிறது என்கிறார். அருள் பெறாது இருந்தபோதும் நாயாக இருக்கிறேன் என்கிறார். அருள்பெற்ற போதும் நாய்க்கிட்ட பெருமைபோல் இருக்கிறது என்கிறார். என்னே அவரின் புலமை. இவ்வாறு அந்தாதியில் இடம் பெற்றிருக்கின்ற ஒவ்வொரு உவமையிலும் நயம் காண முடிகிறது. இருப்பினும் இடம்பெற்றிருக்கிற உவமைகளில் சிலவற்றைத் தொகுத்துக் காண்பது நலம் பயக்கும்.

திருமுல்லைவாயில் அந்தாதி

1. "பொன், பெண் மண்ணாம் தூண்டில்" (பா. 76)
2. "பந்து அங்கும் இங்கும் அலமரல் போன்று" (பா. 89)
3. "ஊன் காளத்திக்குச் சுவையுளதோ" (பா. 44)
4. "கற்றவர் அம்பலவரைப் பணியாரைப் போன்றது கடுஞ்சுரம்" (பா. 51)

கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி

1. "மான் போலும்விழி சாயல் மயில் போலும்" (பா. 12)
2. "மனம் கருங்குரங்கின் வசப்பட்டு மயங்கினேன்" (பா.74)
3. "கோடி சூரிய உதயம்போலத் தோன்றி நின்றனன்" (பா.34)
4. "கொண்டல் போல் முழங்கி (பா. 80)

குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி

1. "வேலிற் றிகழ்ந்து கயலிற் பிறழ்ந்து
விடமொப்ப வெப்ப மருவிப்
பாலிற் றெளிந்து பிணையைத் துரத்தி
யரிசூழ் பரந்து படைவேள்
கோலிற் பயின்று குமிழின் மறிந்து
குழையூடு செல்லும் விழி" (பா.26)

2. "களிம்புநோய் செம்பென" (பா. 84)

திருவேகம்பர் அந்தாதி

1. "தாமரையின் பன்னந் தனவனம் போல் பற்றற்று" (பா.26)

2. "தன வாழ்வோர் உணற்கு வரகு அந்தமா" (பா. 70)

3. "தாகம் அங்கு அலை நீர் போக்குமோ" (பா. 80)

4. "நஞ்சு எய்தல் போலும் எய்தல் மாலை" (பா. 83)

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதி

1. "தாயினுக்கு அழகோ குழவியை வருத்தல் (பா. 92)

2. "திரியும் வன்மனக் குரங்கினைப் போல்" (பா. 80)

இவ்வாறு உவமைகள் சிறந்து விளங்குகின்றன. மேலும் உருவக அணியும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

"இடும்பைக் கடல் அழுந்து மடியேன் றனக்கோர்புணை" என்ற துன்பத்தைக் கடலாகவும் இறைவனின் திருவருளைப் படகாகவும் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் உருவகப் படுத்தியிருக்கிறார். இவ்வாறு அணிநலன்கள் சிறந்து விளங்கி அழகூட்டுகின்றன.

கற்பனை வளம்

முனிவரின் நூல்கள் ஐந்தும் சமயம் சார்ந்த அடிப்படையில் மிகச் சிறந்து விளங்குகின்ற காரணத்தால் இறைவனுடைய பெருமைகளுக்கும், அவனருள் பெற்ற அடியார்களின் பெருமைகளுக்கும், தத்துவங்களுக்கும் இலக்கியங்களில்

முக்கிய இடம் கொடுத்து விட்டபடியால் பிற பண்புகளுக்குச் சிறிது இடமே அளிக்கப் பெற்றிருக்கிறது. அத்தகைய பண்புகளில் ஒன்று கற்பனையாகும். கற்பனைகள் இலக்கிய ஆய்வாளர்களால் மூன்று வகையாகப் பிரிக்கப் பெற்று ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. (டாக்டர் மு.வ. மொழிமரபு) படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்பன அம்மூன்று கற்பனைகள். இதில் கருத்து விளக்கக் கற்பனைதான் சிவஞான முனிவர் நூல்களில் காணப்பெறுகிறது. கருத்து விளக்கம் கற்பனை என்பது வாழ்க்கைக்கு வேண்டும் கருத்துக்களை விளக்கும் பொழுது உதவிபுரிகின்ற கற்பனைகளாகும்.

சமயம் சார்ந்த கருத்துக்களை விளக்க முற்படும்பொழுது முனிவரின் உள்ளக் கற்பனைகள் வெளிவந்துள்ளன. ஐந்து நூல்களிலும் ஐந்து திருத்தலங்கள் இடம் பெற்றுள்ளன. ஐந்து நூல்களிலும் இடம்பெற்ற அத்திருத்தலங்களின் பெருமை களைக் கூறும் பொழுதும் கற்பனைகள் இடம்பெற்றுள்ளன.

குளத்தூரின் சிறப்பை எடுத்துச் சொல்லும் பொழுது பெயருக்கேற்ப நீர்வளத்தின் கற்பனைகள் அமைந்துள்ளன. மேலும் கருத்து விளக்கக் கற்பனைக்கேற்பச் சமய உணர்வுடைய குளத்தூர் என்று குறிக்கப் பெற்றுள்ளது. நீர்வளத்தைக் குறிப்பிடும் கற்பனைகளில் அழகானதொரு பாடல் 60-ஆம் பாடலாகும்.

அழகிய இறகுகளை உடைய வண்டுகள் ஆர்த்துக் தாமரை மலரிலுள்ள தேனை உண்டு, அத்தாமரை மலர்களிலேயே தூங்குகின்றன. ஆனால் அவைகளைத் தூங்கவிடாது அன்னங்கள் அத்தாமரை மலரில் வந்து விளையாடுகின்றன. இத்தகை குளத்தூர் எனக் கற்பனை வளம் அமைந்துள்ளது. இக்கற்பனை வளம் ஒருமலரில் நிகழ்ந்த இரு செயல்களைக் குறிப்பிடுகின்றது. ஒருசெயல் அமைதியான தூக்கம். மற்றொரு செயல் விளையாட்டு. இவை குளத்தூரில் நிகழுகின்ற இறை வழிபாட்டினைக் குறிப்பிடுகின்றன. குளத்தூர் இறைவனின் தாமரைத் திருவடிகளை ஒரு பக்கம் முனிவர்கள் ஐம்புலன் களையும் அடக்கி வணங்கி இறைவனின் இன்பத்தேனினை மாந்தி இறைவன் திருமுன்னர் தங்களை அர்ப்பணிக்கின்றனர். மற்றொரு புறம் இல்லறத்தார் ஆரவாரத்தோடு இறைவழி

பாட்டினைச் செய்து அருள்பெற முனைகின்றனர். இத்தகைய உட்கருத்து இக்கற்பனையால நன்கு விளக்கப்பெறுகிறது.

அது போல,

"ஆகுதிப்புகை போய் அமரரை விளிக்கும்
அந்தணர் குழாம்பயில் குளத்தூர்"

என வெளிப்படையாக (பா. 90) குளத்தூரில் நடைபெறும் சமய வழிபாட்டுமுறை வருணித்துக் கூறப்பெற்றுள்ளது.

இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் "சோலையின் மதி தவழ் இளசை (பா. 85) என்றும், "புயல்சூழ் மணிமாடக் கவின் இளசை" (பா. 22) என்றும், இளசை நகரம் சிறப்புப் படுத்தப் பெறுகிறது.

கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் "மீன் போர்செய் வயல் கலைசை" (பா. 13) என்று குறிப்பிடப் பெற்று மீன்களின் போராட்டம் கற்பனை செய்யப் பெற்றுள்ளது. இப் போராட்டம் அப்பாடலில் சிவஞான முனிவரின் அன்பும், இறைவனின் அருள் புரியா நிலையும் போராடிக் கொண்டிருப்பதை நினைவுபடுத்துகிறது.

திருவேகம்பர் அந்தாதியில் சங்க இலக்கியக் கற்பனையின் சாயலையக் காணமுடிகிறது. வாவி நீரில் வாளைமீன்கள் துள்ளிக் குதிக்கின்றன. துள்ளிக் குதித்த மீன்கள் மாங்கனிகளுக்கு ஊடே பாய்கின்றன. மாங்கனிகள் சிதைகின்றன. சிதைந்த கனிகளில் இருந்து தேன் வழிகின்றது. இவ்வாறு குதித்ததால் ஏற்பட்ட களைப்புத்தீர மீண்டும் அந்த மீன்கள் தாமரையில் இருக்கின்ற தேனை உண்ண வருகின்றன. இத்தகைய நலம் படைத்தது கச்சிமாநகர் என்று முனிவர் குறிப்பிட்டுக் காட்டு கிறார். அப்பாடலின் பின்பகுதி உயிரின் செயற்பாடுகளையும் தத்துவங்களையும் கூறுவதால் முன்பகுதியில் அமைந்துள்ள இக்கற்பனை உயிர்களைப் பற்றிய கருத்து விளக்கக் கற்பனையாகக் கொள்ளலாம். உயிர்கள் இறைவனுடைய ஆணையினால் உலகில் தோன்றி, வினைகளைச் செய்து அவ்வினைகளைச் செய்ததனால் இளைப்பாறுதல் பொருட்டு மீண்டும் இறைவனுடைய திருவடிகளைச் சாருகின்றன என்பதனை இக்கற்பனை விளக்குகிறது எனலாம் (பா. 72)

வடதிரு முல்லைவாயில் அந்தாதியில் நீர் வளம்மிக்க நிலை வர்ணிக்கப் பெற்றுள்ளன. கொக்குகள் குளத்திலே இருக்கின்ற மீன்களை உண்ணுகின்றன. அவ்வாறு உண்ணுகின்ற பொழுது கொக்குகள், மீன்கள் தங்கள் கழுத்தில் தங்கிவிடாதபடி விழுங்கி விடுகின்றன. அத்தகைய நீர்வளம் மிக்க திருமுல்லைவாயில் என்று கூறப்பெறுகிறது. இதில் விளக்கப்படுகிற கருத்து, காம இச்சையானது எத்தகைய தடையும் இல்லாமல் உயிர்களை உண்டு விடுகின்றன என்பதை இக்கற்பனை எடுத்தியம்புகிறது.

இவ்வாறு கருத்து விளக்கக் கற்பனைகள் நலம் சான்ற இலக்கியங்களாக ஐந்து அந்தாதிகளும் விளங்குகின்றன.

முடிவுரை

தத்துவ வித்தகராம் சிவஞான முனிவர் படைத்திட்ட ஐந்து அந்தாதி இலக்கியங்களும், தம் பாடுபொருளுக்கு ஏற்பப் பாட்டுடைத் தலைவனாம் இறைவனின் பெருமைகளையும், அடியார்களின் திருநெறிய தெய்வப் பணிகளையும், வழிபாட்டு முறைகளினால் ஏற்படுகின்ற பயன்களையும், சமுதாய உணர்வு நெறிகளையும், அகப்பொருள் செய்திகளையும் பெற்று விளங்கி மேலும் இலக்கியங்களின் அமைப்பிற்கேற்பப் பா வகை களையும், அணிநலன்களையும், கற்பனைச் செறிவுகளையும் பெற்று இலக்கியக் கொள்கைகளை வெளிப்படுத்துகின்றன. இவ் இலக்கியக் கொள்கைகளில் ஒருபகுதியாக விளங்கும் தத்துவக் கருத்துக்கள் தனி ஒரு பகுதியாக விளங்கும் அளவிற்குப் பல்கிப் பெருகிக் காணப்பெறுவதால் அத்தத்துவக் கருத்துக்கள் அடுத்த கட்டுரையாக உருவாகியுள்ளது.

○

5

அந்தாதி நூல்களில் தத்துவக் கருத்துக்கள்

சிவன் என்னும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மானைப் போற்றிப் புகழும் சமயம் சைவசமயமாகும். அச் சைவ சமயத்தின் தத்துவக் கருத்துக்களைச் சாத்திர நூல்கள் பதினான்கும் வடித்துத் தருகின்றன. சாத்திரங்கள் பதினான்கிற்கு விளங்கிய உரையாசிரியர்களில் தலையணியாய் விளங்குபவர் சிவஞான முனிவர் என்றால் அது மிகையாகா. எனவே தத்துவ உரையாசிரியராகிய அவர் எழுதிய நூல்களும் தத்துவக் கருத்துக்களில் சிறந்தோங்கி விளங்குவது இயற்கையாகும். அதிலும் சமயம் சார்ந்த கருத்துக்களைப் பாடுபொருளாகக் கொண்ட அந்தாதி நூல்களில் தத்துவக் கருத்துக்கள் இடம்பெற்றிருப்பது இயற்கையாகும். ஒவ்வொரு பாடலிலும் தத்துவ நிலைகாணப் பெறுகிறது. என்றாலும் அவை அனைத்திற்கும் முதன்மையானதாக விளங்கும் முப்பொருள் உண்மைக் கருத்துக்களைத் தொகுத்துத் தருவது இக்கட்டுரை யின் நோக்கமாகும்.

முப்பொருள் உண்மை

சைவ சித்தாந்தத்தின் தலையாய கொள்கை முப்பொருள் உண்மையாகும்.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி"

என்பது திருமந்திரத்தின் திருவாக்கு ஆகும். இதை நன்குணர்ந்தவர் சிவஞான முனிவர். ஆதலால் பதி, பசு, பாசம் என்ற மூன்றினையும் தன்னுடைய அந்தாதி நூல்களில் எடுத்துக் காட்டி அவற்றிற்குரிய இலக்கணங்களை எளிமையாகத் தந்துள்ளார். முப்பொருள் உண்மையை,

"பிறவிப் பெருங்காட்டைத் தெரித்தான் - மூன்று பொருள் உண்மை
தெரித்துப் பாசம் இரண்டினையும் இரித்தான்"

(இளசைப்பதிற்றுப் பத்தாந்தி - 24)

என்பர்.

உயரினைப் பசு என்ற சொல்லால் குறிக்கின்ற சிவஞான முனிவரின் இலக்கியப் பகுதி சுவைத்து இன்புறத் தக்கதாகும். அதிலும் மானிடரை இருகாலுடைய பசுக்கள் என்று குறிப்பிடுவது நினைந்து இன்புறத் தக்கதாகும்.

"மதியிலார் சிலர் - இரண்டு காற் பசுக்களின்" (குளத் - 14)

என்று பசு என்ற சொல்லைக் கையாளுகிறார். அதுபோல இறைவனைப் பதி என்ற சொல்லாலும் குறிப்பிடுகிற நிலையைப் பல இடங்களில் காணமுடிகிறது.

"பதியார் இளசைப் பதியாழ்பவன்" (இளசை - 37)

அதுபோல பாசத்தையும், பாசம் என்ற சொல்லால் குறிப்பிடுகிற இடங்கள் பல உண்டு.

"பற்றிக் கிடந்த பசு, பாச பரப்பை" (இள - 30)

என்பது அதில் ஓரிடம்.

இவ்வாறு முப்பொருள்களைப் பற்றிய குறிப்புகளைப் பாடல்கள் தோறும் கண்டு தத்துவ விளக்கத்தை உணர முடிகிறது.

இறைமைக் கொள்கை

முப்பொருள்களில் முதல் இடம் பெறுவது பதியின் இலக்கணமாம் இறைமைக் கொள்கையாகும். சைவ சித்தாந்த உலகில் அயன், அரன், அரி என்ற மூன்று கடவுளர்க்கும் மேலானவனாகிய இறைவனே தலைவனாவன் என்பது முடிந்த முடிபாகும். மூவர்க்கும் மேலான நிலையைக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"மூவரை ஈன்ற பெம்மான் யாவன்"

"முத்தொழிலும் மூவர் இயற்றிடப் பணித்தான் ஆனந்தத் தேவன்" (பா. 45)

என்று குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார். இத்தகைய மூவர்க்கு மேலானவன் உயிர், உலகத் தோற்றங்களுக்கு நிமித்த காரணமாக அமைகின்றான் என்பதை,

"காரண காரணன் ஆம் கலைசைக்கோன்" என்று சிவஞான முனிவர் கலைசை அந்தாதியில் (பா. 50) குறிப்பிடுகிறார். இத்தகைய இறைவன் வடிவம் பற்றிக் குறிப்பிடும்பொழுது உள்ளதும் இல்லதுமாகும். உருவும் அருவும் ஆகும், கள்ளமும் வெளியுமாகும், கருணையும் மறமுமாகும், பள்ளமும் மேடும் ஆகும் என்று குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதியில் (50) குறிப்பிடுகிறார்.

மேலும் "அருமேனி கொண்டும் உருமேனி கொண்டும் அருள் கூர்ந்து இரண்டும் மருவுந் திருமேனி கொண்டு" என்றும் அதே அந்தாதியில் 22ஆம் பாடலில் குறிப்பிடுகிறார். எனவே இறைவன் உருவமாக, அருவமாக அருஉருவமாக விளங்குகிறான் என்பதை முனிவர் குறிப்பிட்டு விடுகிறார். இதனை,

"அருவமும் உருவா ரூபம்
ஆனதும் அன்றி நின்ற
உருவமும் மூன்றும் சொன்ன
ஒருவனுக்கு உள்ள வாமே"

என்று சிவஞான சித்தியார் (பா. 58) குறிப்பிடும்.

அவன் எண்குணத்தவனாக விளங்குவான் என்பதை, "எண் குணத்தான் தாளை வணங்காத் தலை" என்று திருக்குறள் குறிப்பிடும். இதனைச் சிவஞான முனிவர்,

"பரம்பரன் பண்டங்கள் முல்லை வாணன் எண்பாற் குணமும்
நிரம்பரன்"

என்று திருமுல்லைவாயில் அந்தாதியில் (பா. 38) குறிப்பிடுகிறார். அதுபோல இறைவன் பாசத்திலிருந்து நீங்கியவன் என்பதையும் அதே நேரத்தில் அவன் உயிர்களிடத்தில் அத்துவித நிலையாக கலந்திருக்கிறான் என்பதையும் சிவஞான முனிவர் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

"வித்தக லோகம் அனைத்திலும் வேறாய்
அத்துவிதப் பொருளாம் இளசைக்கோ" (இளசை - 40)

என்பது அவரின் வாக்காகும்.

இதனை மெய்கண்டார்,

"அவையே தானேயாய்"

எனக் குறிப்பிடுவார.

இப்படிப்பட்ட இறைவன் உயிர்களுக்கு உயிராகவும் விளங்குவான் என்பதை, "உயிர்க்குயிராய் அங்கங்கே உறைவான்" (பா. 12) என்று இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுவார். இப்பகுதி திருஞான சம்பந்தரின்,

"உயிர்க்கு உயிராய் அங்கங்கே நிற்கின்றான்" (1. 132 - 4)

என்ற வாக்கினை நினைவு படுத்துகிறது. இவன் சைவர்களுக்கு மட்டும் உரியவன் அல்லன். அறுவகைச் சமயத்தோர்க்கும் உரியவன், என்பதை,

"மாறுபடாப் பெருங்கருணை வாரிதியாய் நிறைந்திருந்தும்
ஆறுவகைச் சமயத்து மவ்வவர்கட் கவ்வவையா"

(குளத்தூர் - 73)

என்ற பகுதிமூலம் குறிப்பிடுகிறார்.

இப்பகுதி,

"அறுவகைச் சமயத் தோர்க்கும்
அவ்வவர் பொருள்ஆய், வேறுஆம்
குறியது உடைத்தாய், வேத -
ஆகமங்களின் குறி இறந்து, அங்கு
அறிவினில் அருளால் மன்னி,
அம்மையோடு அப்பன் ஆகி,
செறிவு ஒழியாது நின்ற
சிவன்அடி சென்னி வைப்பாம்"

(சிவஞான சித்தியார் - பா. 2)

என்ற சித்தியாரின் பகுதியை அடியொற்றி வந்திருக்கிறது என்பதனில ஐயமில்லை.

பிற சமயங்களை மறுத்துக் கூறுகின்ற சித்தியாருக்குச் சிறந்த உரை எழுதியவர் சிவஞான முனிவர் ஆதலால் பிற சமயங்களை மறுக்கின்ற சில பகுதிகளையும் தம் பாடல்களில் அமைத்துள்ளார்.

"மணிகண்ட வாதிரை நாளா னரன்கம்ப வாணனென்கண்
மணிகண்ட வாதினி தாள்வோன் றனைப்புத்தர் வாமிகள்

மணிகண்ட வாதியை வென்றுண்மை தேர்மன் வியாகரண
மணிகண்ட வாதி விபுதர்க ணாடொறும் வாழ்த்துமினே"

(திருவேகம்பர் - 49)

இப்பகுதியில் இறைவனாகிய சிவபெருமானைப், பௌத்தரும், சாத்தேயரும், சமணரும் நிகண்ட வாதியருமாகிய சமய வாதிகளை வெற்றி கொண்டு "தத்துவப் பொருளை ஆராய்வதற் குரிய கருவியாகிய சித்தாந்தத்தைக் கைக்கொண்ட அறிஞர் களே நாடோரும் துதியுங்கள்" என்ற பொருள் அமைந்துள்ளது.

இங்கு பிறமத வாதிகளாகிய புத்தர், வாமிகள், அமணர் நிகண்டவாதி ஆகிய புறச் சமவயாதிகளை வெல்லும் திறம் பெற்றவர்கள் சைவ சித்தாந்திகள் என்ற ஆழ்ந்த பற்று சிவஞான முனிவருக்கு இருந்தது என்பது இடம் பெற்றுள்ளது.

இறைவன் ஆனந்தப் பர ஒளியாய் விளங்குகின்றான் என்பதைப் பல இடங்களில் நினைவு படுத்துகிறார்.

"அருவுருவம் கடந்து நிறைந்து ஆனந்தப் பரஒளியாய்"

(கலைசை - 11)

அவ்விறைவனே அனைத்து மதச் சாத்திரங்களையும் தந்தவன் என்பது தத்துவ வித்தகர்களின் முடிபாகும். அத்தகு நூல்களை விண்ணவர்களுக்கெல்லாம் அருளியவன் என்பதும் அவர்தம் முடிபாகும். அம்முடிவுகளால் பிரமன் வேதங்களைப் படைக்க வில்லை என்று பாஞ்சராத்தியர்களை மறுக்கின்ற நிலை தத்துவ ஆசிரியர்களிடம் காணமுடிகிறது. இதனை வலியுறுத்துவது போலச் சிவஞான முனிவர் கீழ்க்கண்ட பாடலை அமைத்துள்ளார்.

"விண்ண வர்க்கெலா முன்னமுன் னிடத்தே
வேத னைப்படைத் தருளினை யவனுக்
கெண்ணு வேதசாத் திரிபுரா ணங்க
ளெவையு மோதுவித்தனை"

(கலைசை - 35)

பிறமத மறுப்புகளின் மூலம் சிவனின் தனித்தன்மை நிலை நாட்டிய முனிவர் இறைவன் அறிவால் அறியப் படாதவன் என்றும், இப்பொருள் எனச் சுட்டிக் காட்டப்பட முடியாதவன் என்றும், கூறுகிறார் முனிவர்.

"அவனவ ளதுவெதுனு மவைதொறும் விரவினை
யிவனவ னெனவுணர் வரியதொ ரியல்பினை
தவமலி கலைசை யின் மருவிய தகுதியை
சிவனெனு மொழியினை யிவையுன செயலே"

(கலைசை - 82)

இப்பாடல் மூலம் அவன், அவள் அது என அவை மூவினமையின் என்ற மெய்க்கண்டாரின் தொடரைச் சிவஞான முனிவர் நினைவுபடுத்தி இறைமைத் தத்துவங்களை நிலை நாட்டுகிறார். சிவஞான முனிவர் சிவபெருமானின் இயல்புகளை எல்லாம் ஒரு சேரத் தொகுத்துத் தரும் பாடல் இதோ:

"முதலென்ப தின்றி நடுவென்ப தின்றி முடிவென்ப தின்றி முழுதா
யதுவென்ப தின்றி யவனென்ப தின்றி யவளென்ப தின்றி யவையா
யிதுவென் றெவர்க்கு மறியப் படாத வியல்பாகி யுள்ள பொருளா
மதிதங்கு சோலை செறிகோ விருந்த புரமன்னு மெங்கள் சிவனே"

(கலைசை - 64)

உயிர்க்கொள்கை

சைவ சித்தாந்தத்தில் இறைமைக் கொள்கையை அடுத்து இடம் பெறுவது உயிரின் இலக்கணங்களாகிய கொள்கைகளாகும். உயிர் எத்தன்மைத்து எனில் உணர்தல் தன்மைத்து எனச் சேனா வரையர் குறிப்பிடுவார். சைவ சித்தாந்தத் தத்துவத்தின்படி உயிரானது தானே அறிகின்ற ஆற்றலுடையது அல்ல. இறைவன் அறிவிக்கவே அறியக்கூடியது என்பதாகும். இதனைச் சிவஞான முனிவர் பல இடங்களில் குறிப்பிட்டுச் செல்கிறார். அவருடைய குறிப்புகள் அனைத்தும் தன்னை அறிவித்து, என்னை அறிவித்து ஆண்டார் என்ற குறிப்பைத் தருவனவாகும். தான் அறியாமல் இருந்து இறைவனாலேயே அறிந்தேன் என்றும், இறைவனே பாசக்குழியிலிருந்து என்னைக் கடைத்தேற்றி ஆட்கொண்டான் என்றும் குறிப்பிடுகின்றார்.

அத்தகைய பாடல்களில் கீழ்க்கண்ட இளைசைப் பதிற்றந்தாதி பாடல் மிகக் குறிப்பிடத் தக்க பாடலாகும்.

"மாறாக் கருணைச் சிவானந்த வாழ்வை யிந்தா வெனக்காட்டி
யேறாக் குழிநின் றெடுத்தேற்றி யென்போ லுருக்கொண
டெய்திடவுந்" (பா. 26)

அறிவிப்பானும் அறிகின்றதுமாகியும் இருக்கின்ற இறைவனையும், உயிர்களையும், சூரியனும் கண்ணுமாக உருவகித்துக் கூறுகின்ற மரபு சாத்திரங்களின் மரபாகும். இதனைப் பின்பற்றிச் சிவஞான முனிவரும் ஆன்மா கண்போல நின்று இறைவன் சூரியனாக நின்று செயல் நடக்கின்றன என்பதைத் தத்துவ விளக்கமாகக் குறிப்பிடுகின்றார்.

"வலமாய்க் கண்ட கரளவென்றேத்திடின் வல்வினைய
வலமாயக் கண்டகத் தேகுடி கொண்டு மலக்களைய

வலமாயக் கண்டகத் தான்பானு வாநின்று வாழ்வித்திடும்
வலமாயக் கண்டக ரூரெரித் தேகம்பம் வாழ்முதலே"
(பா. 24) (திருவேகம்பரந்தாதி)

பாடலில் ம, ந, ய என்ற மூன்றெழுத்துக்களைக் கொண்டு தத்துவ விளக்கம் தருவது அவரின் தத்துவ வித்தகத் தன்மையைக் காட்டுகிறது.

இறைவன் அறிவிக்க அறியக்கூடிய தன்மை உயிர்களுக்கு ஏற்பட்டுத் தானே அறியக்கூடிய நிலை அல்லாமல் போனதற்குக் காரணம் உயிர்களைப் பற்றி இருக்கின்ற ஆணவமேயாகும். இதனை,

"அன்று தொட்டு இதுநாள் அளவும் ஆணவத்தால்
அறிவிழந்து அழுங்கிய நெஞ்சம்" (பா. 99)

என்று சிவஞான முனிவர் குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார்.

இந்தப் பசு ஞானம் நீங்கினால்தான்தான் இறைவன் அறிவிக்க எண்ணுவான். அப்பொழுதுதான் உயிரும் அறியும் என்பதை,

"தேனு லாம்பொழி விளசையிற் குடிகொண்டு சிறியனேன் பசுஞானக்
கூனை நக்கிவந் தாண்டிட யான்முனைங் குயிற்றிய தவமென்ன"

என்ற இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியின் 78ஆம் பாடல் விளக்குகிறது. இப்பகுதி

"தீதன் அறிவு அதனால் காணும்
தகைமையன் அல்லன் ஈசன்" (சுப. 247)

என்ற சிவஞான சித்தியாரின் அடியொற்றியதாகும்.

இறைவன் பசுஞானம் நீங்கியவர்களுக்கே அறிவிப்பான் என்பதனை,

"அறிவறி யாமை நீத்த வறிவினை யறிந்து வஞ்சம்
பிறிவுறதீ துரியா தீதப் பேரின்ப நிலையி னொன்றாய்" (பா. 46)

என்று குளத்தூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி குறிப்பிடும்.

இப்பகுதி,

"நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்நாதன்
தன்செயல் தானேயென் றுந்தீபற
தன்னையே தந்தானென் றுந்தீபற" (திருவுந் - பா. 6)

என்ற திருவுந்தியாரின் அடியொற்றி எழுந்தது எனலாம்.

இந்த உயிர்கள் ஐம்புல வேடர்களால் மலங்கள் பிணிக்கப் பெற்று அறியாமையைப் பெறுகின்றன. இதனை மெய்கண்டார்,

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே" (8)

எனறு சூத்திரமாக வடித்துக் காட்டுவார்.

இதனை அடியொற்றிச் சிவஞான முனிவரும்,

"பொறியா இயவைம் புலவே டர்களாற்
பிறியா விடர்மூழ் குபுபே துறுவேன்" (இளசை - 36)

என்று குறிப்பிடுவார். இங்கு ஐம்புலவேடர் என்ற சொல்லை மெய்கண்டாரைப் பின்பற்றிச் சிவஞான முனிவர் அமைத்திருப்பது அவரின் முன்னோர் மொழியைப் பொன்னெனப் போற்றும் திறத்தை வெளிப்படுத்துகிறது.

இத்தகைய ஐம்புல வேடர்களிலிருந்து உயிர்கள் விடுதலை பெற இறைவன் அருள்புரிய ஐந்தெழுத்து மந்திரத்தை நாள் தோறும் நாத்தழும்பேறக் கூறிடல் வேண்டும் என்பது உயிர் களுக்குக் கூறப்பெறும் அறிவுரையாகும். அவ்வறிவுரையை ஏற்று நாதன் நாமம் நமச்சிவாயத்தை நாள்தோறும் போற்றிப் பரவியவர் சிவஞான முனிவர். இதை அவரே குறிப்பிடுகின்றார்.

"பதிக்கப் பெற்றே னுளத்தையவன் பாதம் புயத்தி லெஞ்ஞான்றுந்
துதிக்கப் பெற்றே னைந்தெழுத்துஞ் சூழப்பெற்றே னிளசை நகர்"

(பா. 27)

இவ்வாறு நாளெல்லாம் ஐந்தெழுத்தை ஓதியதால் இறைவன் குருவாக வந்து அருள் புரிந்ததை,

"தேற லேனைத் தெருட்டிச் சிவமனுக்
கூறியாளக் குருவுருக் கொண்டவன்" (இளசை - 5)

என்ற பாடற்பகுதியில் குறிப்பிடுகிறார். இப்பகுதி,

"மெய்ஞ்ஞானந் தானேவிளையும்விஞ் ஞானகலர்க்கு
அஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய் - மெய்ஞ்ஞானம்
பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு
முன்னுணர்த்துந் தான் குருவாய் முன்"

என்ற சிவஞான போதத்து 8ஆம் சூத்திரத்தின் உதாரண வெண்பாவை நினைவுபடுத்துகிறது. தன்னைச் சகலராக்கிச் சகலருக்கு இறைவன் குருவடிவாக வருவான் என்பதைச் சிவஞான முனிவர் குறிப்பிடுகிறார். (ஞானம் அறிந்த அவரே சகலர் என்றால் நம்போன்றவர் எவ்வகையைச் சார்ந்தவராக முடியும்)

இவ்வாறு ஐந்தெழுத்தைக் கூறிட, இறைவன் குருவாக எழுந்தருள அருள் கிடைக்க வேண்டும் என்றால் இருவினை

ஒப்பு நிகழ்தல் வேண்டும். இருவினை ஒப்பு நிகழ்கின்ற பொழுதுதான் மலப்பிணி அகலும், இறைவன் திருவருள் கிடைக்கும் என்பது தத்துவ மரபாகும். இதனைக் கீழ்க்கண்ட வாறு சிவஞான முனிவர் வெளிப்படுத்துகிறார்.

"வாய்த்தவினை யொத்துழி மலப்பிணி யவிழ்த்து
மூர்த்திகொடு வந்தருளி முத்திநல நல்கு" (இளசை - 61)

இவ்விருவினை ஒப்பு நிகழ்வதற்காகத்தான் இறைவன் உயிர்களுக்கு உடம்பைப் படைத்தான். உடம்பில் உறுப்பு களையும் அமைத்தான். உறுப்புகள் எக்காரணத்தால் படைக்கப் பெற்றன என்பதனைச் சிவஞான முனிவர் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

"துதிப்பதற்கு வாயமைத்தாய் சூழ்வதற்கு தாளமைத்தாய்
மதிப்பதற்கு மனமமைத்தாய் வணங்குவதற்குத் தலையமைத்தாய்
கதிப்பதற்கு நூலமைத்தாய் கடிக்குளத்தூ ரமந்தறிவி
னுதித்தவுனக் கடியேங் ளுதவுவதென் கைம்மாறே" (பா. 72)

இத்தகைய உறுப்புக்களைக் கொண்டு இறைவன் பணி செய்தால் இவ்இறைவன் உயிர்களின் நெஞ்சங்களைக் கோயிலாகக் கொள்வான் என்பதை இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"அழுதழு தலறி யேங்கி யாங்குழைந் துருகி நெக்குத்
தொழுதெழு மடியா ருள்ளந் தொறுந்தொறுங் கோயில்
கொண்டான்" (பா. 57)

இத்தகைய உடம்புகள் வினையால்தான் இறைவனால் படைக்கப் பெறுகின்றன என்பதைத் திருமுல்லைவாயில் அந்தாதியில்

"படைத்த கருவறுப் பார்க்கு இடம் திருமுல்லைவாயில்" (10)

எனக் குறிப்பிடுகிறார்.

இப்பகுதியில் படைத்த என்பது இறைவனால் படைக்கப் பட்ட என்ற பொருளையும் கரு என்பது உடம்பையும் குறிக் கிறது. இத்தகைய உடம்பு நிலைத்தது அல்ல. நிலையாமை உடையது என்பதை எண்ணி, இறையருள் பெறவேண்டும் என்பதைப் பல இடங்களில் குறிப்பிட்டு உயிர்கள் உடம்பால் நல்வினை செய்து நாதனை அடையும் திறத்தை வெளிப்படுத்துகிறார்.

பாசக் கொள்கை

"தனு, கரண, புவன, போகம்
தற்பரம், பந்தம், வீடு என்று

அணுவினோடு எல்லாம் ஆகி
அடைந்திடும் தத்து வங்கள்
இனிது அறிந்து இவை, நிவிர்த்தி
முதல்கலை இடத்தே நீக்கி
நனிபரம் உணர்ந்தோன் - அந்தத்
தத்துவ ஞானி ஆவான்"

(சித்தியார் - 168)

என்பது சிவஞான சித்தியாரின் திருப்பாடலாகும். இப்பாடல் தத்துவங்களைப் பற்றி அறிவது இன்றியமையாத ஒன்று என்பதை விளக்குகிறது. தத்துவங்களை உணர்ந்து சிறந்தால் தத்துவஞானி எனக் குறிக்கப் பெறுவர். இத்தகைய அளவில் தத்துவங்களை அறிந்த சிவஞான முனிவரும் சிவஞானி என்று அழைக்கப் பெற்றுப் பெருமை பெறுகிறார்.

சிறந்த தத்துவ ஞானியாக விளங்கிய காரணத்தால் தத்துவங்களில் சிறப்பிடம் பெறுகின்ற பாச இயல்புகளைத் தன்னுடைய அந்தாதி நூல்களில் விளக்கிச் சொல்கிறார். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் செயற்பாட்டினை ஆங்காங்கு குறிப்பிட்டுச் செல்கிறார். மும்மலங்களில் மூலமாகிய ஆணவ மலம் இருள்மலம் என்று கூறப்படும்.

"எரித்தான் எனது வல்வினையின் இருள்சேர் பிறவிப் பெருங்காட்டை" என்று இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் 24ஆம் பாடலில் ஆணவ மலத்தை இருள்மலம் என்று குறிக்கிறார்.

இவ் ஆணவமலம் இருள் மலம் என்று மட்டும் குறிக்கப் படாமல்,

"மருவும் ஆணவக் குறும்பு"

என்று குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதி பாடல் 57இல் அவரால் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆணவக் குறும்பு என்ற தொடர் முனிவர் பெருமானின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்ற தொடராகும். குறும்பு என்பதற்குச் சிறுமை என்றொரு பொருள் உண்டு. எனவே ஆணவமாகிய சிறுமையை வேரறுக்க வேண்டும் என்று இப்பாடலில் குறிப்பிடும் பொழுது சிவஞான முனிவரின் புதிய உருவக நிலை புலனாகிறது. இவ்வாறு ஆணவத்தைச் சிறுமையாக உருவகப் படுத்தியது மட்டுமல்லாமல்,

"கரும மலங்கொடு மாயையும் நீக்கி"

என்று திருமுல்லைவாயில் அந்தாதியில் குறிப்பிட்டு ஆணவ மலத்தைச் செயல்மலம் என்றும் சுட்டிச் செல்கிறார். இத்தகைய

ஆணவமலமாம் மூலமலம் உயிர்களை ஆட்டுவிக்கும் திறத்தினைக் கீழ்க்கண்டவாறு சிவஞான முனிவர் குறிப்பிடுகிறார்.

"வல்லாண் மைசெலுத் துமலத் துயராற்
பொல்லா நிலையிற் பொறிகெட் டுழல்வேன்"

(கலைசை - 4)

இப்பகுதியில் ஆணவமலம் உயிர்களை ஆண்டு செயல்களில் செலுத்துகிறது என்று காட்டி உயிர்களின் செயல்களுக்கெல்லாம் காரணம் ஆணவமலம் என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

இவ்வாறு ஆணவ மலமும் உயிர்களை ஆள்வதால் உயிர்களுக்கு அறியாமையே வளர்கிறது என்பதையும் குளத்தூர் பதிற்றுப் பத்தந்தாதியில் கீழ்க்கண்டவாறு குறிக்கிறார்.

"அன்றுதொட் டிதுநா ளளவுமா ணவத்தா
ணறிவிழந் தழுங்கிய நெஞ்சே" (பா. 99)

இதைத்தான் சித்தியாரும்,

"ஆன்மாவின் தன் அறிவொடு தொழிலை யாத்து நின்று" (பா. 170) என்று குறிப்பிடுகிறது. இத்தகைய ஆணவ மலம் எவ்வாறு உயிரோடு கலந்திருக்கிறது என்பதையும் உவமை முகத்தான் சிவஞான முனிவர் விளக்குகிறார்.

"களிம்புதோய் செம்பெனக் கலந்த மாசினிற்
பளிங்கெனக் கிடந்தப் பாவியேன்" (குளத்தூர் - 84)

செம்பினில் களிம்பு எவ்வாறு கலந்திருக்கிறதோ அதுபோல் ஆணவமலம் உயிரோடு இணைந்திருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கிக் காட்டுகிறார்.

இக்கருத்து,

"நெல்லிற் குமியும் திகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி
மலகன்மம் அன்று ளவாம்"

என்ற சிவஞானபோத உதாரண வெண்பாவின் அடிப்படையில் எழுந்தமையாகும்.

இவ்வாறு உயிர்களோடு கலந்திருக்கின்ற ஆணவ மலத்தால் அறிவு மயங்கி உயிர்களுக்கு யான், எனது என்னும் செருக்கை ஏற்படுத்துகிறது. இச் செருக்கை இறைவன்தான் அகற்ற முடியும் என்பதை இளசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார்.

"என்அது யான் எனும் இந்த மயக்கத்தைத்
தன் அருளால் ஒழிக்கும் இளசைக்கோன்" (பா. 50)

இத்தகு செருக்கைத் தரும் ஆணவமலம் தொடர்ந்துவரும் மலமாகும். ஏதோ ஒரு பிறவியில் உயிர்களைப் பிணித்து அப்பிறவியோடு நின்றுவிடுவதல்ல என்பதை,

"தொல்லை வினைத்தொடக்குண்டு சுடுநெருப்பின்"

(கலைசை - 17) என்று முனிவர் குறிப்பிட்டு உணர்த்துகிறார்.

இத்தகைய ஆணவமலத்தைச்செயலறச் செய்திட இறையருள் உயிர்கள் தம்மை ஆட்கொள்ளும் என்பது சித்தாந்த முடிவு, இதனை முனிவர்,

"கொண்டனை யென்னை யுன்னைக் கொடுத்தனை
மலநோய் நீங்கக்
கண்டனை வினைக ளெல்லாம் கழித்தனை யுடலின்பாரம்
விண்டனை பரமானந்தம் விளைத்தனை" (பா. 55)

என்ற கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிட்டு இறைவன் தன்னையளித்து உயிரைத் தன்பாற் கொண்டு அருளுகின்றனன் என்பதைத் தெளிவு படுத்துகிறார்.

இப்பகுதி,

"தந்துஉன் தன்னை கொண்டது என்தன்னைச்
சங்கரா யார் கொலோ சதுரர்"

என்ற திருவாசகப் பகுதியோடு ஒப்பு நோக்கிடத் தக்கதாகும். இவ்வாறு இறைவனால் ஆணவமலத்தின் செயல் அறுக்கப்படும் போது உயிர்களுக்குப் பதிஞானம் ஏற்படுகிறது. அதாவது அறியாமை நீங்கி அறிவு நலம் ஏற்படுகிறது எனச் சித்தாந்தத் தத்துவம் குறிப்பிடும். இதனை,

"என்னையும் உன்னையும் காட்டா தென்னுளே யன்று தொட்டுத்
துன்னிய மலவீ ரத்தின் தொடக்கறுத் தறிவுகாட்டிப்
பன்னருந் துரியா தீதப் பராபர நிலையிற் சேர்த்தாய்" (60)

எனக் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடுகிறார்.

இத்தகைய ஆணவமலத்தை நீக்கி நெஞ்சத்தை வாழுமாறு வேண்டுகின்ற முனிவர் கீழ்க்கண்டவாறு எழுத்து நயத்தோடு பாடி மகிழ்கிறார்.

"சாறுவது தீர்த்த ஒப்பின் பெயர் நீங்கிடச் சார்மனமே" (பா. 27)

என்பது திருவேகம்பர் அந்தாதியின் 27ஆம் பாடலின் கடைசி வரியாகும். இவ்வரியின் பொருள் உகார வகாரங்களாகிய இரண்டு எழுத்துக்களை நீக்க, உவமை என்னும் சொல்லின் ஈற்றுஎழுத்தாகிய மலம் கெட நெஞ்சமே சார்ந்து வாழ்வாயாக என்பதாகும். ஒப்பு

என்பது உவமை என்ற பொருளைத் தரும். அதில் உ, வ, கெட்டால் மை என்ற ஈற்றெழுத்து நிற்கிறது. மை என்பது இருட்டு என்று ஆகி அது இருளைக் குறித்து, அவ் இருள் மலத்தைக் குறிக்கிறது. இவ்வாறு சொற்களைப் பிரித்துப் பொருள் கூறுகிற முறை சிவஞான முனிவரின் நுன்மாண் நுழைபுலத்திற்கு எடுத்துக் காட்டாக அமைகிறது எனலாம்.

ஆணவமலத்தை அடுத்து விளங்கக் கூடிய மலம் கன்ம மலமாகும். இக் கன்ம மலத்தை வினைமலம் என்று தத்துவ நூல்கள் குறிப்பிடுவதுண்டு. அதனை உணர்ந்த சிவஞான முனிவர் கன்ம மலத்தையும் வினைமலம் என்று பல இடங்களில் குறிப்பிடுகிறார்.

"பவனை கன்றலை வற்றநெஞ் சோர்வினைப் பஞ்சுனுக்கின்"

(திருவேகம்பர் - 17)

இப்பாடலின் வினை மலமாகிய கன்மமலம் பஞ்சாக உருவகிக்கப் பெற்றிருக்கிறது.

அதுபோல மாயா மலத்தைச் சிவஞான முனிவர் கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"மனைமக் கள்கடும் புமடந் தையர்பொன்
னெனவிப் படியெய் திமயக் கியிடுந்
தனையொப் புறுமா யைவிலா சமெலாங்
கனவிற் கழியாய் கலைசைக் கிறையே"

(பா. 6)

இவ்வாறு மும்மலங்களைப் பற்றிய செய்திகளைத் தத்துவ நூல்களின் அடிப்படையில் தன் அந்தாதி நூல்களில் வெளிப்படுத்தி எளிமைப்படுத்தித் தருகிறார். இம்மலங்களை எல்லாம் அறுத்து இறைவனுடைய திருவருள் பெறச் சாதனங்களாக அமைவன வழிபட்டு முறைகளாகும். அச்சாதன முறையை நன்னெறியாகச் சிவஞானமுனிவர் குறிப்பிடுகிறார்.

"அழித கும்புலை யடற்பொறை தாங்கிநின் றலைவீர்
கெழுவு நன்னெறி யுமக்கியா னுணர்த்துவன் கேண்மின்
றொழுமி னெம்பிரா னடியிணை யேத்துமின் சூழ்மி
னெழுமின் றென்குளத் தூரினைச் சேருமி னினிதே

(குளத்தூர் - 40)

இத்தகைய நன்னெறியில் நின்று இறைவனை வழிபாடு செய்யின் முத்திப்பேறு அடையலாம், என்றுகூறி அத்துடன் அமையாது அடியார்களையும் அரன் எனக்கொண்டு தொழவேண்டும் என்று

பல இடங்களில் சுட்டிக் காட்டிச் சாதன முறையை நிறைவு படுத்துகிறார்.

அடியார்கள் எத்தகைய பண்புநலம் உடையவராக இருந்தாலும் சிவன் எனும் நாமத்தைச் சொன்னால் அவர்களை வழிபட்டு நற்பேறு அடையலாம் என்பது தேவார ஆசிரியர்கள் கண்ட முடிபாகும். அப்பரடிகள் "ஆ உரித்துத் தின்னும் புலையரேனும் நாம் வணங்கும் தெய்வம் கண்டீர்" என்று குறிப்பிடுவதை இங்கு நினைவு கொள்ளலாம். அத்தகைய நிலையில் சிவஞான முனிவரும், கொடிய சண்டாளர்கள் கூடச் சிவன் எனும் நாமத்தைச் சொன்னால் வணங்கும் நிலைக்கு உரியவர் என்று குறிப்பிடுகிறார். இக்கருத்தை உடைய பாடல்....

"சிவனெனு மொழியைக் கொடியசண் டாளன்
செப்பிடி னவனுட னுறைக
அவனொடு கலந்து பேசுக அவனோ
டருகிருந் துண்ணுக வென்னு
முவமையில் சுருதிப் பொருடனை நம்பா
வூமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தா லையனே கதிவே
றெனக்கிலை கலைசையாண் டகையே"

(பா. 76) (கலைசை)

முடிவுரை

இவ்வாறு மெய்கண்ட தேவரின் அருள் வாக்கினையும் அருணந்தி சிவாசாரியாரின் திருவாக்கினையும் உள்ளம் ஓர்ந்து கற்றதன் பயனாய்ச் சிவஞான முனிவர் தன்னுடைய நூல்களில் முப்பொருள் உண்மைகளையும், அவற்றின் தத்துவ நிலைகளையும் சமுதாயம் அவற்றை உணர்ந்து நிலைபேறடைய முயல வேண்டுவதையும் குறிப்பிட்டு இலக்கிய உலகில் இலக்கியப் புலவராகவும் தத்துவ உலகில் தத்துவ வித்தகராகவும் விளங்கி அனைத்துப் பிரிவினராலும் போற்றப்பெறும் தமிழ் முனிவராக விளங்குகிறார்.

சிவஞான முனிவரின் திருவடி வாழ்க!!

○○○